
வாராந்த சஞ்சிகை
டிசம்பர் 17 – 23 2014
பக்கம் 24
விலை 30/-

# சுடர் ஒளி



# பழிவாங்கும் பேஸ்புக்

SDB உபஹார
ஓய்வு பெற்றவர்களுக்கான கடன் திட்டம்



வாழ்வாதாரமளிக்கும் – உற்சாகமூட்டும் – நிம்மதியான வாழ்க்கை

ரூபா ஒரு மில்லியன் வரையிலான கடனுதவி.*
உத்தரவாதமளிப்பவர்கள் தேவையில்லை.
ஆகக்குறைந்த வட்டி.
ஆகக்குறைந்த தவணைக் கட்டணம்.
மரணத்தின்போது தங்கி வாழ்பவருக்கு நட்டயீடுக் கொடுப்பனவு.*
வங்கியொன்றினால் வழங்கப்படும் அதிகூடிய ஓய்வுக் கடன்.*

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

ஓய்வுபெற்றவர்களான உங்களது விருத்திக்காக வேண்டி ஆகக்குறைந்த வட்டி வீதத்துடன் உங்களுக்கு பெற்றுத்தரப்படும் மாபெரும் வெகுமதி.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
0112 832577

இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions
ஓய்வூதியத் திணைக்களம்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

SDBL
சணச அபிவிருத்தி வங்கி
தேசத்தின் முன்னோடி

Reg. No: PB 62PQ Fitch rating BB+(lka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் ஹியூஸ்... எதிலும் ஹியூஸ்



ஆஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 408 ஆவது வீரராக அணியில் அறிமுகமாகி, பவுன்சர் பந்தால் உயிர் நீத்தவர் ஹியுஸ். ஹியூஸை நினைவுகூரும் விதமாக இந்திய- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் ஹியூஸ் 13 ஆவது வீரராக அணியில் இணைக்கப்பட்டார். அத்துடன் போட்டி நடைபெற்ற அடிலெய்ட் மைதானத்தில் மிகப்பெரிய அளவில் வரையப்பட்டிருந்தது 408 என்ற இலக்கம். இந்த இலக்கத்துக்கு அஞ்சலி செலுத்திய பின்னரே போட்டி ஆரம்பமானது.

63 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதே ஹியூஸ் பவுன்சரால் தாக்குண்டார். எனவே ஆஸ்திரேலிய வீரர்கள் 63 ஓட்டங்களை எடுத்த போதெல்லாம் துடுப்பை மேலுயர்த்தி ஹியூஸை நினைவு கூர்ந்தனர்.

அத்துடன் ஆஸ்திரேலிய அணி 408 ஓட்டங்கள் பெற்றவேளை மைதானத்தில் கூடியிருந்த ரசிகர்கள் கரகோஷங்களுடன் கூச்சல் எழுப்பினர். அதுமட்டுமல்லாது ஆஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித், மைக்கேல் கிளார்க், டேவிட் வோர்னர் ஆகியோர் சதம் அடித்த போது, வானத்தை நோக்கி துடுப்பை உயர்த்தி, மறைந்த இளம் வீரர் பிலிப் ஹியுசுக்கு மரியாதை செலுத்தினர். அதிலும் அணித்தலைவர் கிளார்க் சதம் அடித்த போது அவரது கண்களில் இருந்து கண்ணீர் சொரிந்தது.

இது ஒருபுறமிருக்க இந்திய அணிபதிலுக்குத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது ஆஸ்திரேலியா வீரர் மிட்செல் ஜோன்சன் வீசிய பவுன்சர் பந்து இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லியின் தலைக்கவசத்தை பதம் பார்த்தது. இதனால் அடிலெய்ட் மைதானம் திடீரென அதிர்ச்சியில் அமைதியானது.

இதனால் ஜோன்சன் உட்பட ஆஸ்திரேலிய அணி வீரர்கள் அனைவரும் பதறிப்போயினர். பவுன்சர் பந்து பட்டு பாதிப்பு ஏற்பட்டுவிட்டதா? என்ற அச்சத்துடன் அவர்கள் கோஹ்லியின் அருகில் சென்று நலம் விசாரித்தனர். அப்போது கோஹ்லி ஹெல்மெட்டை தலையில் இருந்து கழற்றி பாதிப்பு இல்லை என்று கூறியபோதுதான் ஆஸ்திரேலியா வீரர்கள் நிம்மதி பெருமூச்சுவிட்டனர்.

# வருகிறார் பொண்டிங்



ஆஸ்திரேலிய அணியின் ஆக்ரோஷமான மற்றும் வெற்றிகரமான அணித்தலைவர் என்று வர்ணிக்கப்படும் ரிக்கி பொண்டிங், மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளமை அந்த அணியை மேலும் வலுவான நிலைக்கு கொண்டுசெல்லும் என்பதில் சந்தேகமில்லை.

காரணம் மற்றைய அணி வீரர்களை மனரீதியாக எப்படிப் பலவீனப்படுத்துவது என்ற வித்தையை மட்டுமல்லாது இன்று பலரையும் அச்சுறுத்தும் பவுன்சர் பந்துகள்ள புல்ஷொட்டாக மாற்றி சிக்ஸருக்கும் பவுண்டரிக்கும் பறக்கவிடுவதை நன்கு தெரிந்தவர்.

ஆனாலும் 6 ஆவது ஐ.பி.எல் தொடரில் மும்பை அணிக்காக பொண்டிங் சிறப்பாக விளையாடிய போதும் திடீரென அணியில் இருந்து விலகி சென்றார். அப்போது கிரிக்கெட் விமர்சகர்களால் பல்வேறுபட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போது தேசிய கிரிக்கெட்டில் கவனம் செலுத்தவே தான் அணியில் இருந்து விலகியதாக பொண்டிங் காரணம் கூறியிருந்தார்.

இந்த நிலையில் மீண்டும் மும்பை அணியுடன் அவரது உறவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த முறை களமிறங்கும் வீரராக இல்லாமல் பயிற்சியாளராக அணிக்குள் வருகிறார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பார்வையற்றோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நடப்புச் சம்பியன் பாகிஸ்தான் அணியினை வீழ்த்தி இந்திய அணி வெற்றி பெற்றிருந்தது.

உலகக்கிண்ணத்தை வென்று நாடு திரும்பும் தேசிய அணியை விமானநிலையத்தில் வரவேற்க விசேட நிகழ்வுகள் நடத்துவது வழமை. அங்கே பெரும் திரளாக ரசிகர்களும் கூடுவார்கள்.

ஏனோ தெரியவில்லை, சாதனை படைத்து தாயகம் திரும்பிய இந்திய அணியை வரவேற்க விமான நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுக்கு மக்கள் கூட்டமும் வரவில்லை. அதிகாரிகளும் கூட பெரியளவில் விழா எடுக்கவில்லை. இதுவே டோனியோ, கோஹ்லியோ வந்திருந்தால் விமான நிலையத்தையே ஸ்தம்பிக்க வைத்திருப்பார்கள் ரசிகர்கள்.

ஆனாலும் இவர்களின் திறமையை மதித்து இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி வீரர்களை தனது அலுவலகத்துக்கு நேரில் வரவழைத்து, ஒவ்வொரு வீரரையும் தனித் தனியாக பார்த்து பாராட்டிப் பேசினார். பின்னர் ஒவ்வொரு வீரருடனும் புகைப்படம்

தொகுப்பு : கோகுலன்



எடுத்து தனது ருவிட்டர் பக்கத்திலும் வாழ்த்துச் செய்தியோடு பதிவு செய்துள்ளார்.

# கண்டுகொள்ளாத ரசிகர்கள்



# ஆடியது வால்

தலையிருக்க வால் ஆடமுடியும் என்பதை நிருப்பித்து காட்டிவிட்டார். இந்திய அணி வீரர் விராட் கோஹ்லி. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்வதற்காக சொந்தப் பணிகளை முடித்துக்கொண்டு ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டார் அணித்தலைவர் டோனி.

இதனால் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதல் முறையாகத் தலைமை தாங்கும் கோஹ்லியின் கனவு தகர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனாலும் டோனி ஓய்வு எடுத்துக் கொண்டதால் இந்திய டெஸ்ட் அணிக்கு முதல் முறையாகத் தலைமை தாங்கினார் கோஹ்லி.

சர்வதேச டெஸ்ட் அரங்கில் முதல் முறையாகத் தலைமை தாங்குகின்ற மகிழ்ச்சியுடன் ஆட்டத்தில் அசத்திய கோஹ்லி , இரண்டு இன்னிங்ஸலும் அடுத்தடுத்து சதங்களைப் பெற்றார். இதன் மூலம் இதுவரை 88 போட்டிகளில் விளையாடி இந்திய அணித்தலைவர் பெற்ற 6 சதங்களை ஓரம்கட்டி, 30 டெஸ்ட் போட்டிகளில் தனது 8 ஆவது சதத்தை பதிவுசெய்தார் கோஹ்லி. இரண்டாவது இன்னிங்ஸில் கோஹ்லியின் ஆவேசமான ஆட்டத்தின் மூலம் ஆஸ்திரேலியா நிர்ணயித்த 364 என்ற ஓட்டங்களை இந்தியா கடந்துவிடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் ஒரு முனையில் கோஹ்லியோடு நின்று பிடித்த முரளி விஜய், 99 ஓட்டங்களில் வெளியேற பின்னால் வந்த வீரர்கள் சொதப்பினர். அதனால் கோஹ்லி இரண்டு சதங்கள் பெற்றும் போட்டியை வெல்ல முடியாமல் ஆஸியிடம் பரிதாபமாகத் தோல்வியடைய நேரிட்டது. இருப்பினும் டோனியை விடவும் தான் மிகச் சிறந்த டெஸ்ட் அணித்தலைவர் என்பதை கோஹ்லி அழுத்தமாகப் பதிவு செய்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பழிவாங்கும் பேஸ்புக்

- சஞ்சலன்

சமூக வலைத்தள மோகம் இன்றைய இளம் சமூகத்திடம் அதிகமாகவே வேரூன்றிவிட்டது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பேஸ்புக், ருவீட்டர், ஸ்கைப், வட்ஸ் அப் என சமூக வலைத்தளங்கள் இல்லாமல் ஒருநாளைக் கழிக்க முடியாதவர்களாக மாறிவிட்டனர். வீட்டில் உள்ளவர்களுடன் கதைக்கா விட்டாலும் கூட இத்தகைய சமூக வலைத்தள நண்பர்களுடன் மணிக்கணக்கில் அரட்டையடிக்கா விட்டால் பலருக்கு நித்திரையே வராது. அந்தளவுக்கு அது எமது சமூகத்திடம் சமூக வலைத்தளம் என்பது ஒரு போதையாகவே மாறிவிட்டது. ஆனால் சமூக வலைத்தளப் பயன்பாடு என்பது தனியே நட்புக்கான விரிவாக்கத்தை மட்டுமல்ல , பல பிரச்சினைகளுக்கான வலைவிரிப்பாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. தமது தனிப்பட்ட வக்கிரங்கள், குரோதங்கள், பழி வாங்கல்கள் என்பவற்றுக்கான தளமாகப் பலரும் பேஸ்புக்கைத் தேர்வு செய்யத் தொடங்கிவிட்டனர்.

இதற்குப் பல காரணங் கள் உண்டு. தாம் பழிவாங்க அல்லது தண்டிக்க நினைக்கும் நபரை நேரடியாகச் சென்று தாக்காது வீட்டில் இருந்தபடியே தான் நினைத்தபடி அவமானப்படுத்தி கூனிக்குறுக வைக்கும் வாய்ப்பு சமூக வலைத்தளங்கள் மூலம் சமூக வலைத்தளங்கள் ஊடாக தனது எதிராளியைப் பழிவாங்கினால் அது குறித்த இருவருக்கும் மட்டுமல்லாது உலகெங்கும் உள்ள சமூக வலைத்தளப் பயனாளர்களுக்கும் பகிரங்கப்படுத்தப்பட்டு விடும். அதுவும் பெரும் இலாபமே. ஒருவன் மீது விரோதம் இருந்தால் அவனைக் கண்டபடி பேசி, இரண்டு அடி கொடுத்தால், அது குறித்த இருவருக்கும் மட்டுமே தெரிந்த விடயமாததால் அப்படியே அமுங்கிப் போய்விடும். ஆனால் சமூக வலைத்தளங்களில் இருவர் முரண்பட்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டால் அவர்களின் நட்புப் பட்டியலில் உள்ள எல்லோரும் பொதுவெளியில் அந்த முரண்பாட்டின் ஆழ அகலங்களைக் காணும் சந்தர்ப்பம் உண்டு. எனவே நேரடியாக ஒருவரைத் தாக்குவதை விடவும் சமூக வலைத்தளங்களில் ஒரு பதிவினை இடுவதன் மூலம் நீடித்த, பரவலான தாக்கத்தை உண்டுபண்ண முடியும்.







கிடைக்கின்றன. பெரும் படை பலம் தேவையில்லை. பிறரின் உதவியோ, ஆலோசனையோ இல்லாமல் காதும் காதும் வைத்தது போல சத்தமின்றிக் காரியத்தைச் சாதித்துவிடலாம். அத்தோடு பேஸ்புக் போன்ற

ஒருவர் தனக்குப் பிடிக்காத நபரைப் பற்றிய பதிவினையோ அல்லது புகைப்படத்தையோ

(20பக்கம் பார்க்க)

## பழிவாங்கல்- 1

வடமராட்சி கட்டைவேலிப் பகுதி. அந்த இடத்தைச் சேர்ந்த இளம் பெண்ணொருவருக்கு பெற்றோர் பல இடங்களிலும் மாப்பிள்ளை பார்த்தார்கள். நீண்ட தேடலுக்குப் பின்னர் பிரான்ஸில் புலம்பெயர்ந்து வசிக்கும் நபர் ஒருவரின் ஜாதகமும், குறித்த பெண்ணின் ஜாதகமும் ஒத்துப்போகவே திருமணப்பேச்சுக்கள் ஆரம்பித்தன. இவ்வாறு திருமணப் பேச்சுகள் முற்றுப் பெறும் நிலையில் பிரான்ஸ் நாட்டு மன்மத மாப்பிளை குறித்த பெண்ணின் தொலைபேசி இலக்கத்தை பெற்று அவருடன் தினமும் உரையாடி வந்திருக்கின்றான். ஆரம்பத்தில் பகல் வேளையில் மட்டுமே நடந்த உரையாடல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, நள்ளிரவு தாண்டி விடியும் வரையும் நடந்தது. ஆயினும் தொடர்ச்சியாக செல்போன் ஊடாக உரையாடிக்கொண்டிருந்தால் பெற்றோர் ஏதாவது நினைக்கக் கூடும் என்பதால், இருவரும் இரவு வேளைகளில் பேஸ்புக் ஊடாகத் தங்கள் தொடர்பாடலைத் தொடர்ந்துள்ளனர். இரவு நேரம், இளமை, தனிமையான அறை என்பன இருவருக்குமிடையிலான உரையாடலை பாலியல் திசை நோக்கி நகர்த்திச் சென்றது. இதன்போது இருவரும் அந்தரங்கமான சில புகைப்படங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். ஒருகட்டத்தில் பிரான்ஸ் மாப்பிள்ளை அன்பு காட்டுவதை விடவும் தன்னுடைய உடலை ரசிப்பதிலும் அந்தரங்கமான புகைப்படங்களைப் பெறுவதிலுமே குறியாக இருப்பதை வடமராட்சியைச் சேர்ந்த அந்தப்பெண் 'இனிமேல் இப்படியான படங்களை அனுப்ப மாட்டேன். இனி எல்லாம் திருமணத்துக்குப் பின்னர்தான்' என்று கொஞ்சம் கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டாள். அவ்வளவுதான். பிரான்ஸ் மாப்பிள்ளை தன் சுயரூபத்தைக் காட்ட வெளிக்கிட்டார். தனக்கு அந்தப் பெண் அனுப்பிய அந்தரங்கமான புகைப்படங்களைப் பகடைக்காயாக்கி ஸ்கைப் வலைத்தளம் மூலம் வீடியோ உரையாடலுக்கு வருமாறு வற்புறுத்தினார். அந்தப் பெண்ணும் 'என்னைக் கட்டப் போகின்றவர்தானே' என்ற தைரியத்திலும், தன்னுடைய அந்தரங்கப் புகைப்படங்கள் பொதுவெளிக்கு வந்துவிடக்கூடாது என்ற அச்சத்திலும் சிலநாள்கள் ஸ்கைப் மூலம் இரவு உடையுடனும், சில சமயங்களில் ஆடையின்றியும் வீடியோ மூலம் உரையாடியிருக்கிறாள். இந்த வீடியோ உரையாடலையும் பிரான்ஸ் மாப்பிள்ளை சாமர்த்தியமாகப் பதிவு செய்து வைத்துள்ளான்.

நாளடைவில் அவனது பாலியல் தொல்லைகள் எல்லை மீறவே 'இனியும் பொறுக்க முடியாது' என்று அந்தப் பெண் பிரான்ஸ் மாப்பிள்ளையின் காமுகலீலைகளைப் பற்றிச் சொல்லிவிட்டாள். இப்படிப்பட்ட ஒருவன் தங்கள் மகளுக்கு மணமகனாக வரத்தேவையில்லை என்று பெற்றோரும் முடிவெடுத்தனர். திருமணப்பேச்சு முறிந்தது. இதன் பின்னர் பிரான்ஸ் மாப்பிள்ளை அந்தப் பெண்ணை பழிவாங்கத்துடித்தான். ஆனால் எப்படிப் பழிவாங்குவது? இலங்கைக்குச் சென்றால் அங்கு தன்னுடைய சுயரூபம் வெளிப்பட்டுவிட்டதால் எவரும் மதிக்க மாட்டார்கள். தனக்கு உதவி செய்யவும் ஒருவரும் வரமாட்டார்கள். எனவே பிரான்ஸில் இருந்தபடியே தனக்குத் திருமணம் பேசப்பட்ட பெண்ணைப் பழிவாங்க அவன் பேஸ்புக்கை ஆயுதமாக்கத் தீர்மானித்தான்.

உடனடியாகவே அந்தப் பெண்ணின் பெயரில் ஒரு போலிப் பேஸ்புக் கணக்கை ஆரம்பித்தான். பின்னர் அந்தப் பெண் தனக்கு அனுப்பிய அந்தரங்கமான புகைப்படங்களையெல்லாம் அதில் தரவேற்றினான். இப்போது அந்தப் புகைப்படங்களைப் பார்ப்பவர்கள் குறித்த பெண் தான் இவ்வாறான புகைப்படங்களைப் பதிவேற்றி இருப்பதாக நம்புவார்கள். எனவே அவளின் மானம் காற்றில் பறக்கும். தலை நிமிர்ந்தே அவளால் நடக்க முடியாது. அவமானத்தில் அவள் தற்கொலை கூடச் செய்யக்கூடும். இதுவே பிரான்ஸ் மாப்பிள்ளையின் திட்டமாக இருந்தது.

நல்லவேளையாக பெண்ணுக்குத் தெரிந்த ஒருவர் குறித்த போலிப் பேஸ்புக் பக்கத்தைப் பார்வையிட நேர்ந்தது. உடனேயே அவர் அந்தப் பெண்ணின் குடும்பத்தினருக்கு விடயத்தைத் தெரிவிக்க, அவர்கள் தங்கள் பெண்ணுடன் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று.

பிரான்ஸ் மாப்பிள்ளையின் திருவிளையாடல்கள் பற்றி முறைப்பாட்டைப் பதிவு செய்தனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணிடம் வாக்குமூலங்களை பெற்றப் பொலிஸார் அதன் அடிப்படையில் பேஸ்புக்கில் இருந்து பெறப்பட்ட படங்களை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு, பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கொன்றைப் பதிவு செய்தனர். அத்துடன் உடனடியாகவே குறித்த போலிப் பேஸ்புக் கணக்கும் பொலிஸாரால் முடக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த பெண் பற்றிய தவறான விடயங்கள் சமூகத்தில் பரவாமல் செய்யப்பட்டது.

தற்போது நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் குறித்த வழக்கை இரகசியக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் பாரப்படுத்தி அதன் மூலமாக இன்ரர்போலின் உதவியுடன் பிரான்ஸிலுள்ள சந்தேக நபரை கைது செய்து இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் கூறுகின்றனர்.

## பழிவாங்கல்-2

அவள் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்தவள். வரணியை சேர்ந்த தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் பணி புரியும் இளைஞனுக்கும் அவளுக்கும் இடையில் மலர்ந்தது காதல். பாலும் தேனும் போல காதலர்கள் இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்துக் கொண்டனர். இன்பமயமான இந்தத் தருணங்களில் தாங்கள் இருவரும் ஒன்றாக இருந்து சில புகைப்படங்களையும் தங்கள் செல்போன்களில் இருவரும் எடுத்துக் கொண்டனர். பழகப் பழகப் பாலும் புளிக்கும் போது, இந்தக் காதல் எத்தனை நாள்தான் புளிக்காமல் இருக்கும்? புளித்தது. இருவரும் பிரிந்தனர். ஆனால் இந்தப் பிரிவு முடிவைப் பெண்ணே எடுத்திருந்தாள். அதனால் வரணி இளைஞனுக்கு கோபம் கொப்பளித்தது. ஏற்கனவே இருவரும் ஒன்றாக இருந்த காலத்தில் எடுத்த புகைப்படங்கள் அவன் நினைவுக்கு வரவே அவற்றையே பழிவாங்கும் கருவியாக்க முனைந்தான். ஏற்கனவே தன்னைக் காதலித்தவளின் பேஸ்புக் பக்கத்தின் கடவுச்சொல் இவனுக்கும் தெரிந்திருந்ததால் பழிவாங்கும் படலம் சுலபமாக முடிந்துவிட்டது.

தாங்கள் இருவரும் ஒன்றாக இருந்த படங்களையும், இன்னும் சில ஆபாசமான படங்களையும் இணைத்து அவளின் பேஸ்புக் கணக்கில் பதிவேற்றிவிட்டான். இந்த விவகாரம் பெரிதாகி, அந்தப் பெண்ணின் வீட்டில் உள்ளோருக்கும் தெரிந்துவிட்டது. உடனடியாகவே அவர்கள் அந்தப்பெண்ணோடு நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிட, வரணியைச் சேர்ந்த குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டு, இப்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகடைக்காய்கள்



**- ஹனி**

ஜனாதிபதித் தேர்தல் களம் நாளுக்கு நாள் பரபரப்புக்களினாலும் சுவாரஷ்யங்களினாலும் நிறைந்து கொண்டிருக்கிறது. தங்களைத் தக்க வைக்கப்பதற்கான போராட்டத்தை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அரசின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

தனியே பரப்புரைக் கூட்டத்தை நடத்தாமல், அரச நிகழ்வுகளையே தனது பரப்புரைக் கூட்டமாக மாற்றி வருகின்றார் மஹிந்த. தனியே அவர் மட்டுமல்லாது அவரின் எடுபிடிகளும், அமைச்சர்களும், அமைப்பாளர்களும் தங்கள் பங்குக்கு மஹிந்தவுக்கு வாக்குச் சேகரிப்பும் பரப்புரைகளில் தீவிரமாக இறங்கிவிட்டனர்.

கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். உண்மையில் இது அரசாங்கத்தால் திட்டமிட்ட முறையில் பல்கலை மாணவர்களிடையே பரப்புரையை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தேர்தல் காலங்களில் அலரி மாளிகை அன்னசாலை ஆவதும், ஆளும் கட்சியின் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சமையற்காரர்கள் ஆவதும் வழக்கமானதுதான் என்று எதிரணியினர் நாடாளுமன்றத்துக்குள்ளேயே நையாண்டி செய்திருக்கின்றனர். அந்தளவுக்கு மஹிந்தவின் வெற்றிக்காகவும், தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் அரசில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் வாலாட்டி தமது விசுவாசத்தை வெளிப்படுத்துவார்கள். (ஆனால் இந்த முறை அதிக விசுவாசம் காட்டினாலும், 'எங்கே இவனும் கட்சி தாவப்போகின்றானோ?' என ஆளுங்கட்சிக்குள்ளேயே தமது உறுப்பினர்களைப் பற்றி சந்தேகம் வந்துவிடுகிறதாம்)

ஒவ்வொரு அரசாங்கமும் தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளைக் குறிவைத்து அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் மக்கள் நலன் சார் நடவடிக்கைகளை முன்னெடுப்பது வழக்கமானது. தேர்தல் விதிகளுக்கு அது முரணான போதும் அவ்வாறான நடவடிக்கைகளை ஆளும் தரப்பினர் என்றைக்கும் கைவிட்டதில்லை. இலங்கையிலும் எந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் இதையே செய்து வந்திருக்கிறது. அதன் தொடர்ச்சி இந்த முறை ஜனாதிபதித் தேர்தலிலும் வெளிப்படவே செய்கின்றது.

தேர்தல் காலங்களில், அரச ஊழியர்களின் வாக்குக்களை வளைப்பதற்காக வேதன உயர்வுகள், பதவியுயர்வுகள் வழங்கப்படுவதும் வழமை. இந்தப்பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக யாழ்.குடாநாட்டிலும் ஒவ்வொரு வாரமும் தொழிற்சங்க ஒன்றுகூடல், இளைஞர் அணி மாநாடு போன்ற பல்வேறு பெயர்களில் அரசின் தேர்தல் பரப்புரை அரங்கேறத் தொடங்கிவிட்டது. இந்தவகையில் இணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் யாழ். மாவட்ட ஒன்றுகூடல் என அரச ஊழியர்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அழைக்கப்பட்டனர்.

வாழ்க்கை படிக் கொடுப்பனவு ரூபா 10000 வரை அதிகரிப்பு. அடிப்படைச் சம்பளத்தை ரூபா 15000 ஆக அதிகரித்தல், தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச ஊழியர்கள் அழைக்கப்பட்டனர். (ஆனால் இவையெல்லாம் நிறைவேற்றப்படவுள்ளதாக 2015க்கான பட்ஜெட்டில் அரசாங்கம் தெரிவித்த பின்னர் எதற்கு மீண்டும் அதே கோரிக்கை என்பதுதான் எவருக்கும் புரியாத புதிர்) போக்குவரத்து துறை, சுகாதார துறை சிற்றூழியர்கள், பெற்றோலியத் துறை போன்ற பல துறைகளைச் சேர்ந்த அரச ஊழியர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாக இருந்தும் பல அரச ஊழியர்கள் இந்த நிகழ்வுக்கு (தமது பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும் என்ற நோக்கில்)சென்றனர்.ஆனால் அங்கே நடந்ததோ வேறு. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் மற்றும் அவரது பரிவாரங்கள் ஜனாதிபதியின் புகழ் பாடவே அந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 'இந்தமுறை ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெற செய்யுங்கள். உங்களது அனைத்து கோரிக்கைகளும் நிறைவேறும்'என்றும் தொடர்ச்சியாகச் சொல்லி அரச ஊழியர்களின் 'மண்டையைக் கழுவும்' முயற்சியே நடந்தது.

நிகழ்வில் உரையாற்றிய யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் கடந்த 10 வருடங்களில் மஹிந்த அரசு எங்கோ இருந்த இலங்கையை எங்கோ கொண்டு சென்றுவிட்டுள்ளதாக தெரிவித்தார். 'வடமாகாண மக்கள் வாக்களிக்காவிட்டாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜப க்ஷ வெல்வார். அவருக்கு தென்பகுதி மக்களின் வாக்குகளே போதும். ஆனால், ஒருவர் எமக்கு நல்ல விடயங்களைச் செய்யும் போது அவர்களை தட்டிக்கொடுப்பதோடு நன்றியும் தெரிவிக்கவும் வேண்டும்' என்று மறைமுகமாக மஹிந்தவுக்கு வாக்களியுங்கள் என்று கேட்டிருந்தார்.

இதைக் கேட்ட அருகிலிருந்த ஊழியர் ஒருவர் 'ஓமோம், எங்கையோ இருந்த மஹிந்த எங்கையோ கொண்டுபோட்டார் தான். அதான் இப்ப ஒரு கிலோ சீனி நூறு ரூபாக்கு வேண்டிறம். இதுதான் அவற்ற அபிவிருத்தி' என அங்கலாய்த்தார். விடுமுறை தினமான ஞாயிற்றுக் கிழமை தொழிற்சங்கங்களின் கூட்டம் என அழைக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டமைக்கும் அரச ஊழியர்கள் தமது விசனத்தைத் வெளியிட்டனர்.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகள் அழைக்கப்பட்டு வீடு வீடாகச் சென்று தேர்தல் பரப்புரை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. கூட்டத்துக்கு வருகை தந்த அனைத்து இளைஞர் யுவதிகளும் 15 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, அவர்களில் ஒருவர் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டு, குழுவிலுள்ள அனைவரும் வீடு வீடாகச் சென்று மஹிந்தவின் அபிவிருத்தி பற்றி விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டத்தினை மேற்கொள்ளவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு வீட்டிலும் உள்ளவர்களையும் சந்தித்து அவர்களுடன் உரையாடி, ஜனாதிபதி இதுவரை மேற்கொண்ட அபிவிருத்திகள் தொடர்பாக எடுத்துரைத்து இந்த முறை ஜனாதிபதி தேர்தலில் மஹிந்தவின் வெற்றியை உறுதி செய்யவேண்டும் என தெரிவிக்கப்பட்டது.வேலை கிடைக்கப்போகிறது என மகிழ்ச்சியாகக் கூட்டத்துக்குச் சென்ற அனைத்து இளைஞர் யுவதிகளுக்கும் தாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் பகடைக்காய்களாகப் பயன்படுத்தவே அங்கு அழைக்கப்பட்டமை தெரிய வந்ததால், அதிருப்திக்குள்ளாகினர்.

இனப்பிரச்சினை,போர் வெற்றி, பட்டதாரிகள் பிரச்சினை ஆகியவற்றைக் கொண்டு இது வரை அரசியல் நடத்திய மஹிந்த அரசு இப்போது அதை வேறு பக்கமாக திருப்ப முனைகின்றது. குறிப்பாகத் தங்களைக் கொடுமையான போர் மூலம் ஒடுக்கியவர் மஹிந்த என்ற படிமம் தமிழர்களிடையே ஆழமாகப் படிந்துள்ளது. எனவே அந்தப் படிமத்தை மாற்றியமைத்து மஹிந்தவே தமிழர் பகுதிகளில் அபிவிருத்திகளை மேற்கொண்ட தலைவர் என்ற விம்பத்தை உருவாக்க அரச தரப்பினர் முனைகின்றனர். அதனாலேயே இப்படி 15 பேர் கொண்ட இளைஞர் குழுவை சுதந்திரக் கட்சியினர் பயன்படுத்தப்போகின்றனர்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின் எந்தவித நியமனங்களோ, சலுகைகளோ வழங்கப்படக் கூடாது என்பது தேர்தல் விதி. ஆனால் சுதந்திரக் கட்சியோ தனக்குள்ள அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி நிரந்தர நியமனம் வழங்குவதாகக் கூறி சிற்றூழியர்களை அழைத்து இத்தகைய பரப்புரைகளை மறைமுகமாகத் திணித்து மக்கள் மத்தியில் தமது கட்சியின் இருப்பை உறுதிப்படுத்த முயல்கிறது.

தேர்தல் என்றவுடன் பல்வேறு செயற்றிட்டங்களை ஒவ்வொரு அரசும் மேற்கொள்ளும். விலைகுறைப்பு, ஜனநாயகத்தை உறுதிப்படுத்தப்படுவது போன்ற தோற்றப்பாடு, பொதுமக்களுக்கு மாடுகள், மரக்கன்றுகள் போன்ற இலவசங்களை வழங்குதல் போன்ற பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுப்பது வழமை. அந்த வகையில் இந்தமுறையும் -கடந்த இரண்டு மாதங்களில் -இரு தடவைகள் சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. எனினும் இவை என்ன நோக்கத்துக்காக மேற்கொள்ளப்படுகின்றன என்பது மக்களுக்குத் தெளிவாகத் தெரியும்.


இனிப் போர் வெற்றியைக் காட்டி வாக்குகளை அள்ளும் வேலை எடுபடாது எனத் தெரிந்துகொண்டதாலேயே அரசு மக்களின் வாக்குகளை வளைக்க இத்தகைய மாற்று வழிமுறைகளைக் கையாளுகிறது.

தேர்தல்கள் நெருங்கும்போது வாக்காளர்களைத் தெய்வமாக மதிப்பதும் தேர்தல் முடிந்ததும் அவர்களைத் துச்சமாக நினைப்பதும் எல்லா அரசியல்வாதிகளுக்கும் கைவந்த கலைதான். அந்த யுக்தியில் கைதேர்ந்தவரான மஹிந்த, தனது அரச இயந்திரத் துணையுடன் நடத்தும் பகடையாட்டத்தில் வெல்வாரா? இல்லையா? என்பதை அடுத்த மாதம் தெரிந்து கொண்டுவிடலாம்.

**இனப்பிரச்சினை,போர் வெற்றி, பட்டதாரிகள் பிரச்சினை ஆகியவற்றைக் கொண்டு இதுவரை அரசியல் நடத்திய மஹிந்த அரசு இப்போது அதை வேறு பக்கமாக திருப்ப முனைகின்றது. குறிப்பாகத் தங்களைக் கொடுமையான போர் மூலம் ஒடுக்கியவர் மஹிந்த என்ற படிமம் தமிழர்களிடையே ஆழமாகப் படிந்துள்ளது. எனவே அந்தப் படிமத்தை மாற்றியமைத்து மஹிந்தவே தமிழர் பகுதிகளில் அபிவிருத்திகளை மேற்கொண்ட தலைவர் என்ற விம்பத்தை உருவாக்க அரச தரப்பினர் முனைகின்றனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிதாபத்துக்குரிய பவ்ரல்

● அக்கினிகுமரன்

> இப்படியாகப் பல முனைகளிலும் அழுத்தங்கள் கொடுக்கப்படும் போது பொலிஸார் எதிரணி யினரின் சுவரொட்டிகளையும், பதாகைகளையும் மட்டும் அகற்றி விட்டு, இவ்வாறான சுவ ரொட்டிகள், பதாகைகளைப் பாதிக்கு மேல் அகற்றி விட்டதாகவும் மிகுதியை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அறிக்கை விட்டாலும் ஆச்சரியப்பட முடியாது.

ஒரு ஜனநாயக நாட்டில் நீதிச் சேவை ஆணைக்குழு, பொலிஸ்ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு என்பன சுதந்திரமாகவும், பக்கசார்பின்மையாகவும் செயற் படுவதே வழமை. இதன் ஆணையாளர்களோ, ஆணைக்குழு உறுப்பினர்களோ சேவை மூப்பு அடிப்படையில் நியமிக்கப் படும்போது அவற்றின் சுதந்திரமும், நடு நிலை மையும் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் இலங்கையில் மேற்கண்ட நியமனங்கள் ஜனாதிபதியாலேயே மேற்கொள்ளப்படும் நிலையில் அவற்றின் சுதந்திர மும் பாது காப்பின்மையும் பாதிக்கப்படுகின்றன. அவை அரசியல் மயப்படுத்தப்படுவதை தவிர்க்க முடியாத நிலை ஏற்ப டுகின் றது.

இலங்கையில் இந்த அமைப்புகளின் அதிகாரங்கள் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் சிக்குப்பட்டு அவை தமது தனித்துவத்தை இழந்து நிற்கின்றன. குறிப்பாக இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தை எல்லா விதங்களிலும் நியாயப்படுத்தும் ஒரு அமைப்பாகவே செயற்பட்டு வருகின்றது. இந்த வகையில் சில விடயங்களில் தனக்கு அதிகாரம் மட்டுப்படுத்தப் பட்டுள் ளது என் பதை தேர்தல் ஆணையாளரும் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கிறார்.

பவ்ரல் அமைப்பு ஒரு சட்டபூர்வமான அரச அமைப்பாக இல்லாதபோதும் நியாயமான, நேர்மையான தேர்லை நடத்தும் நோக்கு டன் தேர்தல் ஆணையாளருடன் இணைந்து தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் ஒரு பொது அமைப்பாகும். இது நேரடியாகத் தேர்தல் முறைகேடுகளைத் தடுக்க முடியாவிட்டாலும், கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு அவை தொடர்பான அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றது. தேர்தல் நடவடிக்கைகளில் அதிகார மட்டங்களின் முறைகேடுகள் சம்பந்தமான தகவல் களை யும் இது சமர்ப்பிக்கின்றது.

இந்த நிலையில் கடந்தவாரம் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி விடுத்த கருத்து மிக மிக முக்கியமானதாகும். அந்த அறிக்கையில் இதுவரை- அதாவது வேட்பு மனுத் தாக்கல் செய்யப் படும் வரையில் 40 தேர்தல் முறை கேடுகள் இடம்பெற்றதாகவும், அவற்றில் 24 சம்பவங்கள் தேர்தல் வன்முறைகள் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் இப்படியான வன்முறைகள் தொடர்பாக பொலிஸார் நடந்து கொள்ளும் விதம் திருப்தியளிக்கும் வகையில் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச கூட்டணியில் இருந்து விலகி எதிரணியில் இணைந்து கொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுசைன் பாருக்கின் வாகனம் கொழும்பில் வைத்து தாக்கப்பட்டது. அதன் போது வாகனச் சாரதி காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண கருத்து வெளியிடுகையில், அந்தத் தாக்குதல் சம்பவம் அரசியல் ரீதியானது அல்ல எனவும் தனிப்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே இடம்பெற்றது எனவும் தெரிவித்துள்ளார். இதுவரை இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப் படவோ, இனங்காணப்படவோ இல்லாத நிலையில் இது தனிப்பட்ட குரோதம் காரணமாக இடம்பெற்றது என்பதை எப்படிப் பொலிஸார் கண்டு பிடித்தார்கள் என்பதை தான் எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

இது மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சியினர் மீதும் பொது வேட்டபாளர்களுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் மேலும் தொடர்ந்து பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின் றன. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக இரு பிரதேச சபை உறுப்பினர்கள் கூட கைது செய்யப்பட்டனர். ஆனால் அவர் கள் பிணையில் வந்து மீண்டும் புதிய வேகத்துடன் வன்முறைகளில் ஈடுபடக்கூடும் என்றே எதிர்பார்க்கப்படு கின்றது.

அதாவது, அரச தரப்பினரால் மேற்கொள் ளப்படும் வன்முறைகள் தொடர்பாக பொலிஸார் கண்டும் காணாமல் நடந்து கொள்வர். தவிர்க்க முடியாமல் அப்படியான நபர்கள் கைது செய்யப்பட வேண்டிய நிலை எழும் போது அவர்களைப் பொலிஸார் மிகவும் மென்மையாகவே கையாண்டு பிணையில் வெளிவரும் சூழலை ஏற்படுத்தி விடுவர். இப்படியான ஒரு நிலையில்தான் பவ்ரல் அமைப்பு பொலிஸாரின் நடவடிக்கை கள் திருப்திகரமாக இல்லை எனப் பகிரங்கரமாக வே குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால், பொலிஸ்பேச்சாளர் அஜித்ரோஹணவோ, 'எமது பொலிசார் ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிக்கவர்கள் .அவர்கள் சட்டப்படியே பணியாற்றுகிறார்கள்' எனவும் ஒரே வசனத்தில் கூறி விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவார்.

அதேவேளையில் இன்னுமொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே'யின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக் கோன் தெரிவித்த கருத்துக்களை அலட்சியம் செய்து விடமுடியாது. இதுவரை 63 தேர்தல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவற்றில் 9 முறைப்பாடுகள் துப்பாக்கிப் பிரயோகங்கள் சம்பந்தப்பட்டவையெனவும் எனினும் இதுவரை 2 சம்பவங்கள் தொடர்பாகவே சிலர் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு பல நாள்கள் கடந்துவிட்ட நிலையிலும் கொழும்பில் உள்ள தேர்தல் சுவரொட்டிகள், பதாகைகள், கட்- அவுட்டுகள் என்பவற்றை அகற்றப் பொலிஸார் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர் குற்றஞ் சாட்டியு ள்ளார். இவை அகற்றப்படாவிட்டால் அது தொடர்பாக கொழும்பு மாநகரசபை மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் எச்சரிக்கை விடுத்துள் ளது.

இப்படியாகப் பலமுனைகளிலும் அழுத்தங்கள் கொடுக்கப்படும் போது பொலிஸார் எதிரணியினரின் சுவரொட்டிகளையும், பதாகைகளை யும் மட்டும் அகற்றிவிட்டு, இவ்வாறான சுவரொட்டிகள், பதாகைகளைப் பாதிக்கு மேல் அகற்றி விட்டதாகவும் மிகுதியை அகற்ற நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அறிக்கை விட்டாலும் ஆச்சரியப்பட முடியாது.

அதே வேளையில் தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு இதுவரை 9 தேர்தல் வன்முறைகள் மட்டுமே இடம்பெற்றதாகவும் அதில் 2 மட்டுமே பாரதூரமானவை எனவும் தெரிவித்துள்ளது.

இதிலிருந்து பவ்ரல், கபே போன்ற அமைப்புக்களின் குற்றச்சாட்டுகளை எப்படி அரச தரப்பு மூடி மறைக்க முயல்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். பொலிஸ் உட்பட முழு அரச பரிவாரங்களும் மஹிந்தவைத் தேர்தலில் வெற்றி பெற வைக்க எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்பது இப்போது தெரியவர ஆரம்பித்து விட்டது.

பவ்ரல், கபே போன்ற அமைப்புகள் அறிக்கைகளைத்தயாரித்துதேர்தல்ஆணையாளரிடம்ஒப்படைத்து விட்டு இருக்கும் பரிதாப நிலையிலேயே உள்ளன. அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் படுவது என்பது வெறும் கண்துடைப்பு மட்டுமே.

ஊவா மாகாணசபைத் தேர்தல் முதற் கொண்டு இலங்கையில் இடம்பெற்ற தேர்தல்களில் எவ்வளவு கடுமையான முறைப்பாடுகள் முன்வைக்கப் பட்டாலும் அவை தேர்தல் முடிவு களில் எந்த விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. இதுவே இலங்கையில் தேர்தல் வரலாறு. எனவே பவ்ரல், கபே போன்ற சுயாதீனமான தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அறிக் கை சமர்ப்பித்து விட்டு எந்த வித பயனையும் எதிர்பாராமல் ஒதுங்கவேண்டிய பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

தேர்தல் முறைகேடுகள் மட்டும் அரச இயந்திரத்தின் உதவியுடன் தாராளமாகவே இடம் பெறும். பல சமயங்களில் அவையே வெற்றியைத் தீர்மானிக்கும் சக்திமிக்கவை யாகவும் மாறிவிடுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

*வாராந்த சஞ்சிகை*

sudarolijaffna@gmail.com

*361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*தொலைபேசி: 021 567 7609*


## இன்னுமொரு சண்டித்தனத் தம்பி

**கடந்த வாரம் நீண்ட இழுபறிக்குப் பின்னர் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அடிதடியுடன் 'இனிதே' நிறைவுற்றுள்ளது. வழமையாகவே ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டங்களில் அனல் பறக்கும் விவாதங்கள் நடப்ப துண்டு. நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடுவதாகவும், அரசாங்கம் மக்களுக்கு எல்லாவிதமான அபிவிருத்தி களையும் செய்துவருவதாகவும் ஆளுந்தரப்பு அறிக்கையிடு வதுண்டு. ஆனால் உண்மையில் மக்கள் எத்தகைய துன்பத் துக்குள் வாழ்கிறார்கள், அவர்களுடைய இருப்புக்கு இராணு வம் எவ்வளவு தூரம் இடையூறாக இருக்கிறது, எத்தனையா யிரம் மக்கள் இன்னமும் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடி யாமல் தவிக்கிறார்கள், காணாமல்போன பல்லாயிரக் கணக் கானோரின் பெயர் விபரங்கள் போன்றவற்றை இந்த அபிவிருத் திக் கூட்டங்களில் கூட்டமைப்பு முன்வைத்து அரசின் அபிவிருத் திச் சீத்துவத்தை தோலுரிப்பதுண்டு. இதனால் ஆளுந்தரப் புக்கு எரிச்சலேற்பட்டு கூட்டமைப்போடு காரசாரமான வார்த்தைப் போரில் ஈடுபடும். இதனால் பெரும்பாலான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் வாய்த்தர்க்கங்களோடு எந்தவித முடிவும் எட்டப்படாமலேயே நிறைவு பெற்றிருந்தன. ஆனால் இம் முறை ஆளுந்தரப்பினர் ஒருபடி மேலேபோய் தண்ணீர்ப் போத்தல்களை வீசியடித்து வடமாகாண அமைச்சர் ஒருவருக்கு காயம் ஏற்படுத்தும் அளவுக்கு தங்களுடைய 'வீரத்தை' காட்டியுள்ளனர்.**

**இதற்கு முன்னரும் ஒருமுறை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஒன்றில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை நோக்கி தண்ணீர்ப் போத்தல் வீச்சு இடம்பெற்றி ருந்தது. ஆனால் அப்போது அவருக்கு இரத்தக் காயம் ஏற் பட்டிருக்கவில்லை. அதனால்தானோ என்னவோ இம்முறை வடமாகாண அமைச்சருக்கு குருதி பெருகும் அளவுக்கு குறி வைத்துத் தாக்கியிருக்கிறார்கள். மக்களின் அபிவிருத்தி தொடர்பான இத்தகைய உயர்மட்டக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் மீது இத்தகைய காட்டு மிராண்டித்தனமான தாக்குதலை பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரரும் அவரது சகபாடிகளுமே நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. எப்படி இலங்கை ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிரானவர்களை அதட்டி, உருட்டி, விரட்டி ஒடுக்குவதற்கு சண்டித்தனத் தம்பியான கோத்தபாய இருக்கிறாரோ, அதேபோல தனக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பவர்களை ஒடுக்குவதற்கும் ஒரு சண்டித்தனத்தம்பி இருப்பதை அமைச்சர் டக்ளஸ் இதன் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்.**

**ஈ.பி.டி.பி. ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அகிம்சை வழிக்கு திரும்பிய கட்சி என்றே அடிக்கடி அமைச்சர் டக்ளஸ் சொல்லிவருகிறார். ஆனால் போர் முடிவுறும்வரை அந்தக் கட்சி அரசின் துணை இராணுவக் குழுவாக இயங்கியது என்பதை நல்லிணக்க ஆணைக்குழு, ஜனாதிபதி ஆணைக்குழு என்பவற்றின் முன்னால் மக்கள் பகிரங்கப்படுத்தியிருக் கிறார்கள்.**

**போருக்குப் பின்னரும்கூட அமைச்சர் சொல்வதைப் போல் அவருடைய கட்சி அகிம்சை வழிக்குத் திரும்புவதில் அக்கறை கொள்ளவில்லை. இதனையே குடாநாட்டில் ஈ.பி.டி.பியால் நடத்தப்பட்ட பல்வேறு வன்முறை சம்பவங்கள் எடுத்துக் காட்டியிருந்தன. இந்த வன்முறைகளின் உச்சக் கட்டமாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக வும், வடமாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவராகவும் இருந்த கமலேந்திரன் தனது கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தரும், நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவருமான றெக்ஸியனைச் சுட்டுக் கொன்றிருந்தார்.**

**தங்கள் கட்சியில் உள்ளவர்களையே ஆயுத முனையில் அடக்க நினைப்பவர்களைத்தான் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா அகிம்சை வாதிகள் என்று சொல்லிவந்தார் போலும். எனவே தான் 'தன்னுடைய' அகிம்சை அகராதியின் இன்னொரு பரிணாமத்தை தன் தம்பியின் துணையோடு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் நடத்திக் காட்டியிருக்கிறார்.**

**என்னதான் சண்டித்தனம் செய்தாலும் அவையெல்லாம் மக்களின் எழுச்சிக்கு முன்னால் தூசாகப் போய்விடும் என்ற உண்மை அமைச்சருக்கு விரைவில் உறைக்கத்தான் போகிறது.**

## கற்றுக் கொள்ள மறுத்தல்

**- அனுஷ்கன்**

இளைஞர்களின் எழுச்சி உலக வரலாறுகளையே புரட்டி போட்ட சம்பவங்கள் வரலாற்று பக்கங்களில் நிறையவே இடம்பிடித்திருக்கின்றன. உலகில் விடுதலை தேடி நடத்தப்பட்ட அனைத்துப் போராட்டங்களும் துணிச்சல் மிகுந்த இளைஞர்களினால் நடத்தப்பட்டு அதிகாரத்தின் இரும்புக்கரங்களை தகர்த்து எறிந்திருக்கின்றன. தமிழீழ விடுதலை போராட்டமும் அத்தகைய துணிச்சல் மிகுந்த இளைஞர்களின் தியாகத்தினாலேயே கட்டமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஜனநாயக வழியில் பயணித்த உரிமைப்போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக மாற்றி உலகின் கண்களை இலங்கை நோக்கி திருப்பி வைத்த பெருமை தமிழ் இளைஞர்களையே சாரும். அமைதி வழியிலான போராட்டங்கள் ஆயுதக்



கரம் கொண்டு நசுக்கப்பட்ட சூழலிலேயே போராட்டத்தை நாங்கள் சுமக்கிறோம் என்று தம் இளமைக் கனவுகளைத் துறந்து ஆயுதம் தாங்கி போராடி, உலகமே வியக்கும் வகையில் முப்படைகளையும் கொண்ட மரபு வழி இராணுவமாக மாறிக் காட்டியவர்கள் தமிழ் இளைஞர்கள்.

ஆரம்பத்தில் ஒரு சிறிய குழுவாக ஒன்று கூடிய இளைஞர்களே பின்னர் பேரினப்படைகளின் நித்திரையை முப்பது வருடமாக குழப்பி வந்தனர்.எனவே ஆளும் வர்க்கம் இளைஞர்களின் ஒரு சிறிய ஒன்றுகூடுதலைக் கூட எப்போதுமே அனுமதிப்பதேயில்லை.இதன் ஒரு அங்கமே மாவீரர் வாரம் தொடங்கியவுடன் பல்கலைக்கழகத்தை இராணுவம் முற்றுகையிடுவதன் மர்மம். இப்படியான ஒன்றுகூடல்களை எப்பாடு பட்டாவது தடுத்து அதனை முளையிலேயே கிள்ளி எறிவதில் ஆர்வத்தை காட்டுகின்றனர் ஆட்சியாளர்கள்.இத்தகைய ஒன்றிணைதல்களை அனுமதித்தால் அது மெல்ல மெல்லப் பரவலடைந்து தனது அடக்குமுறை விலங்கு உடைத்துவிடும் என்பதே ஆட்சியாளர்களின் அச்சத்துக்குக் காரணம். ஆனால் அதையெல்லாம் தகர்த்து தமது உரிமைக் கோரிக்கைகளை உலகின் முன்னால் முழக்கமிடுவது இளைஞர்களுக்கு எப்போதுமே பிடித்தமானது. பல்கலையில் தீபம் ஏற்றி அஞ்சலித்தலில் தொடங்கி வீரசிங்கம் மண்டப உரிமை முழக்கம் வரை இதையே நிரூபிக்கின்றன.

டிசெம்பர் 10 சர்வதேச மனித உரிமைகள் தினம். சர்வதேச மட்டத்தில் மிகவும் முக்கியமான இந்தத் தினத்தில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஒன்று கூடிய இளைஞர்கள் உரிமை பிரகடனத்தை வெளியிட்டு அதிகாரத்துக்கு அதிர்ச்சியை பரிசளித்திருக்கின்றனர். இந்தக் கூட்டத்தைத் தடுக்க அரசு பல்வேறு பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டிருந்தது . தமிழர் பகுதியெங்கும் 30 வருடங்களாக நீடித்த போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, அங்கு சிவில் ஆட்சி நிலவுவதாகக் கூறும் அரசு இப்படி இளைஞர் ஒன்றுகூடல் நிகழ்வைத் தடுக்க தன்னுடைய படைகளை ஏவியிருக்கிறது. இதன் மூலம் உண்மையில் தமிழர் பகுதிகளில் இராணுவ ஆட்சியே இடம்பெறுகின்றது என்பதை மீண்டுமொருமுறை இலங்கை அரசு நிரூபித்திருக்கின்றது.

இலங்கை அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள மனித உரிமைகள் பற்றிய சரத்தின்படி எந்தவொரு பிரஜையும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்காமல் அமைதியான முறையில் ஒன்றுகூடி தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், அரசுக்கு எதிராக குரல் எழுப்பவும் பூரண உரித்துடையவர்கள் என்று சொல்லப்படிருக்கிறது. ஆனால் யாழில் இளைஞர்களின் நிகழ்வை தடுக்க இராணுவம் முயற்சி எடுத்ததன் மூலம் இலங்கை அரசுக்கும் மனித உரிமைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதையும், தமிழ் மக்களுக்குரிய சிவில் நிர்வாக ஆட்சியை வழங்க ஒரு போதும் பேரினம் உடன்படாது என்பதையும் மனித உரிமை தினத்திலேயே ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

குறித்த கூட்டம் தொடங்க முதலே அதனைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளில் அதிகாரத்தரப்பினர் ஈடுபட்டிருந்தனர் என ஏற்பாட்டாளர்கள் கூட்டம் நடந்த போதே வெளிப்படுத்தியிருந்தனர். குறிப்பாக இந்த நிகழ்வை நடத்த வேண்டாம் என முதல் நாளே அரச புலனாய்வாளர்கள் எச்சரித்திருந்தனர்.இந்த எச்சரிக்கை ஏற்பாட்டாளர்களுக்கு மட்டும் விடுக்கப்படவில்லை. மாறாகஅந்த நிகழ்வில் கலந்து கொள்ள இருந்த இளைஞர், யுவதிகளுக்கும் முதல் நாளே தொலைபேசியூடாக அரச புலனாய்வாளர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் அழைப்புகளை மேற்கொண்டுள்ளனர். 'இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம்' என்று அந்தத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டவர்கள் கடுமையான தொனியில் எச்சரித்துள்ளனர். அத்துடன் மன்னாரில் இருந்து வாகனத்தில் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவென வந்தவர்கள் பூநகரியில் வழி மறிக்கப்பட்டு வேண்டுமென்றே தாமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன் நிகழ்வு இடம்பெறும் இடத்துக்கு முதல் நாள் சென்ற இராணுவத்தினர் நிகழ்வு ஏற்பாட்டு வேலைகளை குழப்பும் வகையில் நடந்து கொண்டுள்ளனர். இதன்போதும் அவர்கள் இளைஞர் கூடலை நடத்த வேண்டாம் என மிரட்டியுள்ளனர்.

'நாளைக்கு என்ன பேசபோகின்றீர்கள்?'

'என்ன செய்யப் போகின்றீர்கள்?'

என்றெல்லாம் ஏற்பாட்டாளர்களிடம் துருவித் துருவிக் கேள்விகளும் கேட்கப்பட்டுள்ளன. இவ்வளவு அடக்கு முறைகளும் மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச தினத்திலேயே நடந்து முடிந்திருக்கின்றன. ஆனாலும் இத்தகைய அச்சுறுத்தல்களையெல்லாம் தாண்டி

**(22 ஆம் பக்கம் பார்க்க)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டத் தகாத கூட்டமைப்பு

- ஆசாத்

**சமூகத்தில் எவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டு விட்ட போதிலும் சிங்கள அரசியல்வாதிகள் புதிய வடிவத்தில் ஒரு தீண்டாமையை உருவாக்கி சிங்கள மக்களை நிரந்தரமாகவே ஒரு இனவெறி மனப் பான்மையில் வைத்துத் தங்கள் அரசியல் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.**



இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தீண்டாமை என்பது நிலமானிய சமூகக் கட்டமைப்பின் ஒரு பிரிக்க முடியாத அம்சமாகவே கடந்த காலங்களில் நிலவி வந்தது. ஆனால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தீண்டாமைக்கெதிரான போராட்டங்களும் நவீன சமூக மாற்றம் காரணமாக மானிய சமூக அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட தாக்கமும் தீண்டாமையை மெல்ல மெல்ல மழுங்கடித்து தீண்டாமை இல்லாத உலகு நோக்கிப் பயணப்பட வைத்துள்ளன.

சமூகத்தில் எவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டு விட்ட போதிலும் சிங்கள அரசியல்வாதிகள் புதிய வடிவத்தில் ஒரு தீண்டாமையை உருவாக்கி சிங்கள மக்களை நிரந்தரமாகவே ஒரு இனவெறி மனப்பான்மையில் வைத்துத் தங்கள் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரைப் பிரிவினைவாதிகள் எனவும் சித்தரிப்பதன் மூலம் சிங்கள மக்களிடையே நாடு பிளவுபட்டு விடும் என அச்சமூட்டி தமது அரசியல் பிழைப்பை நடத்தி வருகின்றனர்.

தமிழரசுக் கட்சியைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பண்டா-செல்வா உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டமையையும் ஐக்கிய தேசியக் கட்சி டட்லி- செல்வா உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டமையையும் அவர்கள் தேவை கருதி மறந்து விடுகின்றனர். அதே வேளையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் மஹிந்த ராஜபக் ஷ அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

ஆனால் இவர்கள் காலத்துக்குக் காலம் தேவைகள் கருதி விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பிரிவினைவாதிகளாகவும் சித்தரித்து சிங்கள மக்களிடம் இயல்பாக உள்ள தேசப்பற்றை தமிழ் மக்களுக்கு எதிரான இனவெறியாக மாற்றி அரசியல் நடத்தி வருகின்றனர்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி அதன் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா பொது எதிரணி வேட்பாளருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே ஒரு இரகசிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதை ஒரு பெரும் குற்றம் போலவே சுட்டிக் காட்டியுள்ளார்.

அதே வேளையில் பொதுவேட்பாளர் சிறிசேனவும் தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்தியதாகவும் அப்படியான ஒப்பந்தம் எதையும் செய்யவில்லை எனவும், தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்பே இனப்பிரச்சினை தொடர்பிலான பேச்சுக்கள் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினை என்பது கடந்த 60 ஆண்டுகளாகப் புரையோடிப் போனது மட்டுமன்றி ஒரு போருக்கே காரணமாயிருந்திருக்கிறது. அதைத் தீர்க்கும் முகமாக பல பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட போதும் இன்று வரை அதற்கான நியாய பூர்வமான தீர்வு எட்டப்பட வில்லை. அதன் காரணமாகவே இந்த நாட்டில் நிலையான சமாதானமும், இனங்களுக்கிடையேயான நல்லிணக்கமும் உருவாக முடியாத நிலை தொடர்கிறது.

இப்படியான நிலையில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களோ, அமைப்புக்களோ, இனப்பிரச்சினை இன்னமும் கொழுந்து விட்டெரியும் பிரச்சினை என்ற அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதும், சில இணக்கப்பாடுகளுக்கு வருவதும் ஒரு முக்கிய தேவையாகும்.

தமிழ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற ஒரே அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றரீதியில் அதனுடன் பேச்சுக்களை நடத்துவதோ உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதோதான் ஒரு நியாயமான நடவடிக்கையாகும்.

ஆனால் அது ஒரு பெரும் குற்றம் என்ற வகையில் அரச தரப்பு எதிரணியைச் சாடவும், பதிலுக்கு எதிரணியும் நாம் அப்படிச் செய்யவில்லை என மறுதலிப்பதுமான ஒரு நிலையே நிலவுகிறது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் பேச்சுக்களை நடத்துவதோ, இணக்கப்பாட்டுக்கு வருவதோ ஒரு தேச விரோதக் குற்றம் என்ற வகையிலேயே இரு தரப்பினரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய பொதுச்செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தாங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைக் கோரப் போவதில்லையெனவும், தமக்கு ஆதரவளிக்கும் பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் உண்டு எனவும் தெரிவித்து விட்டார். அதே வேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு புலம் பெயர் தமிழர்களுடன் இணைந்து அரசாங்கத்தை மாற்றும் மேற்குலக சதியின் முகவர்களாகவே செயற்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

பொது எதிரணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை இணைத்தாலோ அல்லது ஒப்பந்தங்களை மேற்கொண்டாலோ எதிரணி மேற்குலகுடன் சேர்த்து நாட்டைப் பிரிக்கும் சதியில் ஈடுபடுகின்றது என்ற

**தமிழரசுக் கட்சியைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பண்டா-செல்வா உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டமையையும் ஐக்கிய தேசியக் கட்சி டட்லி- செல்வா உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டமையையும் அவர்கள் தேவை கருதி மறந்து விடுகின்றனர். அதே வேளையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் மஹிந்த ராஜபக் ஷ அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.**

பரப்புரையை அரச தரப்பு பெரும் அளவில் கட்டவிழ்த்து விடும். எனவே எதிரணியினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டுத் தூரவே விலகி நிற்க வேண்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது ஆதரவு யாருக்கு என்பதை இன்னமும் வெளிப்படுத்தவில்லை.

எப்படியிருப்பினும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களையும் பொறுத்த வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீண்டத்தகாத கட்சிதான். எதிரணியினர் அப்படி ஒரு நிலை எடுப்பதற்கு அரசாங்கத் தரப்பு மேற்கொள்ளக் கூடிய இனவாதப் பரப்புரை பற்றிய பயம் தான் காரணம் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

எப்படியிருப்பினும் இந்த முறை இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பு பேரம் பேசும் நிலையில் இல்லை என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் மஹிந்த ராஜபக் ஷ சகோதரர்களின் கொடிய சர்வதிகார ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்பதில் தமிழ் மக்களிடம் இரு வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை. போரின் பின்பும் தொடரும் தமிழ் மக்கள் மீதான கொடிய ஒடுக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டுமானால் இந்த ஆட்சி மாற்றப்பட வேண்டும்.

ஆனால் எமது உரிமைகளை நாம் எமது ஐக்கியத்தின் மூலமும் உறுதியான போராட்டங்கள் மூலமும் மட்டுமே வென்றெடுக்க முடியும்.

தீண்டத்தகாதவர்கள் தீயாக மாறும் போது சகல ஒடுக்கு முறைகளும் எரிந்து சாம்பலாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொனிஸ் மூட்டிய காட்டுத்தீ



**- கானா பிரபா**

மார்ட்டின் பிளேஸ் (Martin Place) சிட்னியின் பெரு நகரப் பகுதியின் மையத்தில் உள்ள இடம். இந்தப் பகுதியில் தான் ஒடுக்கப்படும் சமூகங்களைச் சேர்ந்தோர் தம் கவன ஈர்ப்பு நிகழ்வுகளையும், தீபாவளி விழா போன்ற களியாட்டங்களையும் நிகழ்த்தும் நகரச் சதுக்கமும் அமைந்துள்ளது.

இங்கேயுள்ள லிண்ட் கபேயில் (Lindt Cafe) இல் காலை 9.30 அளவில் ஹரோன் மொனிஸ் என்ற இஸ்லாமிய அடிப்படைவாதியால் 17 பேர் சிறைப்பிடிக்கப்படுகிறார்கள்.

காலையில் சிட்னியில் இருந்து உலகமெங்கும் காட்டுத் தீயாகப் பரவிய இந்தச்செய்தியில் ஆரம்பத்தில் 50 பேர் பணயக்கைதிகள் எனவும் இரண்டு தீவிரவாதிகள் முன்னெடுத்த சம்பவம் எனவும் சொல்லப்பட்டது.

ஹரோன் மொனிஸ் 1996 ஆம் ஆண்டில் ஈரானில் இருந்து ஆஸி நாட்டுக்கு அரசியல் தஞ்சக்கோரிக்கையில் அகதியாக அங்கீகரிக்கப்பட்டவன். ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் போரிட்டு மாண்ட ஆஸி வீரர்களின் குடும்பங்களுக்கு அவதூறுக் கடிதங்களை அனுப்பி வைத்தது, தனது முன்னாள் மனைவியைக் கொன்றது மற்றும் பாலியல் குற்றச்சாட்டுகள் உட்பட 50 வழக்குகளை எதிர்கொண்டவன்.

லிண்ட் கபேயில் சிறைப்பிடித்தவர்களை வைத்துக் கொண்டு அல்லா ஒருவரே கடவுள் என்ற தகவலைப் பரப்புவதும் ஆஸி அரசுக்கு மிரட்டல் விடுவதுமே இவனின் முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தது.

காலையில் இருந்து மார்ட்டின் பிளேஸ் பகுதியிலுள்ள அலுவலகங்கள், கடைகள் மூடப்பட்டு பணியாளர்கள், பொதுமக்கள் அவ்விடத்தை விட்டு அகற்றப்பட்டு பஸ், ரயில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டு பொலிசாரின் முற்றுகையில் இந்தக் களம் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டது.

ஹரோன் மொனிஸ் தன்னுடைய முதல் நடவடிக்கையாக, தன்னால் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை வைத்து அல்லா ஒருவரே கடவுள் என்ற துணியைக் கடையின் உட்புறக்கண்ணாடியில் வைத்துக் காட்டச் சொன்னான்.

அடுத்ததாக தன் பணயக் கைதிகளை வைத்து 2GB என்ற வானொலிக்கும், தொலைக்காட்சிக்கும் தொலைபேசியில் அழைக்கச் சொல்லித் தன்னுடைய கொள்கை விளக்கத்தை எடுத்துச் சொல்லச் சொன்னான். ஆனால் வானொலி நிலையத்தில் அப்போது கடமையில் இருந்த வானொலியாளரும், தொலைக்காட்சி நிறுவனமும் இந்த மாதிரியான தீவிரவாதச் செய்கைகளைப் பரப்ப முடியாது என்று நேரலையில் வருவதைத் தடுத்து விட்டார்கள். இது மிகவும் சமயோசிதமான நடவடிக்கை ஆகும்.

இருப்பினும் பணயக்கைதிகள் சிலர் தமது பேஸ்புக் கணக்கினூடாக இந்த அனர்த்தம் குறித்த செய்தியை உள்ளிருந்து பகிர்ந்தார்கள்.

மாலையை அண்மித்த வேளை லிண்ட் கபே பணியாளர்கள் உட்பட ஐந்து பேர் இந்தப் பணயப் பிடியில் இருந்து தப்பி ஓடிப் பொலிசாரிடம் அடைக்கலம் புகுந்தார்கள்.

இந்தக் கோடை காலப்பகுதியில் சிட்னியில் இருளில் மூழ்க இரவு எட்டு மணியாகும். அந்தச் சமயம் பொலிஸார் லிண்ட் கபேயின் மின் விளக்குகளை அணைத்து விட்டு அடுத்த



நடவடிக்கைக்காகக் காத்திருந்தனர்.

அதிகாலை இரண்டு மணியளவில் பொலிசாரின் அடுத்த நடவடிக்கை துப்பாக்கிப் பிரயோகத்தோடு முன்னேற்றமடைந்தது. இந்த நடவடிக்கையில் ஹரோன் மொனிஸ் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டான்

பிடிபட்ட 17 பணயக் கைதிகளில் லிண்ட் கபேயின் களஞ்சியக் காப்பாளராகக் கடமையாற்றிய தோரி ஜோன்சன் (வயது 34) என்ற இளைஞரும், கத்ரீனா டோவ்சன் (வயது 38) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரான வழக்கறிஞரும் பரிதாபமாக மாண்டிருக்கிறார்கள்.

ஐந்து பேர் காயப்பட்டு தீவிர சிகிச்சைக்குப் பின்னர் பாதுகாப்பான நிலைக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

இந்த நடவடிக்கையில் 39 வயதான பொலீஸ் அதிகாரியும் காயம்பட்டு பாதுகாப்பான நிலையில் சிகிச்சையில் இருக்கிறார்.

அதிகாலை 2.10 மணியோடு முற்றுகை நிறைவுக்கு வந்தது.

வழக்கமாக டிசெம்பர் மாதம் என்றால் சிட்னி நகரம் உள்ளடங்கிய நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கடும் வெப்ப விளைவால் எழும் காட்டுத்தீ தான் முக்கிய பிரச்சினையாக இருக்கும். பலர் உடமைகளை இழந்தும், உயிர் இழப்போடும் இந்த இயற்கை/செயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்வர்.

இந்த ஆண்டின் டிசெம்பர் மாதம் அவ்வாறானதொரு சவால் இல்லாது இதுவரை மழையும், குளிருமாகப் பயணிக்க, கடந்த திங்கள் நிகழ்ந்த சம்பவம் இன்னொரு துயர் மிகு டிசெம்பர் என்ற அத்தியாயத்தை ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

வெள்ளையினத்தவர் மட்டும் என்ற தீவிரக் கொள்கை மறைந்து பல்லினக் கலாசார நாடு என்று கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் இயங்கும் ஆஸ்திரேலிய நாட்டின் சட்ட திட்டங்களில்

எதிர்கால அகதிக் கொள்கை, மத அடிப்படையிலான செயற்பாடுகள் குறித்த பார்வை இன்னும் மோசமாக மாற்றமடைய இந்தச் சம்பவம் காட்டுத்தீ அல்லாவிடினும் ஒரு சிறு நெருப்பாக அமைந்து விட்டது என்பதை மறுப்பதற்கில்லை.

---

**- கோகுலன்**

# நடக்குமா? நடக்காதா?



ஈராக் அன்ட் சிரியா என்ற ஆங்கில வார்த்தையின் சுருக்கமான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் ஆஸ்திரேலியாவில் காலடிவைத்துள்ளமை மேற்குலக நாடுகளை அச்சத்தின் விளிம்பில் நிறுத்தியுள்ளது

2003 ஆம் ஆண்டு அமெரிக்கா, ஈராக் மீது படையெடுத்தபோது சில அரபு நாட்டினர் சேர்ந்து இந்தப் படையை உருவாக்கியிருந்தார்கள். அந்தக் காலத்தில் பெயரளவிலேயே செயற்பட்டு வந்த இந்த அமைப்பினர் சிரியப் போருக்கு பின்னர் சிறிது சிறிதாகத் தமது படையில் பொதுமக்களை போராளிகளாக இணைத்து

ஈராக்கையும், சிரியாவின் ஒரு பகுதி மற்றும் துருக்கியின் ஒரு பகுதி ஆகியவற்றையும் இணைத்து தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கவேண்டும் என்ற கனவோடு போராடிவரும் இஸ்லாமிக் ஸ்டேட் ஒப்

தற்போது மிகப்பெரியளவில் 11 ஆயிரம் போராளிகளை கொண்ட அமைப்பாக மாறியுள்ளனர். அதில் 6 ஆயிரம் பேர் ஈராக்கில் போரிட்டு வருகிறார்கள். 5 ஆயிரம் பேர் சிரியப்போரில் ஈடுபட்டு உள்ளனர்.

இவர்களுக்கு எதிராக ஈராக், சிரியாவுடன் இணைந்து அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற மேற்குலக நாடுகள் போரிட்டுவருகின்றன. அவ்வாறான சூழ்நிலையில் இந்த அமைப்பினரால் மேற்குலக நாடுகளின் ஊடகவியலாளர்கள், தன்னார்வத் தொண்டுப் பணியாளர்கள் என கைதுசெய்யப்பட்டு கழுத்து வெட்டப்படுவதும் தொடர்ந்தவண்ணம் உள்ளது.

இந்த நிலையில் தான் கடந்த திங்கட்கிழமை வேலைக்கு செல்லும் பொதுமக்கள் காலை உணவுக்காக ஆஸ்திரேலியாவின் சிட்னி பகுதியில் உள்ள தேநீர் விடுதி ஒன்றில் கூடியிருந்தனர். அந்த வேளை அங்கு புகுந்த ஒரு நபர் 50க்கும் மேற்பட்ட

(15 ஆம்பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலூட்டி வளர்த்த கிளி

**- ஊழியான்**

மக்கள் பணத்தை கொள்ளையடித்த ராஜபக்ஷ ரெஜிமண்ட் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க முடியாது.ஜனவரி 8 ஆம் திகதி இரவு 11 மணிக்கு பின்பாக கட்டுநாயக்க விமான நிலையம் மூடப்படும். இது பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்து.

இந்தக் கருத்தை அரசுக்கு வெளியே இருந்த ஐக்கிய தேசியக் கட்சியே அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ சொல்லவில்ல. மாறாக இதுவரை காலமும் மஹிந்தவின் கூட்டணியிலிருந்த ஒருவர் கூறியிருக்கும் கருத்து.

மைத்திரிபாலவும் மஹிந்தவும் இதுவரை காலமும் ஒரே மேடைகளில் நின்று எதிர்க் கட்சிகள் தொடர்பாகவும் நாடு தொடர்பாகவும் கடும் இனவாதக் கருத்துக்களை கக்கி வந்தவர்கள். அப்படிப்பட்ட ஒருவரே இந்த குற்றச்சாட்டுக்களை இப்பொது முன்வைத்துள்ளார்.

தன்னுடைய உள்வீட்டு இரகசியங்கள் யாவும் தெரிந்த மைத்திரி,எதிரணியின் பக்கம் சென்றது மகிந்தவுக்கு பாரிய இழப்பாக தான் இருக்கின்றது. அவருக்கு பதிலீடாக மஹிந்த தன் பக்கம் இழுத்துக் கொண்ட திஸ்ஸ அத்தநாயக்க, மைத்திரிபால சிறிசேனாவுக்கு நிகரான ஒருவர் இல்லை.

ஏனென்றால் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரே திஸ்ஸ. அவருக்கு தனது சொந்த ஊரிலேயே அவ்வளவு செல்வாக்கு இல்லை. அப்படிப்பட்ட ஒருவரையே மைத்திரிக்கு பதிலாக தன் பக்கம் சேர்த்துக் கொண்டு விட்டதாக மஹிந்த வெளியில் புளுகினாலும் உண்மை அதுவல்ல என்பது அவருக்கும் நன்கு தெரியும்.

அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை வைக்க முடியாது.

இரவு 12 மணி வரை என்னுடன் இருந்து அப்பம் உண்டவர். என்னிடம் கூறாமலேயே மறுநாள் காலையில் எதிரணிப் பக்கம் மாறி எனக்கு எதிராகக் களமிறங்கினார். இவரை நம்பி எவ்வாறு நாட்டை பொறுப்புக் கொடுப்பது? என்று கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார் மஹிந்த.

கட்சி மாறியதால் மைத்திரையை நம்பவேண்டாம் எனக்கூறும் மகிந்த ராஜபக்ஷ ஒரு தேநீரைக் கொடுத்தவுடன் தன் பக்கம் ஓடிவந்துவிட்ட திஸ்ஸ அத்தநாயக்கவை நம்பி சுகாதார அமைச்சுப் பதவி கொடுத்துள்ளமை ஒரு முரண்நகைதான். அப்பம் சாப்பிட்டவரை நம்பி நாட்டை ஒப்படைக்க முடியாது என்றால் தேநீர் குடித்தவரை நம்பி எப்படி அமைச்சுப்பதவியைக் கொடுப்பது என்ற கேள்வி எல்லோருக்கும் எழவே செய்கிறது.

> **மக்கள் பணத்தை கொள்ளையடித்த ராஜபக்ஷ ரெஜிமண்ட் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க முடியாது.ஜனவரி 8 ஆம் திகதி இரவு 11 மணிக்கு பின்பாக கட்டுநாயக்க விமான நிலையம் மூடப்படும்.**

இந்த நிலையில்தான் ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடனேயே எவரும் தப்பித்துச் செல்ல முடியாதபடி, கட்டுநாயக்க விமான நிலையத்தை இழுத்து மூடப்போவதாகச் சொல்லி மஹிந்த சகோதரர்களின் ஆத்திரத்தை இன்னும் கிளறி இருக்கிறார் பொதுவேட்பாளர் மைத்திரி.

இவருடைய கருத்து பழைய கால பாடல் ஒன்றை இரைமீட்க வைக்கின்றது.

"பாலூட்டி வளர்த்த கிளி
பழம் கொடுத்து பார்த்த கிளி..." என்ற பாடலே அது.

இதுநாள் வரையும் மஹிந்த ஊட்டி ஊட்டி வளர்த்த கிளி இப்போது அவரையே கொத்துவது போல அமைந்துள்ளது.இந்தக் கருத்து மஹிந்த ராஜபக் ஷவுக்கும் மைத்திரிக்கும் இடையிலான மோதல் உக்கிரம் அடைந்துள்ளதையே காட்டுகிறது.

இதுவரை இடம்பெற்ற தேர்தல்கள் போல் இலங்கை தீவில் இந்தமுறை இடம்பெறப் போகும் ஜனாதிபதித்தேர்தல் சர்வசாதாரணமானது அல்ல.

ஆளுகின்ற மஹிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்தால் என்ன, பொதுவேட்பாளரான மைத்திரி தோல்வி அடைந்தால் என்ன , தோல்வியடைபவர்கள் தம் வாழ்வின் அதிவீழ்ச்சிக் காலத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக் ஷ வெற்றி பெற்றால், அவரின் ஆட்சி இன்னும் 8 வருடங்கள் நீடிக்கப் போகிறது. இதனைப் பெரும்பான்மையான மக்களும் விரும்பவில்லை. இதன் காரணமாகத் தான் மைத்திரி உள்ளிட்ட குழுவினர் பொது எதிரணியின் பக்கம் தாவினர். ஆனால் அப்படித் தாவியும் மைத்திரி வெற்றி அடையவில்லை என்றால் சரத்பொன்சேகாவுக்கு ஏற்பட நிலைமை தான் மைத்திரிக்கும் அவரைப் பின்னின்று இயக்கும் சந்திரிகாவுக்கும் ஏற்படும் என்பது உலகறிந்த இரகசியம்.

இதனை கருத்திற் கொண்டு தான் பொது எதிரணியின் பரப்புரை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இதுவரை பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரும் சிறுபான்மை மக்களின் ஆதரவைக் கோரவில்லை.

ஏனெனில் எல்லோரும் கூறுவதை போல இந்தமுறை சிறுபான்மை மக்களின் வாக்குகள் தேர்தல் முடிவைத் தீர்மானிக்கப் போவதில்லை. அவ்வாறு முடிவைத் தீர்மானிக்கும் வல்லமை சிறுபான்மையினரின் வாக்குகளுக்கு இருந்தால் நிச்சயமாக ஜனாதிபதி வேட்பாளர்கள் சிறுபான்மை மக்களின் ஆதரவை கோரியிருப்பார்கள்.

இந்தமுறையும் பௌத்த சிங்கள மக்களே ஜனாதிபதி ஒருவரை தீர்மானிக்க போகின்றார்கள். அதனால் தான் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இதுவரை எந்த வேட்பாளர்களும் எந்தவிதமான கருத்துக்களையும் தெரிவிக்காமல் இனவாத கருத்துக்களை மட்டுமே வெளியிட்டு வருகின்றனர்.


ராமன் வந்தாலென்ன, ராவணன் வந்தாலென்ன எங்கள் பிரச்சினை தீரவா போகின்றது என்பது மட்டுமே தமிழ் மக்களின் எண்ணமாக இருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்ம சொப்பனம்



டான் ஏஞ்சல் ரஷ் காஸ்ம்ரோ ஓர் ஏழை விவசாயியின் மகன். ஸ்பெயினிலுள்ள கால்சியா எனும் பகுதி யைச் சேர்ந்தவர். வலி மையான உடல் வாகு, இரும்பு போன்ற தே கம். ஆறடி அங்குல உயரம். முரட்டுத் தன மான தாடி, மீசை.

கொலம்பஸ் முதல் முதலாக க்யூபா வில் காலடி எடுத்து வைத்த போது க்யூபா ஒரு ரம்மியமான கனவுப் பிர தேசமாக அவருக்குக் காட்சியளித்தது. ஓங்கி வளர்ந்த மரங்கள் இனிமையாக இசைக்கும் குயில்கள். பூத்துக் குலுங்கும் மலர்கள். மலைப்பிரதேசங்கள். இது வரை இப்படி ஓர் அழகை அவர் தரிசித்தது கிடையாது. தான் மட்டுமல்ல, இந்த உலகமே இப்படி ஓர் அழகிய பகுதியை இது வரை கண்டிருக்க முடியாது என்று அவர் நம்பினார். நிச்சயம் இது ஓர் அதிசயத் தீவாகத் தான் இருக்க வேண்டும் என்று தனது குறிப்பேட்டில் குறித்து வைத்துக் கொண்டார். க்யூபாவின் ஒவ்வொரு பகுதியையும் சுற்றி சுற்றி வந்து கண்களை விரித்து அதிசயித்தார். இது நடந்தது ஒக்டோபர் 28,1492 ஆம் ஆண்டில்.

டான் ஏஞ்சில் ரஷ் காஸ்ம்ரோ ஓர்ஏழை விவசாயியின் மகன். ஸ்பெயினிலுள்ள கால்சியா எனும் பகுதியைச் சேர்ந்தவர். வலிமையான உடல்வாகு, இரும்பு போன்ற தேகம். ஆறடி அங்குல உயரம். முரட்டுத் தனமான தாடி, மீசை. ஏஞ்சலுக்கு க்யூபாவுடலான முதல் நேரடிப் பரிச்சயம் 1895 இல் ஏற்பட்டது. ஆனால் இவர் சந்தித்த க்யூபா, கொலம்பஸ் சந்தித்த க்யூபாவுக்கு முற்றிலும் நேர் எதிராகக் காட்சியளித்தது. வயல்வெளிப் பக்கம் குயில் கூவிக்கொண்டிருக்கவில்லை. துப்பாக்கிகள் வெடித்துக் கொண்டிருந்தன. எந்தப் பக்கம் திரும்பினாலும் ஓயாத வெடிச்சத்தம் தான். க்யூபர்கள் தெருக்களில் இறங்கிப் போராடிக் கொண்டிருந்தனர்.

ஏஞ்சல் ஒரு சுற்றுலாப் பயணி அல்ல. சுற்றிப் பார்ப்பதற்காகவோ ஓய்வெடுத்துக் கொள்வதற்கோ அவர் க்யூபா செல்லவில்லை. அவர் ஒரு சிப்பாய். கையில் துப்பாக்கியை ஏந்திப் போரிடவே அவர் ஸ்பெயின் அரசாங்கத்தால் க்யூபாவுக்கு அனுப்பப்பட்டி ருந்தார். அவனைச் சுடு. அவன் உனக்கு எதிரி என்றால் சுட்டு விட வேண்டும். அவன் யார், எதற்காக அவனைச் சுட வேண்டும் போன்ற கேள்விகளைக் கேட்கக் கூடாது என்று ஸ்பெயின் சுட்டிக் காட்டியது அதன் அப்போதைய காலனிகளுள் ஒன்றான க்யூபாவை க்யூபர்களை துப்பாக்கியைச் சுமந்து கொண்டு படைகளோடு ஓடினார் ஏஞ்சல்.

ஸ்பெயினைப் பொறுத்தவரை க்யூபா ஓர் அத்தியவசியமான காலனி. ஸ்பெயினின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்திக் கொண்டிருந்த தூண். என்ன இயற்கை! என்ன வளம்! கொழித்துக் கொண்டிருந்த பூமி அது. ஆனால் சமீபமாக க்யூபாவில் ஸ்பெயினுக்கு எதிரான போராட்டங்கள் மிகுதியாக வெடித்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு முறையும் கிளர்ச்சி ஏற்படும் போது க்யூபர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கிக் கொண்டிருந்தது ஸ்பெயின். இந்த முறையும் க்யூபர்கள் வழக்கம் போல ஒடுக்கப்பட்டனர். எல்லாம் முடிந்தது. கலகக்காரர்கள் சிதறியோடினர். ஏஞ்சலுக்கு கொடுக்கப்பட்ட பணி நிறைவேறிவிட்டது. ஏஞ்சல் மீண்டும் ஸ்பெயின் திரும்பினார்.

நியாயப்படி பார்த்தால் க்யூபாவுக்கும் அவருக்குமான உறவு அன்றே முறிந்திருக்க வேண்டும். ஆனால், ஏஞ்சலுக்குக் கொடுக்கப்பட்ட பணி நிறைவேறிவிட்டது. ஏஞ்சல் மீண்டும் ஸ்பெயின் திரும்பினார். ஆனால் ஏஞ்சலால் க்யூபாவை மறக்க முடியவில்லை. மீண்டும் க்யூபாவுக்குத் திரும்ப வேண்டும் என்பதே அவருடைய கனவாக இருந்தது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 651

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | 9 | | | |
| 10 | | 11 | ■ | 12 | | | ■ |
| | ■ | 13 | 14 | | ■ | 15 | 16 |
| 17 | 18 | | | ■ | 19 | | |
| ■ | 20 | | | 21 | | ■ | |
| 22 | | ■ | 23 | | ■ | 24 | |
| 25 | | | | ■ | 26 | | |

**மேலிருந்து கீழ்**

1-ஒரு விசேட சட்ட வகை.
2-அட்ட மங்கலத்தில் ஒன்று.
3-தலைவன்.
4-மணமான பெண்ணின் பெயருக்கு முன்னால் வருவது.
5-நீங்குதல்.
6-போதை தருவது.
9- அறிவு.
11-பூமி.
14- ஒரு நிகழ்வு.
16- குழப்பத்தால் வரும் சஞ்சலம்.
18- ஒரு நிறுவனத்தையோ அமைப்பையோ உருவாக்கியவர்.
19- எமது.
21- மன்மதன் காதலி.
22- அப்பாவி.
24. எந்த நேரமும்.

**இடமிருந்து வலம்**

1-காலனித்துவ காலத்தில் முடியாட்சியின் பிரதிநிதி
5-உள்.
7-ஒரேயளவான.
8-இலக்குமி.
10-கணித பாடத்தில் வரையப்படுவது.
12-சுவர்.
13-வாய்ப்பான ஏற்பாடு.
15-இணங்க.
17-விளையாடும் இடம்.
19-கூடாதது அல்ல.
20- சிறுவர்கள் விளையாடுவது.
20-இறக்க.
23. வாழ்.
24. கூட்டல் குறியீடு.
25. துயர்.
26. ஈராக்கை நிர்வகித்தவர்.

அனுப்புபவர் பெயர்:------------------------------------

விலாசம்:------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

போட்டி இல. 651

■ சொற்சிலம்பம் போட்டி 651ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, ஜனவரி 07ஆம் மற்றும் ஜனவரி 14ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபா லட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 648இல் பரிசு பெற்றோர்

1. அ.ர. விஜயசிறி, வேலணை கிழக்கு-04, வேலணை.
2. ந. இம்மானுவேல், இல 85/4 கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
3. கா.பொ. இ.குலசிங்கம், 5ஆம் வட்டாரம், நயினாதீவு.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609

### பாராட்டுப் பெறுவோர்

- **கே. இராஜகோபால்**, அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.
- **இ.செல்லம்மா**, மே/பா-வே. இராசநாயகம், சோறன்பற்று, பளை.
- **வ.ஆ.அதிரூபசிங்கம்**, அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.
- **சி. கிஷ்ணவேள்**, வசந்தபவனம், மருதடி மேற்கு, சாவகச்சேரி.
- **கரவை சி.இராசரத்தினம்**, பூம்பொழில், திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

### சொற்சிலம்பம் போட்டி 649இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.ஊக்குவி
2.வசித்தல்
3.சித்தம்
4.கரை
5.வினாவிடை
7.தில்
9.விவாகம்
10.பாகம்
12.சணல்
14.பிரம்பு
15.நான்கு
16.விலா
17.குருவி
18.முளை
19.மேல்

**இடமிருந்து வலம்**

1.ஊர்வசி
4.கருவி
6.சித்திரை
8.குவித்தல்
10.பாவி
11.விவாதம்
12.சகடை
13.கல்
14.பிணம்
15.நாம்
16.விரல்
18.முலாம்
19.மேரு
20.குவளை
21.புதல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அமைதிக்குள் விழுங்கப்பட்ட ஆளுமைகள்

**--தொகுப்பு- சமரன்**

தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில் இரண்டு முக்கிய ஆளுமைகள் போர்கள் அற்ற காலத்தில் அதிகாரத்தால் காவு கொள்ளப்பட்டன. அதுவும் 14 வருட இடைவெளியில் ஒரே நாளில் இந்த இரண்டு விடுதலை நட்சத்திரங்களையும் பேய்கள் தின்றன. ஆனாலும் அதிகாரத்தால் புதைக்கப்பட்ட இந்த இரு நாயகர்களும் விதைகளாகி, போராட்டத்தின் ஓர்மத்தை இன்னும் அதிகமாக அறுவடை செய்தார்கள்.

இந்த இரண்டு விதைப்புகளும் நடந்தேறியது இரண்டு விதமான பத்தாண்டுகளில், இருவேறு நூற்றாண்டுகளில், ஒன்று இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் (1987). மற்றது 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (2001).

சங்கர் அண்ணா, திலீபன் இருவருமே தியாகத்தின் இரு உச்சங்கள். ஓய்வற்ற போராட்டத்தின் இரு உறுதி மலைகள்... அவர்களின் வாழ்வும் மரணமும் ஆயிரம் பாடங்களை எமக்குச் சொல்லித் தந்தபடியே காலகாலத்துக்கும் தொடர்ந்துவரும்... இரண்டு வீரர்களிலும் இருந்தது விடுதலைக்கான முறைமைகளை, வழிகளை, அதனை எவ்வாறு பெருமக்களின் அணிதிரட்டலுடன் முன் நகர்த்தலாம் என்பதையே எந்த நேரமும் சிந்தித்ததே அவர்களிடம் இருந்த ஒற்றுமை.

அதிலும் திலீபனை எடுத்துக் கொண்டால் அவனது மிகமுக்கியமான பலமே விடுதலைப் போராட்டத்தின் மீதும்,அதனை அடைவதற்கான பாதை தொடர்பாகவும்,அதனை வழிநடத்தும் தலைமை மீதும் முழுமையான தெளிவும் நம்பிக்கையுடனும் இருந்ததே.

எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் குழப்பமடைந்ததோ அசதி அடைந்ததோ கிடையாது..

இரண்டாவதாக, திலீபனுக்கு முன்பாக ஒரு பெரும் கடமையை அவனது ஆதர்சத் தளபதியும் அவனுக்கு மிகவும் பிரியமானவருமான கிட்டு காட்டிவிட்டிருந்தார்.

களமாடுவதிலும், தாக்குதல்களில் முதன்நிலை தாக்கு நிலையில் நிலை கொண்டு நிற்பவனாக இருந்து போராடுவதே திலீபனுக்கு மிகமிக விருப்பமாக இருந்தாலும் காலத்தின் தேவை அவனை வேறு ஒரு நிலைக்கு மாற்றியது.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்



கண்விடல் என்றுணர்ந்த தலைமை திலீபனிடம் அரசியல் பொறுப்பை ஒப்படைத்தபோது அவன் முழும்னதுடனேயே ஏற்றுக்கொண்டான்.

இங்கே ஒரு பாடம் நம் எல்லோருக்கும்...20 வயதை சற்று தாண்டிய அந்த பருவத்தில் களமாடுவதும்,சக போராளிகளுடன் இணைந்து நிலைகொண்டு தாக்குதலுக்காக நிற்பதும் எத்துணை எழுச்சியையும், வீர உணர்வையும் தரும் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த வயதில் எல்லோரும் அதனையே விரும்புவதும் இயல்பானதுதான்.

ஆனாலும் நான் எதனை விரும்புகிறேன் என்பதும் இங்கு விடுதலைப் போராட்டத்தில் முக்கியம் அல்ல. விடுதலைப் போராட்டமும், அதன் தலைமையும் எதனை ஒப்படைக்கிறார்களோ அதுவே வரலாற்றின் கடமை என்றுணர்ந்து அதற்காகவே முழுமையான உழைப்பையும் தேவை ஏற்படின் அந்தத் துறைக்காகவே மரணிக்கவும்கூட தயாராக இருத்தலே அந்தப் பாடம்.

(இதனையே கிட்டு எனக்கு என்ன வேலையை இயக்கம் தருகின்றதோ அதனை முழு ஈடுபாட்டுடன் செய்து முடிப்பதே எனக்கான பணி.அமைப்பின் போராளிகளின் உடுப்புகளை துவைக்கும் வேலை தந்தால்கூட அதனை எவ்விதம் சிறப்பாக செய்வதென்றும்,எப்படி அழகாக மடித்து உடுப்புகளை வைப்பதென்றும் பார்ப்பேன்.' என்று அழகாக கூறுவார்)

ஒரு முக்கியமான காலகட்டம் ஒன்றில் திலீபன் அரசியல்துறை பொறுப்பாளன் ஆகின்றான். பகுதியாக விடுவிக்கப்பட்ட தாயகம், அந்தப் பகுதிக்குள் வாழும் மக்களுக்கான பாதுகாப்பு, வாழிட சுகாதாரம், கல்வி என்பனவற்றிலும் நீதி வழங்குவதிலும் இயக்கமே பொறுப்பெடுக்க வேண்டிய ஒரு பொழுதில் திலீபனின் செயற்பாடு தொடங்குகின்றது.

மக்களுக்கு புரியாமல் மூன்றாம் அகிலம், நவபாசிசம், நான்காம் அகிலம் என்று பிதற்றுவதே அரசியல் என்றும் அடுக்கு மொழியில் விளாசுவதும்தான் அரசியல் என்றும் இருந்த ஒரு பொழுதில் மக்களுக்கு புரியக்கூடிய விதத்தில் மக்களின் மனதோடு ஒன்றிடும் மொழியில் சொன்னதே திலீபனை மக்கள் தங்களுள் ஒருவனாக நினைத்தற்கு காரணமாகும்.

மிகமிக அற்புதமாக ஒரு பம்பரம் போன்ற வேகத்துடன் தெருத்தெருவாக மக்களை அணிதிரட்டி அரசியல் ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்தினான்.

காலகாலமாக கற்பித்து வரப்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகளை பேணுவதும், கதைப்பதும்கூட ஒரு தேசக்குற்றம் என்ற நினைப்பை எல்லோர் மனங்களின் உள்ளேயும் நிறுவினான்.

போராளிகளின் தியாகங்களாலும் வீரம் செறிந்த அர்ப்பணங்களாலும் ஏற்படுத்தப்பட்ட இராணுவ வெற்றிகளை ஒரு அரசியல் மாற்றமாக செய்யும் ரசவாதம் தெரிந்த ஒரு முழுமையான போராளியாக அவன் உலாவந்தான்.ஒரு சுதந்திர தேசத்துக்குரிய கட்டமைப்புகளை ஏற்படுத்துவதில் கிட்டுவுக்கு பக்கதுணையாக நின்றவன் திலீபன்.

இறுதியாக அரசியல்ரீதியாக ஒரு அழுத்தம்,ஒரு பெரு மாயை ஏற்பட்டபோதும் அதனை நீக்குவதற்காக வேறு யாரையும் தேர்வு செய்வதைவிட திலீபன் தானாகவே முன்வந்து உண்ணாவிரதத்தில் அமர்கிறான்.

திலீபனை பற்றி தலைவர் பிரபாகாரன் சொல்லும்போது திலீபனின் மரணம் எமது மக்களின் இந்திய மாயையைக் கலைத்தது என்று கூறுவார். அதுதான் முழு உண்மை. திலீபனின் மிகக்குறைந்த பட்ச கோரிக்கைகளும், அதற்காக அவன் நீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்ததும், அதனைக்கூட நிறைவேற்ற முடியாத இந்திய ஆளும் வர்க்கமும் எமது மக்களின் இந்தியா என்பது எமது காவல் தெய்வம் என்ற கனவைக் கலைக்க உதவியது.

அந்த நினைப்பைக் கலைத்து உண்மையைப் புரியவைக்காமல் இந்தியப் படைகளுடன் ஒரு போரைத் தொடங்கி இருந்தால் நிச்சயமாக மிகப்பெரும் பின்னடைவையே அமைப்பு சந்தித்திருக்கும்.தன் மரணத்தின் மூலம்கூட இன்னும் பெரிய உந்துதலை, உறுதியை இந்தப் போராட்டத்துக்கு, இந்த மக்களுக்கு தந்து போனதுதான் அவனது ஈகம்..

சங்கர் அண்ணாவைப் பொறுத்த வரையிலும் திலீபன் அரசியல் ரீதியாக ஒன்றுதிரட்டும் மக்களுக்கான விடுதலையை துரிதப்படுத்தும் கட்டமைப்புகளை படையகக் கட்டமைப்புகளை கட்டளைப் பீடத்தை சிங்கள தேசத்தின் இராணுவ பலத்துக்கு ஈடானதாக, அதனைவிட பலமானதாகக் கட்டி எழுப்புவதில் உழைத்த ஒருவர்.

சங்கர் அண்ணா அமைப்புக்கு வந்த காலகட்டம் ஒரு நெருப்பாற்று நீச்சல் போன்ற பொழுது.

> **சங்கர் அண்ணா, திலீபன் இருவருமே தியாகத்தின் இரு உச்சங்கள். ஓய்வற்ற போராட்டத்தின் இரு உறுதி மலைகள்... அவர்களின் வாழ்வும் மரணமும் ஆயிரம் பாடங்களை எமக்குச் சொல்லித் தந்தபடியே காலகாலத்துக்கும் தொடர்ந்துவரும்...இரண்டு வீரர்களிலும் இருந்தது விடுதலைக்கான முறைமைகளை, வழிகளை, அதனை எவ்வாறு பெருமக்களின் அணிதிரட்டலுடன் முன் நகர்த்தலாம் என்பதையே எந்த நேரமும் சிந்தித்ததே அவர்களிடம் இருந்த ஒற்றுமை.**

1983 இல் ஜுலை இனக்கொலைக்கு பின்னர் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சியும், ஆயுதப் போராட்டம் மீதான அவர்களின் இணைவும் இந்திய வல்லாதிக்கத்தின் தலையீட்டை ஏற்படுத்துகின்றது. பயிற்சி தருவதாக ஆயுத அமைப்புகளுக்கு அழைப்பு வந்த காலம் அது.

அதனை ஏற்று இந்தியா சென்றால் இந்தியாவின் கட்டளைகள், ஊடுருவல்கள், தலையீடுகள் அமைப்புக்குள் வலிந்து வந்தே தீரும். பயிற்சிக்கு செல்லாது ஈழத்திலேயே நின்றால் ஓரிருவருடன், ஒரு பத்துபேருடன் இருக்கும் அமைப்புகளுக்கு எல்லாம் பயிற்சியும் கொடுத்து ஆயுதமும் கொடுத்து தாயகத்துக்கு அனுப்பி உறுதியான போராட்ட சக்தியான விடுதலைப்புலிகளை அழித்துவிடுவார்கள்.


ஒருவகையில் பத்மவியூகம்தான். தெளிவுடன் உள்நுழைந்து சேதாரம் இன்றி தனித்தன்மையுடன் வெளியேறவும் வேண்டும். சென்றோம்.ஆனால் சேதாரம் இன்றி அதே விடுதலைப்புலிகளாக அங்கிருந்து வெளியேறப் பாடுபட்டவர்களில்

**(20 ஆம் பக்கம் பார்க்க)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இப்படி?



தனுஷிற்கு ஏன் இந்த வேலை என திரைப் பிரபலங்கள் தமக்குள் கூறி வருகின்றனர். ஏனெனில் அவர் தயாரிப்பில் சிவகார்த்திகேயன் நடித்த காக்கி சட்டை படம் பொங்கல் வெளியீடு என சமீபத்தில் விளம்பரம் கொடுத்தனர். பொங்கல் அன்று ஐ, என்னை அறிந்தால், ஆம்பள ஆகிய படங்கள் வருவதால் இந்தப் படங்களுக்கே எப்படித் திரையரங்கு கிடைக்கும் என்று தெரியாத நிலையே நீடிக்கிறது. இந்த நிலையில் காக்கி சட்டையும் வரவிருப்பது திரையரங்க உரிமையாளர்களுக்கு மேலும் தலைவலியைத் தந்துள்ளது. படம் என்ன தான் நன்றாக இருந்தாலும் மிகப்பெரிய வரவேற்புக் கிடைப்பது கஷ்டம் தான். தனுஷ் மனதில் என்ன நினைக்கிறார் என்று அவருக்கு மட்டுமே தெரியும்.

# அஞ்சலிக்கு கல்யாணம்?



கற்றது தமிழ், அங்காடி தெரு, கலகலப்பு போன்ற படங்களின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களைக் கவர்ந்தவர் அஞ்சலி. இவர் சில மாதங்களுக்கு முன் தன் சித்தியின் கொடுமையால் தமிழ் சினிமாவை விட்டு விலகி இருந்தார்.

பின்னர் அந்தப் பிரச்சினைகள் முடிந்தவுடன் தற்போது மீண்டும் தீவிரமாக நடிக்க ஆரம்பித்துவிட்டார். இந்த நிலையில் இவர் நீண்ட நாள்களாக ஆந்திராவைச் சேர்ந்த தொழில் அதிபரைக் காதலிக்கிறார் என்று ஒரு வதந்தி இருந்தது.

ஆனால், அதெல்லாம் வெறும் வதந்தி தானாம், கடந்த புதன் கிழமை சென்னையில் நடந்த 'வை ராஜா வை' படத்தின் இசை வெளியீட்டு விழாவில் சிலர் நடிகை அஞ்சலி, நகைச்சுவை நடிகர் சதீஸை ரகசியமாகத் திரு மணம் செய்து கொண்டார் என பேசியுள்ளனர்.

இந்தச் செய்தி எந்த அளவுக்கு உண்மை என்று அதிகாரப்பூர்வ அறிவுப்பு ஏதும் வரவில்லை. இது குறித்து சதீஸிடம் பேச முயன்ற போது அவர் ஏதும் சொல்ல மறுத்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.



# மனமுடைந்த வடிவேலு

வடிவேலு மிகவும் மனதளவில் உடைந்து தான் போயிருக்கார் போல. சில மாதங்களுக்கு முன் தன் மகளின் திருமணத்தை தன் உறவினர்களோடு நடத்தி முடித்தார். அப்போது தான் அவரை சுற்றி பல பிரச்சனைகள் இருந்தது. மகன் திருமணத்தை அனைத்து திரைப்பிரபலங்களுக்கும் சொல்லி தடபுடலாக நடத்துவார் என சிலர் கூறினார். ஆனால், அதுவும் தலை கீழாய் நடந்துள்ளது. வடிவேலு மகன் சுப்பிரமணியன் -புவனேஸ்வரி திருமணம் மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் இன்று காலை நடந்தது. இந்த திருமணத்திற்கு சினிமா பிரப்லங்களுக்கோ, அரசியல் தலைவர்களுக்கோ அழைப்பு விடுக்கப்படவில்லை. தன் சொந்த ஊர் உறவினர்கள் மற்று நண்பர்களை மட்டும் திருமணத்திற்கு அழைத்துள்ளார். மண்டபத்திற்கு வெளியே வைத்திருந்த பேனரில் கூட வடிவேலு தன் பெயரை போடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# கவர்ச்சிக் கன்னியின் வாள்

ஸ்ரேயா, அனுஷ்காவைத் தொடர்ந்து, ஹன்சிகாவுக்கும் வாள் பிடிக்கும் ஆசை வந்து விட்டது. விஜய் ஜோடியாக அவர் நடிக்கும் புதிய படத்தில், வாள் சண்டையில் பிளந்து கட்டுகிறாராம் ஹன்சிகா. இதற்காக, முறைப்படி ஒரு சண்டைப் பயிற்சியாளரிடம் வாள் வீச்சை கற்றுள்ளாராம். ஏதாவது சிறிய காயம் ஏற்பட்டாலும், மற்றப் படங்களில் நடிப்பதற்கு பாதிப்பு வரும் என்பதால், மிகக் கவனமாகச் சண்டைக் காட்சிகளில் நடித்து வருகிறார். ஆனால், கவர்ச்சிக்கன்னியான ஹன்சிகாவை, வாளுடன் நடிக்க வைத்தால் எடுபடுமா?' என, அவரின் ரசிகர்களிடையே முணு முணுப்பு எழுந்துள்ளது.

# சல்மானை முந்தும் அஜித்

அஜித் படம் வருகிறது என்றாலே சமூக வலைத்தளங்களில் திருவிழா தொடங்கிவிடும். அந்த வகையில் சமீபத்தில் வெளிவந்த என்னை அறிந்தால் முன்னோட்டக்காட்சி பல சாதனைகளை படைத்து வருகிறது. இந்த முன்னோட்டக் காட்சியைத் தற்போது வரை 35 லட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

அதேபோல் 77,000 பேர் இதனை லைக் செய்துள்ளனர். இதன் மூலம் தென்னிந்தியப் படங்களின் அனைத்து சாதனைகளையும் இது முறியடித்தது. தற்போது இந்திய அளவில் இரண்டாம் இடத்தில் இருக்கும் இந்தப்படத்துக்கு சல்மான் கான் நடித்த கிக் படத்தின் முன்னோட்டமே தடையாக இருக்கிறது. கிக் படம் 1 லட்சம் லைக்ஸைப் பெற்றுள்ளது. கூடிய விரைவில் இந்தச் சாதனையை என்னை அறிந்தால் முறியடிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தோஷத்தில் எமி



பிரிட்டிஷ் விளம்பர அழகியான எமி ஜாக்சனுக்கு, 'மதராசப் பட்டணம்' படம் கலக்கல் அறிமுகத்தை ஏற்படுத்தி கொடுத்தாலும், அதன்பின், அவருக்கு பெரிய அளவில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனால், சற்று இடைவெளிக்கு பின், ஷங்கர் இயக்கத்தில், 'ஐ' படத்தில் விக்ரமுடன் ஜோடி சேர்ந்த ராசியோ என்னவோ, அந்தப் படம் வெளியாவதற்கு முன்பே, மளமளவென ஏகப்பட்ட பட வாய்ப்புகள் அவருக்குக் கிடைத்துள்ளன.

'கெத்து' படத்தை தொடர்ந்து, தனுஷுக்கு ஜோடியாக ஒரு புதிய படத்தில் நடிக்கிறார் எமி. 'வேலையில்லாப் பட்டதாரி' படக்குழுவே இந்த படத்திலும் இணைகிறது. ஆனால், நாயகி மட்டுமே மாற்றம். தன்னுடைய இரண்டாவது இன்னிங்ஸ் கலக்கலாக தொடங்கியுள்ளதால், சந்தோஷத்தில் ஆழ்ந்துள்ளார் எமி.

# புயலுக்கு ஓய்வு

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இந்த ஆண்டு கோச்சடையான், காவியத்தலைவன், ஐ, லிங்கா ஆகிய படங்களுக்காக கடந்த நான்கைந்து மாதங்களாக இடைவிடாமல் இரவு, பகல் என்றும் பாராமல் அவருடைய குழுவினரோடு கடுமையாக உழைத்திருக்கிறார்கள். இந்த மூன்று படங்களுமே அடுத்தடுத்து வெளியாக வேண்டிய சூழ்நிலையில் இருந்ததால் வழக்கமான நேரத்தைவிட ஏ.ஆர்.ரஹ்மான் அதிகமாக நேரத்தைச் செலவழித்திருக்கிறாராம். ஏற்கனவே, இந்தப்படங்களின் பாடல்கள் அனைவராலும் ரசிக்கப்பட்டு வருகின்றன.

இப்படித் தொடர்ந்து ஓய்வு இல்லாமல் உழைத்ததால் இன்னும் ஒருமாதத்துக்கு ரஹ்மான் முற்றிலும் ஓய்வு எடுக்கப் போகிறாராம்.


இதுகுறித்து ரஹ்மான் கூறியிருப்பதாவது, கடந்த நான்கு மாதங்களாக ஓய்வே இல்லாமல் உழைத்த என்னுடைய குழுவினருக்கு என்னுடைய அன்பும், மரியாதையும் உண்டு. சிலநேரங்களில் குட்டித்தூக்கம் தான், இருந்தாலும் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் அவர்கள் பணியாற்றினார்கள். இந்த ஒருமாதத்தில் உங்களது குடும்பத்துடனும், நண்பர்களுடனும் பொழுதைக்கழியுங்கள்.

கடவுள் உங்கள் குடும்பத்தாருக்கும், உங்களுக்கும் மகிழ்ச்சியை வழங்கட்டும், என்று பாராட்டியுள்ளார். ஒருமாத ஓய்வுக்குப்பின் மணிரத்னம் இயக்கிவரும் படத்தின் பின்னணி இசை வேலையை ரஹ்மான் ஆரம்பிக்க உள்ளார் என்று தெரிகிறது.



# வேண்டாம் காசு

இந்தக் காலத்தில் இப்படி ஒரு நடிகையா?' என, லட்சுமி மேனனை பற்றி கோடம்பாக்கத்தில் ஆச்சரியமாக பேசுகின்றனர். பிரசாந்த் நடிக்கும் புதுப் படத்தில், ஒரு பாடல் பாடுவதற்காக லட்சுமி மேனனை அழைத்தனராம்.உடனடியாக அதற்குச் சம்மதித்த அவர், உற்சாகத்துடன் அந்தப் பாடலைப் பாடிக் கொடுத்துள்ளார். இதற்குச் சம்பளம் கொடுக்க முயன்றபோது, 'ஐயோ, நீங்கள் பாடுவதற்கு அழைத்ததே போதும்; சம்பளம் எல்லாம் வேண்டாம்' என்று லட்சுமி மேனன் பெருந்தன்மையுடன் மறுத்து விட்டாராம்.



# சந்தானத்துக்கு அடிக்கும் அதிர்ஷ்டம்

சில படங்களிலேயே நடித்தாலும் தமிழ் சினிமா ரசிகர்களைக் கவர்ந்தவர் ப்ரியா ஆனந்த். இவர் கையில் தற்போது ஆறுக்கும் மேற்பட்ட படங்கள் உள்ளன.இந்த நிலையில் இயக்குநர் ராஜேஷின் உதவியாளர் அருண் பிரசாத் இயக்கும் படத்தில் நாயகியாகநடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார் ப்ரியா ஆனந்த். இதில் கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்தின் வெற்றி கூட்டணி மீண்டும் இணையவுள்ளது. இந்தப்படத்தில் ப்ரியா ஆனந்த் சந்தானத்துக்கு தான் ஜோடியாக நடிக்கவுள்ளார் என கோலிவுட் வட்டாரங்களில் கிசுகிசுக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முட்டாளுக்கு புத்தி சொன்னால்...?



ஒரு காட்டில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன. குளிர் காலத்தில் ஒரு நாள் மிகவும் கடுமையான குளிராக இருந்தது. குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை. கொஞ்சம் நெருப்புக் கிடைத்தால் சருகுகளைப் போட்டுத் தீ மூட்டி குளிர் காயலாம் என்று ஒரு கிழக்குரங்கு கூறிற்று. நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு மின்மினிப் பூச்சி பளிச் பளிச் சென்று மின்னியவாறு பறந்து சென்று கொண்டிருந்தது. அதைக் கண்ட ஒரு குரங்கு அங்கே நெருப்புப் போகிறது என்று கூறிற்று. மற்றொரு குரங்கு அந்த மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது. மற்ற குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூழாங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சி மீது போட்டன. பிறகு குரங்குகள் நெருப்பு கொழுந்து விட்டு எரியப் போகின்றது என எதிர்பார்த்து சூழ்ந்து அமர்ந்து கொண்டன. ஆனால் தீ எழும்பும் வழியைக் காணவில்லை. பிறகு குரங்குகள் வாயினால் குப்பையை ஊதி நெருப்பை எரிய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

மரத்தில் அமர்ந்து குரங்குகளின் கோமாளிக் கூட்டத்தை கவனித்துக் கொண்டிருந்த ஒரு பறவை கலகலவென்று சிரித்தபடி மரத்தை விட்டிறங்கி கீழே வந்து அமர்ந்தது. பிறகு குரங்குகளை நோக்கி நண்பர்களே மின்மினிப் பூச்சியை நெருப்பு என்று எண்ணிக் கொண்டு தீ மூட்ட வீண் பிரயாசை எடுக்கிறீர்கள். நீங்கள் என்ன தான் வாயால் ஊதினாலும் மின்மினிப் பூச்சியிடமிருந்து நெருப்பு வரவே வராது. வீண் வேலையை விட்டு விடுங்கள் என்று புத்திமதி கூறிற்று. உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக் கொண்டு உன் வேலையைப் பார் என்று சொல்லிவிட்டு குரங்குகள் மறுபடியும் குப்பையை வயால் ஊதித் தீ உண்டாக்க · முயற்சியெடுத்தன. பறவை, குரங்குகளின் முட்டாள்த் தனத்தை எண்ணிப் பரிதாபப் பட்டு திரும்பத் திரும்பத் குரங்குகளுக்கு புத்திமதி கூறிக் கொண்டிருந்தது. இதனால் கோபமுற்ற குரங்குகள் பறவை மீது பாபாய்ந்து அதனைப் பிடித்து தரையில் மோதிக் கொன்று விட்டன.




## கொஞ்சம் சிரிங்க...



கபிலன்:- என் மனைவி ஆசிரியராக இருக்கிறாள்.

குபிலன்:- சரி... அதுக்கு என்ன?

கபிலன்:- தினமும் பிரம்பா லேயே அடிக்கிறாளே...

## மயிலே குயிலே

மயிலே குயிலே
மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!

பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!

ஓடைக் கொக்கு இங்கே வா
ஒழிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்!



## அறிந்ததும் அறியாததும்



- பழ மரங்களில் நீண்ட காலம் விளைச்சல் தருவது தோடம்பழமரம். சுமார் 400 ஆண்டுகளாக தொடர்ந்து அது விளைச்சல் தரும்.
- உலகிலேயே மிக சிறிய மரம் குட்டை வில்லோ மரம். அதன் உயரம் இரண்டே அங்குலம் தான்.
- பொதுவாக தாவரங்கள் நகராது. ஆனால் கிலாமிடோமொனாஸ் என்ற ஒரு செல் தாவரம் நகர்ந்து போகும் தன்மை உடையது.
- பச்சோந்தியின் நாக்கு தன் உடலின் நீளத்தை இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும்.
- நாக்கை நீட்ட முடியாத ஒரே விலங்கு முதலை.
- நீல திமிங்கலத்தின் எடை 22 யானைகளின் எடைக்கு சமம். அதன் இதயம் ஒரு சிறிய கார் அளவில் இருக்கும்.
- யானையின் கால் தடத்தின் நீளம் அளந்து, அதை ஆறால் பெருக்கி வரும் விடையே - யானையின் உயரம்.
- தரையில் முதுகு படும்படி உறங்கும் ஒரே உயிரினம் மனிதன்.
- முன்னால் பின்னால் பக்கவாட்டில் என அனைத்துப் பக்கங்களிலும் பறக்க முடிந்த பறவை தேன்சிட்டு.
- தேன்சிட்டு, மரங்கொத்தி, போன்ற பறவைகளுக்கு நடக்க தெரியாது.

## மரங்களைத் தெரியுமா?

நம் எல்லோருக்கும் மரங்களை தெரியும்? என்னடா இவன் மரங்களை தெரியும் என்று எதோ ஒரு அதிசயத்தைப் பற்றிக் கேட்பதுபோல் கேட்கிறானே என்று நீங்கள் நினைப்பது புரிகிறது . என்ன செய்வது . இப்படி ஒரு கேள்வியைக் கேட்கும் அளவுக்குதான் இன்று மரங்களை அழித்துக் கொண்டு இருக்கிறோம். நம் எல்லோருக்கும் உலகிலேயே மிகப்பெரிய காடு எது என்று கேட்டால் தெரியும் . உலகி லேயே மிகவும் அழகான மரங்களைக் கொண்டு அழகாக காட்சிதரும் இடம் எது என்று கேட்டாலும் தெரியும். ஆனால் உலகத்தில் அதிக எடையைக் கொண்ட மிகப்பெரிய மரம் எது ! ? அது எங்குள்ளது ? அந்த மரத்தின் பெயர் என்ன என்று கேட்டால் நம்மில் பலருக்குப் பதில் தெரியாது . சரி அப்படி உலகிலேயே மிகப் பெரிய மரம் எங்குதான் இருக்கிறது? சொல்கிறேன் உலகிலேயே எடை அதிகமான மரம் கலிபோர் னியாவில் உள்ள ஜெனரல் ஷெர்மன் என்ற மரம்தானாம் .கடந்த ஆண்டு மரங்களின் வளர்சிக் கணக்கெடுப்பின்படி இதுவரை இந்த மரத்தின் சாதனையை வேறு எந்த மரமும் வெற்றி கொள்ளவில்லை என்றால் பார்த்துக்கொள்ளுங்கள் . அது மட்டும் இல்லாது ஒரே நேரத்தில் இந்த மரத்தின் நிழலில் மனிதர்களாகிய நம்மை நிற்க வைத்தால் இரண்டரை இலட்சம் மக்கள் தங்கள் மேல் வெயில்படாமல் மாலை வரை அமர்ந்திருக் கலாம் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள் .இறுதியான கணக்கெடுப்பின் படி அந்த மரத்தின் எடை சுமார் 2,800 தொன் என்றும், அடிபாகச் சுற்றளவு 135 அடி. அதன் உயரம் 260 அடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

## வர்ணம் தீட்டி மகிழுங்கள்





இந்த இரு படங்களுமிடையே 3 வித்தியாசங்கள் உள்ளன. கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழைக்காட்டான்

**இந்த வருடம் ஜூலை மாதம் 18 ஆம் திகதி காலை வேளையில் மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனத் துக்குச் சொந்தமான போயிங் எம்ஹெச்17 விமா னம் நெதர்லாந்து நாட்டில் இருந்து குழந்தைகள், சிறுவர்கள் முதியவர்கள் என 295 பயணிகளுடன் மலேசியா நோக்கிச் சென்றபோது கிழக்கு உக்ரைன் வான்பரப்பில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டது. அந்தக் கொடூர தாக்குதலில் விமானத்தில் பயணம் செய்த 295 பேரும் உடல்கருகி பலியாகி இருந்தனர்.**

கடந்த வாரம் வெள்ளிக்கிழமை காலைவேளை கொழும்பு புறநகர்ப் பகுதியில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளகியுள்ளதாக ஊடகங்களில் பரபரப்பு செய்திகள் வெளியாகி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

காரணம் இந்த ஆண்டில் பயணிகள் விமானங்கள் கடத்தப்படுவதும், சுட்டுவீழ்த்தப்படுவதும், விபத்துக்குள்ளாவதும் என்று விமான உயிர் குடிப்புக்கு பஞ்சமிருக்கவில்லை .

அதிலும் மிகமுக்கியமாக இந்த வருடம் ஜூலை மாதம் 18 ஆம் திகதி காலை வேளையில் மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் எம்ஹெச்17 விமானம் நெதர்லாந்து நாட்டில் இருந்து குழந்தைகள், சிறுவர்கள் முதியவர்கள் என 295 பயணிகளுடன் மலேசியா நோக்கிச் சென்றபோது கிழக்கு உக்ரைன் வான்பரப்பில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டது. அந்தக் கொடூர தாக்குதலில் விமானத்தில் பயணம் செய்த 295 பேரும் உடல்கருகி பலியாகி இருந்தனர்.

இவ்வாறு இந்த ஆண்டில் ஆங்காங்கே விமான விபத்துக்கள் பற்றிய செய்திகளை ஊடகங்கள் வழியாக அறிந்து, உயிரிழந்தவர்களுக்கு பாவம் அவர்கள் என்ற வார்த்தையால் அஞ்சலி செலுத்திய இலங்கை மக்களுக்கு ரஷ்யாவின் தயாரிப்பான அன்ரனோவ் 32 ரக விமானம் கட்டுநாயக்கவிலிருந்து ரத்மலானை நோக்கிப் ஐந்து விமானப்படையினருடன் பறந்து கொண்டிருக்கையில் விபத்துக்குள்ளான செய்தி பெரும் அதிர்வையே உண்டுபண்ணியது. அதிக பனியுடன் கூடிய சீரற்ற காலநிலையினால் விமானத்தை செலுத்த முடியவில்லை என கட்டுப்பாட்டு அறைக்கு தலைமை விமானி தகவல் வழங்கிய மறுகணமே மரத்துடன் மோதி அன்ரனோவ் விபத்துக்குள்ளானது. இதனால் அதில் பயணம் செய்த ஐவரில் ஒருவர் மட்டும் உயிர் தப்பிய போதும் ஏனைய நால்வரும் உயிரிழந்தார்கள்.

இருப்பினும் விபத்து நடந்த மறுகணமே கொழும்பு புறநகர்ப் பகுதியில் விமானம் விபத்து என்று முண்டியடித்துக் கொண்டு ஊடகங்கள் செய்தி வெளியிடவே முழு இலங்கையும் ஒருகணம் அதிர்ச்சியில் மூழ்கியது. எனினும் சற்று தாமதமாக மேலதிக செய்திகள் மெல்ல மெல்ல வெளியாக






பெரும்பான்மையினத்தவர்களுக்கு வேதனை எழுந்தாலும் போரால் வெந்து போன தமிழர்கள் மத்தியில் இலேசான மகிழ்வின் ரேகைகள் வெளிப்படவே செய்தன.

ஏனெனில் விபத்துக்குள்ளான அன்ரனோவ் விமானங்களே 90 களில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உள்நாட்டு போரில் தமிழ் மக்களின் உயிர் குடிப்பதற்கு இராணுவத்தினருக்கு பலவழிகளிலும் உதவி புரிந்தது.

ஏ.என் -32 ரகத்தைச் சேர்ந்த அன்ரனோவ் வகை முதலாவது விமானம் 1976 ஜூலை 9 ஆம் திகதி உக்ரைன் நாட்டில் தயாரிக்கப்பட்டது. உள்நாட்டுப் போர்களின் போது குண்டு போடுதல் மற்றும் போக்குவரத்து என்பவற்றுக்கு படையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

6 -9 மில்லியன் டொலர்கள் பெறுமதியுடைய இந்த ரக விமானங்களை இந்தியா, அங்கோலா, இலங்கை, உக்ரைன் போன்ற நாடுகளிலேயே அதிகளவில் பயன்பாட்டில் உள்ளன.

காரணம் அன்ரனோவ்-32 ரக விமானங்கள் சூடான காலநிலை உள்ளிட்ட பல்வேறு காலநிலைகளில் சிறப்பாக இயங்கும் தன்மை கொண்டவை. அதுமட்டுமல்லாது விமானத் தளத்திலிருந்து 4500 மீற்றர் உயரம் வரை பறக்கும் திறனும் கொண்டவை. அதற்கு மேல் பறக்க முற்பட்டால் விபத்துக்குள்ளகிவிடும் தன்மையை கொண்டுள்ள போதிலும், இலங்கை, இந்தியா போன்ற ஆசிய நாடுகளில் விமானப்படைகளுக்கு சேரும் புதிய வீரர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு இந்த ரக விமானங்களே அதிகளவு பங்களிப்புசெய்துள்ளன..

இலங்கை விமானப் படையினர் தங்களுடைய போக்குவரத்தை இலகுவாக்கவும்,தமிழீழ விடுதலைப் புலிகளின் தரைவழித் தாக்குதலிருந்து தம்மைப் பாதுகாத்து கொள்ளவும் அதிகமாகப் பயன்படுத்தியிருந்தனர். இதனை விட 90 களில் நவீன ரக போர்விமானங்கள் இல்லாத காலத்தில் அன்ரனோவ் விமானங்களையே குண்டுவீச்சுக்கும் இலங்கை இராணுவத்தினர் பயனப்டுத்தினர். இவ்வாறு போர் நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்ட அன்ரனோவ் விமானம் ஒன்று புலிகளால் சுட்டுவீழ்த்தபட்டும் இருக்கிறது. அதை விட . இரண்டு அன்ரனோக்கள் விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொருங்கியுமுள்ளன. இந்த நிலையில் தான் இப்போது மூன்றாவது விபத்தையும் அன்ரனோவ் விமானங்கள் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் அதில் பயணித்த விமானி ஒருவருக்கு 2 மாதங்களுக்கு முன்னர்தான் திருமணமாகி இருந்தது என்பதுதான் சோகம்.

# நடக்குமா?...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களை பணயக் கைதிகளாக பிடித்துவைத்தார். பின்னர் அவர் சுட்டுக்கொல்லப்பட்டு பணயக் கைதிகள் மீட்கப்பட்டனர். இருவர் இதன் போது உயிரிழந்தனர்.இந்தச் சம்பவம் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் மேற்குலகின் கண்ணில் மண்ணை தூவிவிட்டு ஆஸ்திரேலியாவுக்குள்ளும் ஊடுருவி இருப்பதையே காட்டுகின்றது. இது வெறும் ஆரம்பம் தானென்றும் இது போன்ற சம்பவங்கள் ஆஸியில் தொடருமெனவும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

ஆனாலும் இந்த அமைப்பினரை தோற்கடிப்பதற்கு அவர்களிடம் பலவீனம் யாதெனில் பெண் போராளிகளின் கையால் தம்முயிர் போவதை அவர்கள் விரும்பவில்லை. காரணம் பெண்கள் கையால் தாம் செத்தால் தமக்கு சொர்க்கம் கிடைக்காது என்பதுதான். இதனை ஒரு ஆயுதமாகக் கையில் எடுத்து களமாட துணிந்து உள்ளார்கள் ஈராக்கிய பெண்கள் படையினர்.

இது இவ்வாறு இருக்க ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினருக்கு சமூகவலைத்தளம் மூலம் ஆட்சேர்ப்புச் செய்ததாக அண்மையில் இந்தியாவின் பெங்களூரில் கைது செய்யப்பட்ட இளைஞனுக்கு ஆதரவாக பெங்களூரில் தாக்குதல் நடத்துவோமென சமூகவலைத்தளங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் 4 டெஸ்ட் போட்டிகளில் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணிக்கும் ஆஸ்திரேலியாமுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி முடிந்த போதிலும் இன்னும் 3 போட்டிகள் மீதமுள்ளன.

இதற்கிடையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஆஸ்திரேலியாவுக்குள் ஊடுருவியுள்ளதால் எங்கு எப்போது தாக்குதல் நடத்தப்படும் என்ற அச்சமான சூழ்நிலை நிலவுகின்றது.பெங்களூர் இளைஞனைக் கைது செய்ததால் ஆத்திரத்தில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் இந்தியர்களை ஆஸ்திரேலியாவில் பழிவாங்கக்கூடும் என்ற அச்சத்தில் ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியத் தூதரகம் உடனடியாக மூடப்பட்டுள்ளது. இந்த சம்பவங்களால் இந்திய அணி தனது சுற்றுப்பயணத்தை தொடருமா இல்லை தாயகம் திரும்புமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்திய அணி, தாயகம் திரும்ப வேண்டும் என்று கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதனால் வீரர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு போட்டி தொடரை ரத்து செய்ய வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபைக்கு பல ரசிகர்கள் மின்னஞ்சல் அனுப்பியுள்ளனர்.

1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து நடத்தின. அப்போது விடுதலை புலிகளால் அச்சுறுத்தல் இருப்பதால் நாங்கள் இலங்கை மண்ணிலேயே காலடி எடுத்து வைக்க மாட்டோம் என்று ஒற்றைக்காலில் நின்றது அன்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை.

அதேபோன்ற முடிவெடுக்கவேண்டிய ஒரு இக்கட்டான சூழ் நிலைக்கு இந்தியாவும் தள்ளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேதாஜியும் நேருவின் துரோகமும்... 2

**- இந்தியன்**



ஃபைஸாபாத்தில் அந்த மர்ம சாதுவிடம் இருந்த 23 பெட்டிகளில் இருந்தவற்றில் முக்கியமானவை :

1. ஒரு ஜோடி ஜெர்மன் பைனாகுலர்கள்
2. ஒரு கரோனா ரைப்ரைட்டர்
3. ஒரு பைப் ( புகையிலை பொருத்தி புகைக்கும் பைப் )
4. ஒரு ரோலக்ஸ் மணிக்கூடு ( நேதாஜி எப்போதும் அணிவது )
5. ஒரு் சிறிய பெட்டிக்குள் ஐந்து பற்கள்
6. ஒரு ஜோடி சில்வர் ரிம்முடன் கூடிய வட்ட வடிவக்கண்கண்ணாடிகள்
7. Gullivers Travels புத்தகம்
8. P.G. Wodehouses The Inimitable Jeeves புத்தகம்
9. மிக அரிதாகக் கிடைக்கின்ற International Military Tribunal for the Far East
10. The History of the Freedom Movement in India
11. The Last Days of the Raj
12. Moscows Shadow Over West Bengal
13. Solzhenitsyns The Gulag Archipelago.

7 முதல் 13 வரையிலான புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்கள் ஒரு முகம் தெரியாத சாதுவிடம் இருக்கக்கூடியவையல்ல. மிக ஆழ்ந்து வாசிக்கின்ற ஒரு தேசபக்தரிடம் இருக்கவேண்டியவை. நேதாஜி கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்றவர் என்பதையும் இங்கே நினைவு கூரவேண்டும்.

**மேலும் தொடர்வோமா..?**

ஃபைஸாபாத்தில் அந்த சாதுவின் உடைமைகளைப் பரிசோதனை செய்ய எம். கே. முகர்ஜி 2001 இல் சென்றார். விசாரணைக்குழு அமைக்கப்பட்டு இரண்டாண்டுகள் கழிந்து அதற்கும் ஐந்தாண்டுகள் முன்பே வெளியான சாதுவின் உடைமைகளைப் பரிசோதிக்க காலதாமதம் ஏன் என்பது உங்களைப் போலவே எனக்கும் தோன்றுகிறதுதான். ஆனால் ஓர் அரசாங்கம் அமைக்கும் விசாரணைக்குழு அந்த அரசு சொன்னபடிதான் நடக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு நாம் சிறுகுழந்தைகள் அல்லர் தானே..?

முகர்ஜி சென்றபோது அவருடன் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் நிருபர் அனுஜ்தர் என்பவரும் சென்றிருந்தார். அவரது கூற்றின்படி அங்கே பெட்டிகளில் இருந்த, சில புத்தகத்தில் கீழ்ப் பகுதியில் எழுதப்பட்டிருந்த சில வரிகள் (குறிப்பெடுத்தவை போன்றவை) நிச்சயமாக சுபாஷ் சந்திர போஸினுடையதுதான் என்பதை அந்த நிருபர் உறுதி செய்துகொண்டதாகக் கூறுகிறார். கையெழுத்து நிபுணர் ஒருவரிடம் அந்த எழுத்துக்களைக் கொடுத்து பரிசோதிக்கப்பட்டபோது அந்த நிபுணர் அது நிச்சயமாக நேதாஜியினுடையதுதான் என்று கூறியும் முன்னரே முடிவு செய்திருந்தபடி முகர்ஜி விசாரணைக்குழுவும் அதைத் தொடர்ந்து அரசாங்கமும் அந்த நிபுணரின் கூற்றை அதிரடியாக மறுத்துவிட்டன. 2006 ஆம் ஆண்டில் முகர்ஜி விசாரணைக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. நேதாஜியின் மறைவைப்பற்றிய மர்மங்களை இன்னும் அதிகரிக்கவைத்தது என்பதுதான் அந்த அறிக்கையின் முக்கிய அம்சம்.

அந்த முகர்ஜி அறிக்கையின்படி

நேதாஜி முன்பு ஜப்பான் செய்தி நிறுவனத்தின் அறிக்கையின் படி இறந்தது தவறான செய்தி.

ரோக்கியோவில் இருக்கும் ஜப்பானியக் கோயிலில் இருந்து கிடைத்த சாம்பல் நேதாஜியினுடைய்து அல்ல.

ஃபைஸாபாத்தில் இறந்த சாதுதான் நேதாஜியா என்பதில் முழுமையான முடிவுக்கு வரும்படியான சாத்தியக்கூறுகள் கிடையாது.

(அதே நேரம் 2010 ஆம் ஆண்டில் ஒரு தொலைக்காட்சி நேர்முகத்தில் அதே முகர்ஜி ஃபைஸாபாத்தில் இறந்த சாதுவும் நேதாஜியும் ஒருவர் தான் என நினைக்கிறேன் என்று கூறி இருக்கிறார் என்பது ஆச்சரியமான அதே சமயம் சிந்திக்கத்தக்க ஓர் அம்சம் )

முடிவாக எம்.கே.முகர்ஜியின் அந்த அறிக்கையை நம்பகத்தன்மை வாய்ந்தது என்று அப்போதைய ( 2006) சோனியா அரசு மறுத்துவிட்டது. ஆக 7 வருட காலத்தையும், பலகோடி ரூபாவையும் விழுங்கி உருவான அந்த அறிக்கையும் கோவிந்தா தான்.

அப்படி ஏன் தான் நேதாஜி விடயத்தில் மர்மத்தை வெளிப்படுத்த இந்திய அரசு -அதாவது அப்போதைய காங்கிர அரசுகள்- தயக்கம் காட்டியது என்று கேள்வி எழுகிறதல்லவா..?

இதற்கு விடை நேருவின் காலத்தில் இருந்தே வெட்ட வெளிச்சம்தான். நேருவுக்கும் நேதாஜிக்கும் கொஞ்சம் கூட ஒத்துப் போகாது. இருவரும் காங்கிரஸுக்குள் கீரியும் பாம்பும் போலத்தான் இருந்தனர். பலமுறை காந்தியின் உதவியால் நேரு நேதாஜியை அவமதித்திருக்கிறார். பலர் முன் சாடியிருக்கிறார். நெருக்கடிமேல் நெருக்கடி கொடுத்து நேதாஜியை காங்கிரஸை விட்டே வெளியேறும் வகையில் நிர்ப்பந்தித்திருக்கிறார். ஆரம்பம் முதலே நேதாஜியைத் தீர்த்துக் கட்டும் சகலவித ஏற்பாடுகளையும் நேரு செய்தே வந்திருக்கிறார். இதற்கெல்லாம் பல ஆதாரங்கள்/ சம்பவங்கள் இருந்திருக்கின்றன.



நேதாஜி உயிருடன் இருந்தபோது எடுக்கப்பட்ட இறுதியான புகைப்படம் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம்திகதி சைகோன் விமானநிலையத்தில் என்று வரலாறு தெரிவிக்கிறது. அடுத்த ஐந்து நாள்களில் அதாவது ஓகஸ்ட் 23 ஆம் திகதி ஜப்பானியச் செய்தி நிறுவனம் அவரை இறந்ததாக அறிவித்தது.

அந்த அறிவிப்பு இதுதான் :

அடுத்து செப்ரெம்பர் 7 ஆம்திகதி நேதாஜியுடன் இறுதியாக விமானத்தில் பயணித்த கேணல் ஹபிபுர் ரஹமான் கூற்றுப்படி இருவரும் பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளானதில் நேதாஜி இறந்துவிட்டதாகவும் ஹபிபுர் ரஹ்மான் மட்டுமே உயிர்பிழைத்ததாகவும் தகவல்கள் இருக்கின்றன. பிறகு அஸ்தி நிரம்பிய கலயம் ஒன்றை எடுத்துக்கொண்டு ரோக்கியோ வந்து சேர்ந்தார் கேணல் ஹபிபுர் ரஹ்மான், அந்தக் கலயம் ரோக்கியோவில் இருக்கும் ரென்கோஜி ஆலயத்தில் வைக்கப்பட்டு நேதாஜி சலேகயே ( நேதாஜி மறைந்துவிட்டார் ) என்று அறிவிக்கப்படுகிறது.

இப்போது பல கேள்விகள் நம் முன்னால் உள்ளன.

அத்தகைய விமான விபத்தில் நேதாஜி மட்டும் உயிரிழக்க ஹபிபுர் ரஹ்மான் மட்டும் பிழைத்துக் கொண்டது எப்படி..?

இறந்தது நேதாஜி என்னும் போது அவசரம் அவசரமாக அவரது உடல் எரிக்கப்பட்டது ஏன்..? பூத உடலை புகைப்படம் எடுக்காதது ஏன்..?

கலயத்தில் காணப்படும் அஸ்தி நேதாஜியுடையதுதானா என்பதற்கான ஆதாரம் வேறு என்ன இருக்கிறது?

அந்த அறிவிப்புக்குப்பின் இந்திய பத்திரிகையாளர் ஹரின் ஷா என்பவர் விபத்து நடந்ததாகக் கூறப்படும் தைப்பே(Taipei)என்ற இடத்துக்குச் சென்று அங்கே நேதாஜியின் மருத்துவ மற்றும் தகனத்துக்கான பொலிஸ் அறிக்கைகளைப் பார்வையிட்டார். ஜப்பான் மொழியில் இருந்த அந்த ஆவணங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது அதிர்ச்சியே கிடைத்தது. தைப்பே மருத்துவமனையில் இதய அதிர்ச்சியில் இறந்த ஒகாரோ இசிரோ (Okara Ichiro) என்பவர் ஓகஸ்ட் 19 ஆம் திகதி தகனம் செய்யப்பட்டார் என்பதே அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயம். ஆக மொத்தத்தில் ஒகாரோ என்பவரின் சாம்பலே நேதாஜியின் சாம்பல் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச்செய்தி முகர்ஜி குழுவினர் செய்த விசாரணையிலும் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அறிக்கையையே குப்பை என ஒதுக்கியது சோனியாவின் அரசு. ஏன்.. ?

நேதாஜியின் மரண மர்மத்தை வெளியுலகுக்கும் நேதாஜியின் வழித்தோன்றலுக்கும் காட்டாமல் வைத்திருக்கவேண்டிய அவசியம் என்ன..?

பாரதரத்னா விருது முன்பொருமுறை நேதாஜிக்கு வழங்கப்பட்டபோது நேதாஜியின் வாரிசுகள் திட்டவட்டமாக அதை மறுத்ததன் காரணமே இதுதான். எந்தத் தலைவரை இந்தியாவும் ஏன் உலகமுமே தலையில் வைத்துப் போற்றியதோ அந்தத் தலைவரின் மரண ரகசியத்தை அவரது குடும்பத்துக்குக் கூடத்தெரிவிக்காமல் காத்துவருகையில் அவருக்கான பாரதரத்னாவில் மதிப்பு இல்லை. நேதாஜிக்கு பாரத ரத்னா மதிப்பு தரப்போவதில்லை. பாரதரத்னாவுக்கு வேண்டுமானால் நேதாஜிக்கு கிடைப்பதால் உயர்வு கிடைக்கலாம்.

நேதாஜியின் மரண ரகசியத்தை நேருமுதல் அவரது வாரிசுகள் அனைவருமே கட்டிக்காத்து வருவதன் மிக முக்கியகாரணங்கள் என்ன என்ன..?

காங்கிரஸ் எழுதிய இந்தியச் சுதந்திர வரலாற்றில் காந்தியும் நேருவும் மட்டுமே முதன்மைப்படுத்தப்பட்டிருப்பதையும் பட்டேல் முதல் முத்துராமலிங்கத் தேவர் ( நேதாஜியின் மிக நெருங்கிய நண்பர் ) வரை மற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களை எல்லாமே இருளடித்து வைத்திருப்பதையும் இந்திய சுதந்திர வரலாறு படிப்பவர்கள் உணரலாம்.

(மர்மம் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரைதேடும் இணைய வலை

அடுத்தடுத்த மரணங்கள், ஸ்நோடன், அனானிமஸ், விக்கிலீக்ஸ் என இணைய உலகம் கொந்தளித்துக் கிடக்க, அமெரிக்க தேசியப் பாதுகாப்பின் தலைவர் ஜெனரல் அலெக்ஸாண்டர் கீத், ஹக்கர்ஸ் கருத்தரங்கில் பார்னபிக்கு அஞ்சலி செலுத்திப் பேசத் தொடங்கிய போது கூட்டத்தில் இருந்து எதிர்ப்புக் குரல்களும், கேள்விக் கணைகளும் அனல் பறந்தன.

'இணையக் கண்காணிப்பிலிருந்து விடுதலை வேண்டும்' என்று கூட்டத்திலிருந்து குரலெழும்ப, 'நீங்களும் எங்களோடு சேர்ந்து அதற்கான முயற்சியில் சேர்ந்து கொள்ளுங்கள்' என்று அலெக்ஸாண்டர் கீத் பதிலளிக்க, 'நீ ஒரு புளுகுணி மூட்டை, அமெரிக்க காங்கிரஸில் இணையக் கண்காணிப்புக் குறித்து பொய் சொல்லிய பொய்யர்கள், உங்களை நம்ப முடியாது' என்று பதில் குரலொலிக்க அலெக்ஸாண்டர் கீத் ஒரு மாதிரியாக சமாளித்துப் பேசி முடித்தார்.


பின் அங்கு கேட்ட பல கேள்விகளில் முக்கியமானது, ஒரு தனிநபர் தனது அம்மாவுடன் பேசுவதையோ, அல்லது உங்கள் (அலெக்ஸாண்டர்) மகளின் இணைய நடவடிக்கைகளையும், தகவல் தொடர்புகளையும் நீங்கள் கண்காணிக்க முடியுமா? அதற்கு அலெக்ஸாண்டர் அளித்த் பதில் வரலாற்று முக்கியயத்துவம் வாய்ந்தது.

'எங்களால் யாரையும் கண்காணிக்க முடியும், ஆனால் நீங்கள் நல்லவராக இருக்கும் பட்சத்தில் உங்கள் தகவல் தொடர்பு எதுவும் கண்காணிக்கப்பட மாட்டாது' என்பது தான் அலெக்ஸாண்டர் அளித்த பதில். நல்லவர், கெட்டவர் என்பதற்கான வரைமுறைகளை அவர்களே வகுத்துக் கொள்வது தான் இதிலுள்ள சிறப்பம்சம், மேலும் மற்ற நாடுகளின் அரசியலதிகார மையங்கள் அனைத்தும் கெட்டவர்கள் வகையறாவில் இலவசமாக சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை யார் சொல்லியும் நமக்குத் தெரியத் தேவையில்லை. இங்கு அலெக்ஸ்ாண்டர் கீத் சொன்ன அதே செய்தியைத் தான் உலகெங்கும் அம்பலமாக்கியதற்காக ஸ்நோடன் ரஷ்யாவில் தஞ்சம் புக நேரிட்டதை இங்கு நினைத்துப் பார்த்துக் கொள்ளவும்.

இதுவரை நாம் பார்த்த ஆளுமைகள் அனைவருமே ஊடகங்களும், அரசாங்கங்களும் ஒளிவு மறைவின்றி மக்களிடம் வெளிப்படையாக இருக்க வேண்டும், இணையம் என்பது மக்களுக்கானது அதில் அவர்களின் அந்தரங்கத்தன்மை அவர்களது உரிமை என்பது போன்ற காரணங்களுக்காக வெற்றிவேல், வீரவேல் என்று கிளம்பிப் போய் தங்கள் வாழ்க்கையை லட்சியத்துக்காகத் துறந்தவர்கள். இவர்கள் அனைவருமே வாழ்க்கையில் மிக இளம் வயதிலேயே பணம், புகழ், காதல் என்று எந்தக் குறையுமின்றி இருந்தவர்கள். இவர்களைப் பற்றி நாம் இவ்வளவு விரிவாகப் பார்த்ததின் காரணம், சமூக , பொருளாதார, தொழில்நுட்ப மாற்றங்கள் அனைத்திலும் மேற்கத்திய உலகத்தினை அப்பட்டமாக பின்பற்றும் நாம், அவர்கள் சந்திக்கும் இதே ஊடகச்சிக்கல்களை, இணையச்சுதந்திரத்துக்கானத் தேவைகளை எண்ணி எண்ணி பொங்க வேண்டிய நாள்கள் வெகுதூரத்தில் இல்லை.

தகவல் தொழில்நுட்பத்தின் பிரமாண்டத் தேவைகளை சகட்டுமேனிக்கு நிறைவேற்றிக் கொடுக்கும் பணிகளில் பெரும் பங்கு வகிக்கும் நாம், சமூக மாற்றங்களுக்கு, உண்மையை உலகறியச் செய்வதற்கு இணையத்தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதற்கானத் தகுதியை எட்டியிருக்கிறோமா, அதனை எப்படிச் சரியாகப் பயன்படுத்துவதென்பதையாவது தெரிந்திருக்கிறோமா?.

மாற்று ஊடகத்துக்கு என்றுமே மக்கள் ஆதரவளிக்கவும், போற்றவும் தயங்கியதேயில்லை. தூர்தர்ஷன் நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பார்த்துத் தரிசாகிக் கிடந்த தமிழ் கூறும் நல்லுலகம் சன் டிவியின் தமிழ் மாலைக்கும், அவர்களின் செய்திகள் பிரிவு ஆரம்பித்த புதிதிலும் கொடுத்த வரவேற்பே அதற்கு சாட்சி சொல்லும்.



ஊடகங்களில் தனியார் நிறுவனங்கள் கோலோச்ச ஆரம்பித்த புதிதில் அதிலிருக் கும் சூட்சுமங்கள் புரியாமல் மதிமயங்கிய நாம் இன்னும் அதன் பாதிப்பில் இருந்து விடுபடவில்லை என்பதே உண்மை. திண்ணைப்பழக்கம் முற்றாக ஒழிந்து வெளியில் மழை பெய்கிறது என்று ஊடகங்களில் சொன்ன பிறகே வெளியில் எட்டிப்பார்த்து உறுதி செய்து கொள்ளும் அளவுக்கு மக்கள் மகுடிப் பாம்பாக வீட்டுக்குள் முடங்கத் தொடங்கியதும், அதனால் ஏற்பட்ட விபரீதங்களும் கொஞ்ச நஞ்சமல்ல.

நாளிதழ்கள், தொலைக்காட்சிகள் என்று எவ்வொரு ஊடக நிறுவனத்தின் வேர்களும் ஏதாவதொரு அரசியல் புதைகுழியில் ஜனித்திருப்பது பெரும்பாலோனோர்க்குத் தெரிந்திருப்பதில்லை. சினிமாத் திரைகளில் தங்கள் தலைவர்களைத் தேடிய சமூகத்தினை காட்சி ஊடகங்கள் மூலம் சுத்துமாத்து செய்து குழம்பிப் போகச் செய்வதில் ஊடகங்களுக்கு பெரிய சிரமமிருக்கவில்லை.

இப்படி இராஜபாட்டையில் பயணித்துக் கொண்டிருந்த ஊடங்களனைத்துக்கும் இன்னல் தரும் இடியாக இறங்கியது தான் இணையம். ஆரம்பத்தில் கணிணிக் கல்வி சம்பந்தப்பட்ட விஷயமாகப் பார்க்கப்பட்ட இணையத்தின் விஸ்வரூபம் இன்று ஊடகங்களையும், அவற்றைக் கட்டிமேய்க்கும் பண முதலைகளையும் தடுமாற வைத்திருக்கிறது. இணையம் ஒவ்வொரு தனிமனிதனையும் ஒரு ஊடகக்கருவியாக்கி ஒரு புதுயுகத்தினை நம் தலைமுறைக்கு அளித்திருக்கிறது. இணையத்தின் பயன்பாடு மென்மேலும் பரவலாகும் பொழுது அரசியல் லாபத்துக்காக அதிகார வர்க்கத்துக்குக் குடைபிடிக்கும் வெகுஜன ஊடகங்கள் தானாகவே பலமிழந்து போய்விடும். இப்படி ஒரு அசுரபலத்தை சர்வசாதாரணமாக கணினியிலோ அல்லது கைபேசியிலோ வைத்திருக்கும் நாம் அதனை எப்படி பயன்படுத்துகிறோம், புற்றீசல் போல தனியார் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கையுடன் போட்டி போட்டுக் கொண்டு நித்தம் புதுப்புது அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் பெருகி வந்தாலும் இன்றும் காலியாக இருக்கும் உண்மையான மாற்று ஊடகத்துக்கான இடத்தினை நாம் நிரப்புவதற்கான சாத்தியங்கள் இருக்கிறதா என்பது போன்ற கேள்விகள் உங்கள் மண்டையைக் குடைந்தால் நன்று.




இணையம் ஒரு கட்டற்ற களம். இங்கு எந்த விதிமுறைகளும் இல்லை. ஒரு தனிநபரை, நீ இப்படித்தான் இணையத்தில் எழுத வேண்டும், குத்துவிளக்குப் புகைப்படங்கள் மட்டுமே வலையேற்ற வேண்டும் என்று இங்கு யாரையும், யாரும் கட்டுப்படுத்தவோ, அறிவுரை சொல்வதற்கோ இடமேயில்லை. அப்படி ஒரு கட்டற்ற சுதந்திரம் தான் இணையத்தின் பலம். நம்மில் இணையத்தினைப் பாவிப்பவர்களில் எத்தனை பேர் அடுத்தவர்களுக்கு இணையப்பயன்பாடு குறித்து அறிவுரை சொல்லாமல் ஒரு நாளைக் கடக்கிறோம் என்று எண்ணிப்பார்த்தால் நாம் செய்யும் தவறுகள் புரியும். தங்கள் கொள்கைகளை அடுத்தவர் மேல் வலுக்கட்டாயமாகத் திணிக்கும் மத அடிப்படைவாதிகளுக்கும் அல்லது சர்வாதிகாரிகளுக்கும், இணையத்தில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஆத்திசூடி படிப்பவர்களுக்கும் பெரிய வித்தியாசமில்லை.

(வலை விரியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார

# இராசி பலன்

**17.12.2014 –23.12.2014**

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

எவ்வளவுதான் லாபம் கிடைக்கும்னாலும் தப்புத் தண்டா வழியில் செல்ல வேண்டாம். குறிப்பாக அலுவலக விஷயங்களில். யார் யாரெல்லாம் இவ்வளவு நாளாக் குழந்தைச் செல்வத்துக்கு ஏங்கித் தவமாய்த் தவமிருந்தீங்க..? இதோ நற்செய்தி! பெண்கள் சம்பந்தமான ஆரோக்கியப் பிரச்சினை பெண்களுக்கு வந்தாலும் தற்காலிகம்தான். புத்தம்புது வேலை கிடைக்கும். பதவி உயரும். மாணவர்களின் முயற்சிகளுக்கெல்லாம் நற்பலன். நல்ல செய்திக்கு மேல் நல்ல செய்தியாக வந்துகொண்டே இருக்கும். குடும்பத்தலைவி -தலைவருக்கு சந்தோஷம் நிலவும். பிரச்னைகள் எதுவானாலும் தற்காலிகம்தான். பணம் வரும். மகிழ்ச்சி அதிகமாகும்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

சாத்தியமான விஷயங்களை முயற்சி செய்யுங்க. வெளிநாட்டுக் கனவெல்லாம் இனி நிஜம். மற்றவர்களை அனுசரித்துப் போகும் குணம் உள்ளவர் நீங்கள். மாற்றம் ஒன்றே மாறாதது! இதற்கு சந்தோஷப்பட்டு குதிக்கவும் வேண்டாம். கோபம் அல்லது வருத்தப்பட்டுப் புலம்பவும் வேண்டாம். நடுவில் காணாமல் போயிருந்த உற்சாகமும் சுறுசுறுப்பும் திரும்ப வரும். எதற்கும் கலங்க வேண்டாம். கடுகளவு பொறுமை இருந்தால் போதும். மாணவர்களுக்குப் பெரிய அளவில் வெற்றிகள் கிடைக்க இன்னும் கொஞ்ச காலம் காத்திருங்க. நிறைய உழைக்க வேண்டியிருக்கும்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

இந்த தைரியம் இருக்கே... தைரியம்... அதுதாங்க உங்களோட மூன்றாவது கை. அதை வெச்சு மேலும் மேலும் உழையுங்க பார்ப்போம். சமீபத்தில் உங்களைப் பார்த்து உங்க கீழே வேலை பார்க்கறவங்க மட்டுமில்லாம உங்களோட மேலதிகாரிகளும் நடுங்கறாங்க. இத்தனை நாள் காதல் என்ற வார்த்தைக்கு ஸ்பெல்லிங் கூடத் தெரியாமல் இருந்த உங்கள் மனதை மெல்ல அசைத்துப் பார்க்க ஒரு காதல் கரம் நீளும். தப்ப முடியாதுங்கோ! மாணவர்களுக்குக் கற்பூரம் மாதிரிப் பாடங்கள் மனசில் பதியுது. மதிப்பெண்ணும் அள்ளுவீங்க.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

கவர்ச்சி அம்சம் காரணமாக அலுவலகத்திலும் அக்கம் பக்கத்திலும் உங்கள் முக்கியத்துவம் அதிகரிக்கும். சட்டென்று யாரையும் நம்பி எந்த விஷயத்திலும் பெரிய அளவில் இறங்கிடாதீங்க. அலுவலக சம்பந்தமாக வெளிநாடு அனுப்புவாங்க. வெளுத்துக்கட்டுவீங்க. சின்னச் சின்ன நல்ல செய்திகளுக்குக்கூடக் காத்திருந்து சோர்ந்து போயிருந்த உங்களுக்கு ஆண்டவன் சந்தோஷத்துக்கு மேல் சந்தோஷதருவான். மாணவர்களுக்குச் சின்னச் சின்னதாய் வயிற்று வலி தலைவலின்னு வந்துக்கிட்டுதான் இருக்கும். படிப்பு ஒன்றுதான் இலக்காயிருக்கணும்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

மேல்படிப்பு ஆயத்தம் வெற்றி தரும். யாரையும் அதிகமாய் நம்பிப் பொறுப்பை ஒப்படைக்காதீங்க. வேலை மாற வாய்ப்பு உள்ளது. செலவுக்கு மேல் செலவு வந்து பாடாய்ப் படுத்தலாம். அதைக் கட்டுப்படுத்தும் கலையைக் கற்றுக் கொள்ளுங்கள். படிப்பைப் பொறுத்தவரை பொற்காலம்தான். குழந்தைகள் இப்போ பெரிய அளவில் ஆறுதலாய் இருப்பாங்க. புது கணவர் -மனைவிக்கு பாப்பா வருகை உண்டு. மாணவர்களே... கிடைச்சதை வைத்து மேலும் பெருமை சேருங்க. முயற்சி முக்கியம்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

அலுவலகப் பயணம் நம்ப முடியாத லாபம் அளிக்கும். புகழ் பெறக்கூடிய துறையில் நுழைய வாய்ப்பு உள்ளது. சகோதரர்களுடன் மல் யுத்தம் வேண்டாம். பொருளாதார நிலை முன்பு போல் இல்லையே என்று கவலை கொண்டவர்களின் மனதில் கடவுள் பால் வார்ப்பார். மாணவர்களுக்கு எது பற்றியும் சந்தேகமே வேண்டாம். நடப்பவை நல்லவைதான். நடத்துங்க. குடும்பத்தலைவி -தலைவருக்கு... எங்கே யாருடன் யுத்தத்துக்குத் தயாராகலாம்னுபார்க்க வேண்டாம்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

எவ்வளவுதான் லாபம் கிடைக்கும்னாலும் அவன் பேச்சை இவன் பேச்சையெல்லாம் நம்பித் தப்புத் தண்டா வழியில் செல்ல வேண்டாம். கணவர் -மனைவி கூட சண்டை போட்டே பொழுதைப் போக்கிக்கிட்டிருக்கீங்களே... உங்களுக்கு வேறு நல்ல பொழுது போக்கே கிடைக்கலையா? ஆரோக்யம் பற்றி நடுநடுங்கிக்கிட்டிருந்தீங்களே? இப்போ நிம்மயா? மாணவர்களே நீங்கள் நினைத்த காரியம் கைகூடும். புது ஜனாதிபதி மாதிரி நல்லா சிரிங்க.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

தன்னம்பிக்கை மட்டும் இல்லைன்னா உங்க கதி என்ன ஆகியிருக்கும். எனினும் இவங்களைத்தான்னு இல்லாமல் எல்லோரையும் நம்பிறீங்களே... இந்த வாரம் நீங்கள் செல்லவிருக்கும் திருமணம் அல்லது பிறந்த நாள் பார்ட்டியில் புதுப்புது நண்பர்களும் சிநேகிதிகளும் கிடைப்பார்கள். மாணவர்களுக்கு அதிர்ஷ்டம் என்கிற வார்த்தையை இப்போதைக்கு நம்ப வேண்டாம். முயற்சி இல்லைன்னால் கைகூடாது. கடுமையாய் உழைக்கணும். அலுவலகவாசிகளுக்கு நிச்சயமா சந்தோஷ செய்தி உண்டு. நீங்கள் அதிகமாக எதிர்பார்க்காமல் இருந்தால் கிடைத்தது அதிகம்னு புரிந்து கொள்வீங்க.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

கல்வி கற்பவர்களுக்கு உதவுவதற்காகப் பணம் செலவு செய்வீங்க. பயணம் வெற்றி மீது வெற்றி தரும். மனம் நிம்மதியால் நிறையும். வேறு என்ன வேண்டும் சொல்லுங்க! திருமணம் நிச்சயமாகவில்லை என்று வழிமேல் பார்வையை வைத்துக் காத்திருந்தவர்களுக்கு நேரம் வந்ததாச்சு. நல்ல வேளை வந்தாச்சு. புது வேலைக்கு ஆசைப்பட்டால் இப்போதே மாறியாக வேண்டுமா என்று யோசிங்க. அவர் பச்சை விளக்கு காண்பிச்சால் வண்டியைக் கிளப்புங்க. மாணவர்களே நீங்கள் கொஞ்சம் முயற்சி செய்தாலே நிறையப் பலன் கிடைக்கும்.

**மகரம்**

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

உங்கள் கை ஓங்கியிருப்பது உண்மைதான். அதற்காக சண்டைகளில் எத்தனை ரகங்கள் உள்ளன என்று பதம் பார்க்க வேண்டாம். குழந்தைகள் பற்றிய டென்ஷன் திடீரென்று டெலிட் ஆகும். கன்னா பின்னா விருந்துகள் காரணமாக வயிறு சின்ன அளவில் தகராறு செய்யுமே தவிர மற்ற பெரிய ஆரோக்ய பிரச்னை எதுவும் இருக்காது. காதல் அரும்பு விடும். சகோதர சகோதரிகளுக்கு நல்ல செய்தி கிடைக்கும். ஆனாலும் அதற்காக அவர்கள் பட்ட பாடு கொஞ்சமா என்ன! பொது வாழ்வில் உள்ளவர்களுக்குக் கற்களும் விழலாம். கற்கண்டும் விழலாம்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

நீங்கள் முன்பு செய்த புண்ணிய காரியங்களுக்கான இனிப்பு கனிகளை இப்போது அறுவடை செய்வீர்கள். வாழ்க்கை நிதானப் போக்குக்கு மாறும். இப்போது மனம் நெகிழ்ந்து நீங்கள் மற்ற வர்களுக்கு செய்யப்போகும் உதவிகள் பிற்காலத்தில் வட்டியும் முதலுமாக உங்களை வந்த டையப் போகின்றன. செலவு எகிறி வானைத் தொடாமல் இழுத்துப் பிடிக்க வேண்டியது உங்கள் கையில்தான் இருக்கு. டாடி-மம்மி வெளியூர் - வெளிநாடு போவாங்க. சின்ன பிரச்னை என்றாலும் டாக்டர்கிட்டே போயிடுங்க. சரியாயிடும். புது வேலைக்கு முயற்சி செய்துகிட்டே இருங்க.

**மீனம்**


**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

பிறந்த நாள் தினத்தில் புதுப்புது நண்பர்களும் சிநேகிதிகளும் கிடைப்பார்கள். மனசுக்குள் ரகசியமாக நினைத்து நினைத்து சந்தோஷப்படும்படியான சம்பவங்கள் நடக்கும். திடீரென்று லாட்டரி அடிச்ச மாதிரி பெரிய தொகை வந்து மடியில் விழ வாய்ப்பு உள்ளது. சந்தோஷத்திற்கு மனதைத் தயார் நிலையில் வெச்சுக்குங்க. படிப்புக்காக வெளியூர் அல்லது வெளிநாடு செல்ல வேண்டியிருக்கும். எதுவுமே வேளை வந்தவுடன் தானாய் நடக்கும். திருமணத்திற்குக் காத்திருக்கும் சகோதர சகோதரிகளுக்கு அழைப்பிதழ் அச்சடிக்கத் தயாராவீர்கள்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 65



இந்த மனித அவலத்தை ஒரு கட்டுரை வடிவிலே செய்தித் தாளுக்கு எழுதுவது எனக்கு வெகு இலகுவாக இருந்தது. ஆனால் மனதை உருக வைத்த அந்த அவலக் காட்சி களை நெஞ்சில் இருந்து நீக்குவது இலகுவாக இருக்கவில்லை ஏனென்றால் ,மிக மோசமான நிலையிலேயே அந்த மக்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். பச்சைப் பாலரில் நான் கண்ட நோய் அறிகுறிகள் எனக்கு கவலை அளித்தன .நாம் எந்த மக்களுக்காக போராடுகிறேமோ அவர்களில் இந்த அகதிகளும் ஒரு பகுதியே. ஆகவே இந்தப் பிரச்சினையை ஒதுக்கி விட்டு அப்பால் நகர எனக்கு இயலவில்லை. ஒரு விடுதலை இயக்கமானது.அரசியல் இராணுவ முனைகளில் நின்று போராட்டம் நடத்துவது போல , தான் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்களின் நலன்கள் மீது அக்கறை எடுக்கவும் கடமைப் பட்டிருக்கிறது. இயக்கத்தின் செலவுகளை நிர்வகிக்கும் போது நுணுக்கமாகக் கணக்குப் பார்த்துத் தான் பிரபாகரன் அவர்கள் செலவைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது எனக்குத் தெரியும்.ஆனாலும் எனக்காக 5000ரூபா சிறு தொகையை ஒதுக்கித்தர அவர் மறுக்க மாட்டார்என்பதும் எனக்குத் தெரியும். எனவே அவர் எங்களைப் பார்க்க வந்த போது.பிரச்சினையை அவரிடம் எடுத்துக் கூறினேன். இந்த ஒரு முகாமுக்காவது சில உணவுப் பொருள் களும் மருந்தும் வாங்க நிதி வழங்குமாறு கேட்டேன்.அவர் மருத்து வர் ஜெயகுலராஜா.அகதி முகாம்களுக்கு என்னோடு கூடி வந்து நே வாய்ப்பட்ட குழந்தைகளைப் பரிசோதிக்க உற்சாகமாக ஒப்புக் கொண் டார். நிதிகள் சேர்ந்தன. நன்கொடைகள் திரண்டன. வேலை பெருகியது. எங்கள் குழு தமிழ் நாடு முழுவதும் உள்ள அகதி முகாம்களைத் தரிசித் தது. இறுதியில் எமது எமது பணியை ஓர் ஒழுங்கமைப்புக்குள் கொண்டு வரத் தீர்மானித்தோம். அந்த புனர்வாழ்வுக் கழகம் என்ற பெய ரில் அறக்கொடை அமைப்பாகக் பதிவாகியது. தமிழ் நாட்டில் உள்ள ஆயிரமாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவி புரிவதே கழகத் தின் நோக்கம் ஆகியது.மருத்துவர் ஜெயகுலராஜா கழகத்தின் தீவிர தொண்டன் ஆனார்.காலம் செல்ல, நிர்வாகம்,திட்டமிடல் ,திட்ட நடை முறை ஆகியவற்றின் பொறுப்புக்கள் மற்றவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. இப்பொழுது தமிழர் தனித்து இயங்கும் அறக்கொடை அமைப்பாக வளர்ந்து விட்டது. இலங்கை வடக்கு-கிழக்கில் தங்கள் தாய கத்திலேயே வீடு வாசல் இழந்து இடம் பெயர்ந்த ஆயிரம், ஆயிரம் தமிழ் மக்களுக்கு பல வகை உதவிகளைப் புரிந்து கொண்டிருக்கிறது.

இந்தியா பல புதிர்களையும் முரண்பாடுகளையும் கொண்ட நாடு. இந்திய சமூக வாழ்க்கை தொடர்பாக ,வெளியாளரைத் திகைக்க வைக்கும் மிக வும் புதிரான முரண்பாடு என்னவென்றால், பணக்காரருக்கும் ஏழை களுக் கும் இடையேயுள்ள பாரிய ஏற்றத் தாழ்வே,இந்தியாவில் இனி இல்லை என்ற பணக்காரர் ஒரு புறம். படுமோசமான ஏழைகள் மறுபுறம். எதிரும் புதிருமான இந்தப் படு கேடான வேறுபாட்டுக்கு நடுவே பலம் மிக்க நடுத் தர வகுப்புக்கள். மிக மோசமான வறுமை பற்றிய வர்க்க ஆய்வை நான் இங்கே நடத்த வரவில்லை. இந்தியாவில் ஒப்பற்ற குபேரர் ஒரு புறமும், வறியவரில் வறியவர் மறுபுறம் உள்ள ஒரு பயங்கரச் சூழல் நிலவுகிறது என்ப தையே அடித்துக் கூற விரும்புகிறேன். இந்தியாவிலே , தமிழ் அகதிகள், நெருக்கியடித்துக் கொண்டு, மனிதா பி மானம் மறுக் கப்பட்ட நிலையில் வாழ்வது என்னை வெகுவாகப் பாதித்தது என்பது உண்மையே ஆனாலும் தமிழ் நாட்டின் வறிய நிலையும் மன தைப் பாதிப் பதே. எனது மனதில பதிந்த ஒரு சம்பவம். இன்றும் நெருடலாக வருகிறது.

**(பதிவு தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பாடகனின் ஏக்கம்



இ. இராஜேஸ்கன்னன்

ஒரு புள்ளியாகச் சுருங்கிப் போனார் பரத்தார். மரண ஊர்வலங்கள் எதுவும் இதுவரை அவரை இப்படிக் கருக்கியதில்லை. இதயத்தில் கனமேற்றியதில்லை. எத்தனை மரண ஊர்வலங்களில் பறை ஒலித்துக் கிழித்துக் கொண்டு சர்வ ஜனங்களின் காதுகளைத் திமைக்க வைத்திருக்கும் அவர் பாடிய திருவாசக வரிகள்.

தன் குரலோடு ஓங்கி ஒலித்த சோடிக் குரல் மௌனமாகிப் போன இழப்பின் வலி ஒரு புறம். தன் நண்பனின் வாழ்வின் இறுதி நாள் குறித்த ஆசையை நிறைவேற்றிட முடியாத ஏமாற்றம்- ஏக்கம்- மறுபுறம்.

காலம் ஒருவனது வாழ்வின் கனவுகளைப் படித் தூக்கிப் புரட்டிப் போட்டு விடுகின்றது? காதுகளைச் செவிடாக்கி இதயத்தின் சுவர்களை அதிர வைக்கும் "பாண்ட்" ஒலியின் கொடூரம். முகப்பிலே தாரை தாரையாக வெடித்துச் சிதறிடும் "சீன வெடிகள்". ஊர்வலத்தின் அந்த நிலை யில் சோடாப் போத்தல்கள் சுமந்து வரும் வாகனத்தின் கர்கடூர இரைச்சல். இவற்றின் நடுவே தன்னையே தனித்துக் கொண்டு நகர முடியாது முனகிச் செல்லும் அந்திய கால சேவைக்கான "வாகனம்" ஒன்று. இவை எவற்றின் பாதிப்புமின்றி உறங் கிக் கொண்டிருக்கும் முகத்தார்.

"முகத்தானுக்கு முன்னம் நான் போய்ச் சேர்ந்திருக்கலாம். அவனுக்கென்ன கவலை. அறுவானின்ரை ஆசையெல்லாம் அலங் கோலமாப் போச்சுது. ஒரு பிள்ளை தன்னிலும் அவன்ரை ஆத்துமாவை புரியாமல் வளர்ந்து துலைச்சிட்டுகள். அதை நினைக்கத்தான்..."

பரத்தாரின் மனம் நிலை கொள்ளவில்லை. தன்னுடைய நண்பனின் வாழ்வு அர்த்த மிழந்து விட்டதாக உணர்ந்து வேதனைப் பட்டுக் கொண்டார்.

"இந்த ஊரின்ரை பெரிய மனிசரெண்டு வெள்ளையுஞ் சொள்ளையுமாத் திரியிற ஒருதனெண்டாலும் கதைச்சாங்களே. எனக்குச் சுப்போட்டா கதைக்க வேண்டாம். அவன் பாவம் செத்துக் கிடக்கிற முகத்தானின்ரை விருப்பத்தை மனசிலை வைச் சாதல்...."

பரத்தாரும் முகத்தாரும் "இரட்டையர்கள்" நட்பினால் மாத்திரமன்றி பாடும் தொழிலினாலும் தான். இந்த இரட்டையர்களுக்கு இவர்களின் சொந்த ஊரில் மட்டும் தான் தொடர்புகள் என்று நினைத்து விடக் கூடாது. பல ஊர்களிலிருந்தும் அவர்களைத் தேடி வருவார்கள். தங்களுடைய வீடுகளில் நிகழும் மரணச் சடங்குகள், அந்தியேட்டிக் கிரியைகளில் பாடுவதற்கு தூர இடங்களிலிருந்து "கார்" கொண்டு வந்து இவர்களை ஏற்றிச் செல்லுமளவுக்கு மிகுந்த பிரபலஸ்தர்கள். இவர்களில் முகத்தார் தான் முதன்மைப் பாட்டுக் காரன். பரத்தார் துணைப் பாட்டுக் காரன்.

பரத்தாருக்கு பிள்ளைகளில்லை. முகத்தாரின் பிள்ளைகள் நால்வரையும் தன்னுடைய பிள்ளைகளாகத் தான் நினைத்து வாழ்ந்தார். பிள்ளைகள் பிறந்ததி லிருந்து அவர்களின் துடக்குக் கழிவு, முடியெடுப்பு, காதுகுத்து, பிறந்த நாள்கள், சாமத்தியம், கலியாணம் எண்டு எல்லாத்திலும் "பரம் மாமா" பிரசன்னமாகியிருப்பார். அப்படி ஒரு குடும்பப் பிணைப்பு .முகத்தாரின் கடைசி மகளின் திருமணத்தின் போது ஏற்பட்ட பணக் கஷ்டத்தினை போக்க பரத்தார் மனைவியின் தாலிக்கொடியை அடகு வைத்துக் கொடுக்குமளவுக்கு அவர்களின் உறவு.

பரத்தார் அந்தியகால சேவை வாகனத்தில் தனது வலது கையை பிடித்தவாறு காரின் கண்ணாடிவழியே முகத்தாரின் உடலைப் பார்த்தார். பரத்தாரின் கண்கள் உடைப்பெடுத்தன. அவர் விக்கி அழும் சத்தத்தினை "பாண்ட்" ஒலி ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

"என்ரை முகத்தான்... என்ரை முகத்தான்... என்ன மாதிரிக் கிடக்கிறான். வேட்டி சால்வை, நஷனல் எண்டு... ஒரு சங்கீத வித்துவான் மாதிரி... அவனும் சங்கீத வித்துவான் தானே. பட்டம் இல்லாட்டி என்ன..? அவனும் சங்கீத வித்துவான் தான். ஆர் மறுப்பினம்..."

வாய் விட்டே சொல்லி அழுகின்றார் பரத்தார். முகத்தாருக்குப் பாட்டென்றால் உயிர். இளமைக்காலம் முதல் இந்தியப் பாடகர்களின் பாடல்களால் ஆகர்ஷிக்கப்பட்டவர். நண்பர்கள் மத்தியில் அவர்களின் பாடல்களைப் பாடி களிப்பூட்டி வந்த அவர் பாடகரான தருணம் மிகவும் உணர்வு பூர்வமானது.

"முகத்தான் என்ரை தாய்க்கு மூண்டு நாள் தொடர்ந்து பாடினவன்ரா... என்ரை தாயைத் தன்ரை தாயெண்டு தான் நினைச்சவன். அவன் பிரேதம் போகேக்கை, தொடர்ந்து பாடிக் கொண்டு வந்தவன்டா... அது எங்களிலை அவன் வைச்ச அன்புடா... அவ்வளவு பாசம்... வாழ்நாளிலை மறவன்ரா" என்று பரத்தார் எனக்கு ஒரு முறை சொன்னது இன்றும் ஞாபகமி ருக்கிறது.

பரத்தாரின் தாய்க்கு அந்திய காலத்து பாடல்கள் பாடியதிலிருந்து தான் முகத்தார் பாடகரானார். முகத்தாருக்கு கண்களில் ஒரு செல்வாக்கு. பாடும் தருணம் தவிர்த்து எப்போதும் வாய் நிறைந்த வெற்றிலை. மாறுகரை வேட்டி நஷனலை ஒத்த அரைக்கை சேட், நெற்றியில் இடம் வலமாய் இழுக்கப் பட்ட சந்தன ரேகையின் நடுவில் மெல்லிய குங்கும ரேகை.

ஊரறிந்தவரை அவர் யாரிடமும் சங்கீதத்தை முறைப்படி கற்றவரல்ல. அது கடவுளின் கொடை என்று பலரும் கூறிக்கொள்வர். மரண ஊர்வலங்களில் முகத்தாரும் பரத்தாரும் ஓங்கி ஒலிக்கும் குரலில் மாறி மாறித் திருவாசகப் பாடல்களைப் பாடும் போது கூட இராகங்கள் பிசிறுவதில்லை.

முகத்தார் மரண வீட்டில் பாடுபவர் என்பதால் ஊரில் யாரும் நிராகரிக்கவில்லை. கோயில்களில் நடைபெறும் கிரியைகளில் கூட இவர் ஒரு ஓதுவார் தான்.

"அறுவான் என்னை விட்டிட்டுப் போறான். நான் இனி என்ன செய்யப் போறன். குரலடங்கிப் போய்ப் போறான். இனி எப்ப அவன்ரை பாட்டைக் கேக்கிறது. தான் வித்துவான் இல்லையெண்டாலும் மூண்டு பெட்டையளையும் சங்கீதத்திலை பட்டம் எடுக்க வைச்சிட்டான்.

தந்தையின் நண்பன் என்பதை விட ஒரு சித்தப்பன் ஸ்தானத்தில் நடந்தவர் பரத்தார். உள்ளூர் மேடைகளில் அவர்கள் இருவரும் பாடிய தருணங் களில் ஒருவர் மாறி ஒருவர் "ஹார்மோனியம்" மீட்டுவார்கள். மூத்த பெண்பிள்ளைகள் இரண்டு பேருக்கும் அழகான பாவாடை சட்டை போட்டு அரங்கிலே இருத்திப் பாட வைத்து அழகு பார்த்தார்கள். அப்படி அழகு பார்த்த பெண்பிள்ளைகளின் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் முகத்தாரோடு பரத்தாரும் இருந்தார்.

"மூத்த பெட்டையள் இரண்டு பேரும் உடப்பிடிப் பேசுவாளவை எண்டு நான் கனவிலையும் நினைக்கேல்லை. இப்ப அவைக்கு வசதி, புகழ் வந்திட்டுது. அந்த நேரம் அவன் பாவி செத்த வீட்டிலை அந்தியேட்டிலை பாடி வாங்கின கொஞ்ச கொஞ்ச காசிலை தான் உவேன்ர படிப்புகளை பார்த்தான். கஷ்டப்பட்டு கூலி வேலை செய்து சாப்பாடு போட்டான். உதுகள் எல்லாத்தையும் மறந்து போட்டுதுகள். தெருவிலை பாடக் கூடாதாம்... அது தகப்பன்ரை கௌரவத்தை குறைச்சுப் போடுமாம்... வெளியாக்கள் வருவினமாம் தங்களை ஒரு மாதிரி நினைப்பினமாம்... அதுகள் பழைய முறையளாம்..."

எல்லாவற்றையும் பழையது பழையது என்று நிராகரித்து விட்டு புதியதைக் கூட புத்திசாலித்தனமாக ஏற்பதாக பாசாங்கு செய்கின்ற ஒரு அரைவேக்காட்டு நிலையின் பிரதிநிதிகளாக இருக்கும் முகத்தாரின் பிள்ளைகள் குறித்த பரத்தாரின் சினம் வெளிப்பட்டது. அவமானப்பட்ட அந்தத் தருணம் நானாக இருந்தால் இந்த இடத்திலை தொடர்ந்து நின்றிருக்கமாட்டன். பரத்தார் பாவம் நண்பனின் பாசத்தில் கட்டுண்டு தலை கவிழ்ந்து நடந்து கொண்டிருந்தார்.

முகத்தாரின் உடல் காரில் ஏற்றப்பட்ட வேளை சீன வெடிகள் சிதறின. "பாண்ட்" குழுவினர் அறையத் தொடங்கினர். அந்தியகால சேவை வாகனம் மெதுவாக உருளத் தொடங்கியது. உறவுகளின் கூக்குரலின் நடுவே "தொல்லையிலும் பிறவி சூழும் தலை நீக்கி அல்லல்..." என்று பரத்தார் குரலெடுத்து கண்ணீரோடு அழுதழுது பாடத் தொடங்கினார்.

"மாமா... நிற்பாட்டுங்கோ... உது வேண்டாம்... கவலையெண்டால் அழுங்கோ. பாட வேண்டாம். "பாண்ட்" இருக்கு. பறைமேளம் கூட நாங்கள் பிடிக்கேல்லை. மரியாதையா போகட்டும். அப்பா... உள்ளுக்கை கிரியை நடக்கேக்கை பாடினீங்கள் தானே. வேணுமெண்டால் அந்தியேட்டிக்குப் பாடலாம் நிற்பாட்டுங்கோ..."

பரத்தர் இடிந்து போனார். அவமானம், ஏமாற்றம், தோல்வி. இவற்றில் எது இது...? புரியவில்லை அவருக்கு.

"பிள்ளையள் இப்ப நான் காசுக்குப் பாடவரயில்லை. கொப்பன் எனக்குச் சொல்லி வைச்சிருக்கிறான். நான் முன்னஞ் செத்தால் தான் பாடுவன் எண்டும். தான் முன்னஞ் செத்தால் நான் பாடவேணுமெண்டு நான் என்ன செய்ய..." ஓங்கி அழுது கொண்டே கேட்டார் பரத்தார்.

"நிற்பாட்டுங்கோ..."

ஒரு சொல்லில் யாவும் முடிவானது. அப்போது தலைகவிழ்ந்தவர் தான் காரின் கண்ணாடி வழியே நண்பனைப் பார்த்துப் பார்த்துக் கொண்டு நடக்கின்றார்.

இடுகாட்டின் வாயிலில் "பாண்ட்" நிசப்தமானது, சோடாப் போத்தல்கள் மூடி திறக்கப்பட்டன. கொள்ளிக் குடம் உடைத்துக் கொள்ளி வைத்தாயிற்று. வந்தவர்களும் உறவுகளும் படிப்படியாக கலைந்தனர். பிணம் சுடுபவர்கள் தயாரகின்றனர். பரத்தார் இடுகாட்டு நிழல் மண்டபத்தில் கைகூப்பியபடி தன் நண்பனை வளர்த்திருந்த சிதையை பார்த்தபடி இருக்கிறார். திருவாசக வரிகள், மிக ஒடுங்கிய ஸ்தாயில் கேட்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரவேற்றம் செய்வார். உடனேயே அவரது நட்புப் பட்டியலில் இருக்கும் எல்லோரும் அதனைப் பார்ப்பார்கள். பார்ப்பதோடு சும்மா இருக்க மாட்டார்கள். அந்தப் பதிவுக்கு லைக் போடுவார்கள். தங்களுடைய நண்பர்களுக்கும் அதனைப் பகிர்வார்கள். கூடவே 'இப்படியானவர்களுக்கு இப்படித் தான் செய்ய வேண்டும். நண்பா, நாங்களும் உன்னோடு இருக்கிறோம்' என்று உசுப்பேற்றும் வகையிலான பின்னூட்டங்களையும் அள்ளிவீசுவார்கள். இப்படியான செய்கைகள் தன்னுடைய செயல் நியாயமானதுதான் என்ற நினைப்பையும், எனக்குப் பின்னால் நிறையப்பேர் இருக்கிறார்கள் என்ற மாயையையும் பதிவிட்டவருக்கு ஏற்படுத்தி விடும். பிறகென்ன?அதே பாணியில் தன்னுடைய பழிவாங்கல் படலத்தைத் தொடர்வார். அவருடைய எதிராளி உடல், உள ரீதியாகப் பாதிப்படைந்து அவரது மானம் உலகெங்கும் விற்பனை செய்யப்படும் வரை இந்தப் பேஸ்புக் பழிவாங்கல் தொடரும். அநேகமாக எதிராளியை நேரடியாகச் சந்தித்து தமது எதிர்ப்பினை வெளிக்காட்டத் திராணியற்றவர்கள் ஒளிந்திருந்து பழிவாங்கும் ஆயுதமாக சமூக வலைத்தளங்கள் உருவாகிவருகின்றன. கிட்டத்தட்ட இது ஒருவித உளப்பாதிப்பால் ஏற்படும் விளைவுதான். தமது எதிராளி பற்றிய மனப்பதிவுகளையும், அவருக்கு ஊறு விளைவிக்கும் புகைப்படம் உள்ளிட்ட ஆதாரங்களையும் சமூக வலைத்தளங்களில் பகிர்வதன் ஊடாக அவரை ஆசைதீரப் பழிவாங்கி விட்டதான குரூர மகிழ்ச்சியில் இவர்கள் மூழ்குகிறார்கள். இந்தக் குரூரமான உளப்பாதிப்பு மேற்கத்தைய நாடுகளில் மட்டும் தான் இருப்பதாக நாம் எண்ணினோமானால் , அதை விட முட்டாள் தனம் வேறொன்றும் இருக்க முடியாது. உண்மையைச் சொல்லப்போனால் மேற்கு நாடுகளை விடவும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில்தான் சமூக வலைத்தளங்கள் ஊடான பழிவாங்கல்கள் அதிகம் பதிவாகியுள்ளன. இந்தப் பழிவாங்கல் பாலியல் ரீதியான குற்றங்களோடும் தொடர்புபட்டுள்ளன என்பது தான் அதிர்ச்சியான விடயம். இலங்கையில் ஏனைய சமூக வலைத்தளங்களை விடவும் பேஸ்புக் பாவனையே அதிகமாக இருப்பதால் பேஸ்புக் பழிவாங்கல்களே அதிகமாகப் பதிவாகியுள்ளன. அதிலும் தமிழர்பகுதிகளில் இந்தப் பேஸ்புக் சீரழிவுகள் பல குடும்பங்களின் எதிர்காலத்தையே ஆட்டங்காண வைத்துள்ளன.

### வக்கிரம்

**அவனுக்கு தனது மனைவியின் தங்கை மீது நீண்ட காலமாகவே ஒரு கண். ஆனால் அவள் அந்தக் காமுகனின் வலையில் சிக்காமல் தப்பித்தபடியே இருந்தாள். ஆரம்பத்தில் மறைமுகமாக தன் மைத்துனியை அடைய வழி தேடியவன்,போகப் போக அவளிடம் நேரடியாகவே தன் விருப்பத்தை வெளிப்படுத்தினான். அதன் பின்னரும் அவள் மசியவில்லை. ஆனாலும் காலப்போக்கில் அவளையும் தன் மனைவியாக்கியே தீருவது என்ற வெறியோடு அவன் காத்திருந்தான். ஆனால் அவனது காத்திருப்புக்கு ஆப்பு வைப்பது போல அவளுக்கு திருமணம் பேசும் முயற்சிகளில் பெற்றோர் ஈடுபட்டனர்.**

**' உனக்கு இப்போது திருமணம் செய்ய விருப்பமில்லை என்று வீட்டுக்காரரிடம் சொல். இல்லாவிட்டால் ஏதாவது மாப்பிள்ளை சரி வந்தால் நான் அதைக் குழப்புவேன்' என்று அவன் தனது மைத்துனியை மிரட்டியுள்ளான். கூடவே 'உன்னுடைய அந்தரங்கமான சில புகைப்படங்கள் என்னிடம் உள்ளன.அதை நான் உன்னுடைய பெயரில் பதிவேற்றினால், அதை எல்லோரும் பார்ப்பார்கள். பின்னர் எவனும் உன்னைத் திருமணம் செய்ய வரமாட்டா' என்றும் அவன் கூறியுள்ளான். ஆயினும் தனது அந்தரங்கமான படங்கள் எதுவும் அவனிடம் இருக்காது என்ற தைரியத்தில் மைத்துனி அவனது பேச்சைக் கணக்கில் எடுக்கவில்லை.**

**இந்த நிலையில் அவளுக்கு ஒரு சம்பந்தம் சரிவரும் நிலையை எட்டியது. அப்போதுதான் ஒருநாள் அவளுடைய பெயரிலான பேஸ்புக் கணக்கு ஒன்றில் அவளின் நிர்வாணப் புகைப்படங்கள் இருப்பதாக தகவல் கிடைத்தது. பதற்றத்துடன் அவள் அந்தப் பேஸ்புக் கணக்கைப் பார்த்தபோது. அவளுடைய முகத்தை ஆடைகள் அற்ற இன்னொரு பெண்ணின் உடலோடு பொருத்தி அதைப் பதிவேற்றி உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.**

**தனது அக்காவுக்காகவும் , குடும்ப மானத்துக்காகவும் இதுவரை அக்காவின் கணவர் பற்றிய உண்மையைச் சொல்லாமல் இருந்தது தவறென்பதை அவள் உணர்ந்தாள். உண்மையை எல்லோருக்கும் போட்டுடைத்தாள். இப்போது அவளது அக்காவின் கணவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு. விளக்கமறியலில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்.**

***

சமூக வலைத்தளங்கள் மூலமான பாலியல் பழிவாங்கல்கள் அல்லது வக்கிரச் செயற்பாடுகள் தமிழர் பகுதிகளில் எந்தளவுதூரம் அதிகரித்துவிட்டன என்பதற்கு இவையெல்லாம் சில உதாரணங்களே. இந்தக் குற்றங்களும் அதன் பின்னான சட்ட நடவடிக்கைகளும் சில பாடங்களை எமக்கு உணர்த்துகின்றன. எப்போதும் எமது அந்தரங்கமான புகைப்படங்களை எவருடனும் பகிர்தல் ஆபத்தானது. எனவே குறிப்பாகப் பெண்கள் இத்தகைய செயல்களில் இறங்குவதைத் தவிர்த்தாலே இதுபோன்ற பேஸ்புக் குற்றங்கள் நிகழ்வதைப் பெரும்பாலும் தடுக்க முடியும்.

இதைவிட காதலன் அல்லது காதலி அல்லது நெருங்கிய நண்பர்கள் என்போருக்கு எம்முடைய அன்பின் இறுக்கத்தைக் காட்டுகிறோம் என்று நினைத்துக் கொண்டு மின்னஞ்சல், பேஸ்புக் போன்றவற்றின் கடவுச்சொற்களைக் கொடுத்து விடுகிறோம். ஆனால் அந்த அன்பில் விரிசல் வரும் போது நீங்கள் வஞ்சகமில்லாமல் கொடுத்த கடவுச்சொற்களே உங்களுக்கு எதிரான பயங்கர ஆயுதமாக உருவெடுத்து விடும். எனவே உங்களுக்கான மின்னஞ்சல், சமூகவலைத்தளக் கணக்குகள் என்பவற்றின் கடவுச் சொற்களை எவருக்கும் கொடுக்காதிருங்கள்.

அப்படியும் உங்களைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் உங்கள் பெயரிலோ அல்லது வேறு பெயர்களிலோ போலியான பேஸ்புக் கணக்குகளை உருவாக்கி, உங்கள் புகைப்படங்களைத் தவறான முறையில் யாரும் பதிவேற்றினால், குடும்ப மானம் போய்விடும் என்று மூலையில் முடங்குவது எதிராளிக்கு இன்னும் உற்சாகத்தைக் கொடுத்துவிடும். எனவே உடனடியாக அது குறித்து வீட்டில் உள்ளோருக்குத் தெரியப்படுத்தி, பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்யுங்கள். இதன் மூலம் குற்றவாளியை விரைவாகக் கைது செய்து உங்களுக்கு களங்கம் ஏற்படுத்தும் புகைப்படங்களை பேஸ்புக் கணக்கில் இருந்து அகற்றவும் அந்தக் கணக்குகளை முடக்கவும் முடியும். விழிப்புணர்வும் அவதானமும், பிள்ளைகள் மீதான பெற்றோரின் கண்காணிப்புமே இத்தகைய பேஸ்புக் குற்றங்கள் பெருகாமல் தடுக்கும் வழிமுறைகள். இந்த வழிமுறைகளை இனியாவது கைக் கொள்வோமா?




(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கர்அண்ணா முக்கிய ஆள்.

அதற்காகவே எந்தநேரமும் அண்ணையுடன் திரிந்தார் சங்கர் அண்ணா.வேறு வேறு இயக்கங்கள். தமிழீழக் கனவுகளுடன் படகேறி அங்கே முழு இலங்கைக்குமானவர்களாக மாறியது போன்று எமது இயக்கத்தினுள்ளும் நடைபெறாது காத்தவர்களில் சங்கர் அண்ணா முக்கியமானவர்.

இரண்டாவதாக, தாம் பிச்சைபோன்று வழங்கும் ஆயுதம், தொடர்பாடல் வளங்களுடனேயே போராளிகள் இருக்கவேண்டும் என்ற இந்திய வல்லாதிக்க நினைப்பைப் பொய்யாக்கி,எமக்கான வளங்களை நாமே தேடுவதற்கான ஏற்பாடுகளைத் தலைவர் திட்டமிட்டபோது அதனை முழுமையாக நடைமுறைப்படுத்திய அசாத்திய ஆற்றலாளன் கேணல் சங்கர் அண்ணா.அதற்காகவே சங்கர் அண்ணா இந்த அமைப்பின் முதன்முதலானப் புலனாய்வுப்பகுதி ஒன்றைக் கட்டியமைத்தார்.

தாயகக் கடலைப் பொறுத்தவரையிலும் 83.84.85 பகுதிகளில் ஓட்டிகள் என்று அழைக்கப்படுபவர்களே விடுதலைப் புலிகளின் கடற்படகுகளைச் செலுத்துபவர்களாக இருந்தார்கள்.

இலட்சியத்தின் மீதான பற்றுதலாலும், இயக்கத்தின் மீதானவாஞ்சையாலும். குடும்பவாழ்வினுள் இருந்தபடியே இந்த உயிர் ஆபத்தான கடல்பயணங்களை ஓட்டிகள் செய்தார்கள்.ஆனால் இயக்கத்தின் வளர்ச்சியும், அதனூடு சிங்களப் பேரினவாத கடற்படையின் வளர்ச்சியும் அதிகரித்தபோது இயக்கத்துக்கென்று தனியாக ஒரு கடற்படை,ஒரு கடல் அணி உருவாக்கப்பட வேண்டிய வரலாற்று தேவை உருவானபோது சங்கர் அண்ணாவே முன்னின்று கடற்புறாவின் உருவாக்கத்துக்கு உழைத்தார்.

இயக்கத்துக்கு வருவதற்கு முன்னர் ஏற்கனவே சங்கர் அண்ணா உலகம் முழுதும் கப்பல் மாலுமியாக (இயந்திரப் பொறியாளனாக) வேலை செய்த அனுபவம் அதற்குப் பெரிதும் உதவியது.

அதனைப் போலவே விரிந்த பெருங்கடலில், வானூர்திகளின் உதவியுடனும் கடற்படையினர் மக்கள் மீது நடத்தியபடுகொலைகளுக்குப் பதிலடியாக முதலாவது கடற்கரும்புலி தாக்குதலை சங்கர் அண்ணாவே முன்னின்று நெறிப்படுத்தினார்.

சிங்களப் பேரினவாதப் படைகளின் பலத்துக்கு சவால்விடும் கட்டமைப்புகளை உருவாக்கி அதன்மூலமே எமது மக்களை காத்து கொள்ளலாம், எமது நிலத்தை காத்தும்-மீட்டும் கொள்ளலாம் என்று அனுபவத்தால் உணர்ந்ததாலேயே சங்கர் அண்ணா விமானப் படையை உருவாக்கினார்.

இந்த முயற்சிகளுக்கான அவரது பயணங்கள், தேடல்கள், தோல்விக்கு பின் வெற்றி அளிக்கும்வரை செய்த முயற்சிகள் எமக்கு என்றைக்குமான பாடங்கள். இந்த இனத்தை அளவுகடந்து நேசித்த ஒரு மனிதன் அவர்.

சங்கர் அண்ணாவுக்கான பரிசோதனைகளும், திட்டமிடல் கட்டமைப்பும், தலைவருடன் தினசரி சந்திக்கும் வேலைகள் இருந்தாலும் சங்கர் அண்ணா அதனூடாகக் கிடைக்கும் ஒரு சிறு இடைவெளிக்குள் மக்களை சந்தித்து அவர்களின் அன்றாட ஏதாவது ஒரு பிரச்சினைக்கு தீர்வு கண்டபடியேதான் இருந்தார்.

நாளைய தன் தேசம் பசுமையாக இருக்க வேண்டும் என்று கனவு கண்ட ஆயுதப் போராளி அவர். அதனால்தான் தினமும் சிறுசிறு மரக்கன்றுகளை எங்காவது நட்டுவைத்தார்.இன்று அவை கிளை பரப்பி விருட்சங்களாக நிற்கலாம். நாளை ஒரு சுதந்திர தேசம் மலரும்போது சங்கர் அண்ணாவின் நினைவாக அவை காற்றெறியும்.

நிச்சயமாக திலீபன், சங்கர் அண்ணா என்ற இந்த இருபெரும் ஆளுமைகளும் விடுதலைப் போராட்டத்தின் இருபெரும் வழிகாட்டிகளாக என்றென்றும் நிலைத்திருப்பர்.ஒவ்வொரு பாதையும் மூடப்படும்போது மற்ற ஒரு பாதையை எப்படித் திறப்பது என்றும் அதற்காக எப்படி முழுமையான அர்ப்பணத்துடன் உழைப்பது என்றும் திலீபனது வாழ்வும் சங்கர் அண்ணாவினது வாழ்வும் எப்போதும் சொல்லியபடியே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிவரின் பயணங்கள் முடிவதில்லை

- ராமகிருஷ்ணன்







இப்போதெல்லாம் புத்தகக் கடைகளில் சிறுவர்களைக் காண்பதே அபூர்வமாக இருக்கிறது. பல்வேறு புத்தகக் கடைகளுக்கும் வாடிக்கையாகப் போய் வருபவன் என்ற முறையில் புத்தகக் கடை என்பதே நடுத்தர வயதினருக்கும் முதியவர்களுக்கும் மட்டுமே ஆனது போலவே காட்சியளிக்கிறது என்ற உண்மையை இங்கு சொல்லத்தான் வேண்டும்.

விடுமுறை நாள்களில் முன்பு கல்லூரி மாணவர்கள் நிறையப் பேர் புத்தகக் கடைகளுக்குள் தென்படுவார்கள். அவர்களும் இப்போது கண்ணில் இருந்து மறைந்து வருகிறார்கள். ஒருவேளை சிறுவர்கள் பெற்றோருடன் வந்தாலும் நேரடியாக ஆங்கிலக் கதைப் புத்தக வரிசைக்குப் போய் விடுகிறார்கள். இவர்கள் பேச மட்டுமே தமிழ் தெரிந்த சிறுவர்கள். எழுதுவதோ, வாசிப்பதோ இயலாது. தமிழ் பாடத்தைக் கூட ஆங்கிலத்தில் எழுதி வைத்து வாசிக்கக் கூடியவர்கள்.

ஏன் இவர்கள் புத்தகங்களை இப்படி வேண்டாதப் பொருளாக நினைக்கிறார்கள்?

நாவல், கட்டுரை, கவிதை என எவ்வளவு முக்கியமான நூல் தமிழில் வெளியானாலும் அதைப் பற்றி தொலைக் காட்சிகள் கண்டுகொள்ள ஏன் மறுக்கின் றன? இதே தமிழ்த் தொலைக்காட்சிகள் தான் ஆங்கிலத்தில் சேத்தன் பகத் புத்தகம் வெளியிடப்படுவதற்கு முன்பு இருந்து இன்றுவரைஅவரது நாவல் குறித்துத் தொடர்ந்து தகவல்களைத் தந்து கொண்டே இருக்கிறார்கள். இதிலும் தமிழ் எழுத்தாளன் தீண்டத் தக்காதவன்தானா?

புத்தகக் கடைகளுக்குப் பெற்றோர் களே போவதில்லை. பிறகு எப்படிப் பிள்ளைகளை அழைத்துப் போவார்கள் எனக் கேட்டார் எனது நண்பர் ஒருவர். தனியாகப் பிள்ளைகள் சினிமா தியேட்டருக்கும், கடற்கரைகும் அழைத் துப் போகிறார்களே, அப்படிப் போகும் வழியில் புத்தகக் கடைகளும் இருக்கத் தானே செய்கின்றன. அங்கே ஏன் போக விரும்புவதில்லை எனக் கேட்டேன்.

இணையத்தில் இப்போதைய தலைமுறையினர் படித்துவிடுவார்கள் வாங்கிவிடுவார்கள் எனச் சமாதானம் சொன்னார் நண்பர். அது பொய். 10 சதவீதம் பேர் கூடப் புத்தகக் கடைகளுக்குப் போவது இல்லை என்பதே உண்மை. காரணம், மாணவனுக்குப் பாடப் புத்தகங்களுக்கு வெளியே எந்தப் புத்தகத்தையும் கல்வி நிலையங்கள் அறிமுகப்படுத்துவது இல்லை. குறைந்தபட்சம் வாரம் ஒரு வகுப்பறையை ஆசிரியரே அழைத்துச் சென்று சாலையோரப் புத்தகக் கடைகளில் கிடைக்கும் மலிவு விலைப் புத்தகங்களையாவது வாங்கலாம்தானே.

பள்ளியில் நடைபெறும் போட்டிகளில் பரிசுப் பெற்ற மாணவர்களுக்குப் புத்தகங்கள் அளிப்பது பொதுவழக்கம். ஆனால், அப்படித் தரப்படும் புத்தகங் கள் தரமானதாகவோ, மாணவனுக்குப் பயனுள்ளதாகவே இருப்பதே இல்லை. ஒரு பள்ளியில் மாணவர்கள் அத்தனை பேருக்கும் பள்ளி முதல்வர் எழுதிய கட்டுரைப் புத்தகத்தைப் பரிசாகத் தந்திருந்தார்கள். அந்த மாணவர்கள் நிகழ்ச்சி முடிந்து வீடு திரும்பும்போது, பள்ளி பேருந்தில் இருந்தபடியே தங்களின் பரிசுப் புத்தகத்தைச் சாலையில் வீசி எறிந்து போவதைக் கண்டேன்.

விழாவில் கலந்து கொண்ட எனக்குப் பரிசாக, கணிதத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்குவது எப்படி? என்ற புத்தகத்தைக் கொடுத்தார்கள். இதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? இப்படி ஒரு புத்தகத்தை எனக்குக் கொடுக்கத் தேர்வு செய்த அதிபுத்திசாலி யாராக இருக்கும்? இது போன்ற அபத்தங்கள் பெரும்பான்மையான பாடசாலைகளில் தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கின்றன.

யோகா வகுப்பு, இசை வகுப்பு, ஓவிய வகுப்பு போல... வாரம் ஒன்றோ, இரண்டோ வகுப்புகள் புத்தக அறிமுகத் துக்காகப் பள்ளி தோறும் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் வாசிப்பு என்பது மாணவர் மத்தியில் பரவலாக அறிமு கமாகும்.

என் பள்ளி நாட்களில் வகுப்பு முடிந்து வீடு திரும்பும் வழியிலுள்ள சாலையோரப் புத்தகக் கடைக்குப் போய் நின்றுகொண்டு அம்புலி மாமா, கண்ணன், காமிக்ஸ் புத்தகங்கள் கிடக்கிறதா எனத் தேடிக் கொண்டிருப்பேன். சில சமயம் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களை வாங்கிப் போய் வாசிப்பேன்.

சிறுவயதில் வாசித்து ரசித்த புத்தகங்களில் ஒருசிலதான் இப்போது மறுபடி படிக்கும்போதும் சந்தோஷம் அளிக்கின்றன. அப்படிச் சிறுவயதில் இருந்தே என்னை வசீகரித்த ஒரு புத்தகம் ஜோனதன் ஸ்விப்ட் (Jonatan SWift ) எழுதிய கலிவர்ஸ் டிராவல்ஸ் (Gullivers Travels). 1726 இல் வெளியான நாவல் இது.

முதலில் இதன் சுருக்கப்பட்ட பதிப்பை 50 ரூபா கொடுத்து, பழைய புத்தகக் கடையில் வாங்கிப் படித்தேன். பின்பு நூலகத்தில் இருந்து இதன் முழுமையான பதிப்பை எடுத்து வந்து படித்தேன். சமீபத்தில் இதன் தமிழாக்கம் கலிவரின் பயணங்கள் என்ற பெயரில், யூமா வாசுகியின் மொழியாக்கத்தில் வெளியாகி உள்ளது. அதையும் வாங்கி வாசித்தேன். கலிவர் என் பதின்வயதிலிருந்து கூடவே வளர்ந்து கொண்டு வருகிறார்.

கடற்பயணத்தில் அதிக ஆர்வம் கொண்ட மருத்துவரான கலிவர், தென் கடலில் ஒரு பயணம் மேற்கொள்கிறார். எதிர்பாராமல் புயலில் சிக்கி கப்பல் கவிழ்ந்துவிடவே, கடலில் சிக்கித் தவித்துக் கரை ஒதுங்குகிறார். கண் விழித்துப் பார்த்தபோது, தன்னைத் தரையோடு பிணைத்துக் கட்டிப் போட்டிருப்பதை அறிகிறார். அவரைக் கட்டிப் போட்டிருந்தவர்கள் கட்டை விரல் உயரம் உள்ள குள்ள மனிதர்களான லில்லிபுட்டீன்ஸ். அவர்கள் கலிவருக்கு உணவு அளிக்கிறார்கள். பாதுகாப்பாக அரண்மனைக்குக் கொண்டு போய், அரசரிடம் ஒப்படைக்கிறார்கள்.

பிளெபஸ்கியூடியன்ஸ் என்ற தீவை லில்லிபுட் தேசம் வெற்றி கொள்ளக் கலிவர் உதவுகிறார். ஆனால், அந்தத் தீவை லில்லிபுட்டோடு இணைக்க முயற்சிப்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். இதனால் துரோகியாக அறிவிக்கபட்டுத் தண்டனை பெறுகிறார். அங்கிருந்து தப்பிக்க கலிவர் எப்படி வேறு வேறு தீவுகளை நோக்கிப் பயணங்களை மேற்கொள்கிறார்... என்ற கதையை அங்கதச் சுவையோடு சுவாரஸ்யமாகச் சொல்கிறார் ஸ்விப்ட்.

1700-களில் கடற்பயணங்களைப் பற்றி மிகையான கற்பனையுடன் நிறையப் புத்தகங்கள் வெளியாகிப் பரவலாக வாசிக்கப்பட்டு வந்தன. அதைக் கேலி செய்யும் விதமாகவே இந்த நூலை ஸ்விப்ட் எழுதினார். இன்று உலகெங்கும் நன்கு அறியப்பட்ட இரண்டு சொற்கள் இந்த நாவலில்தான் முதன்முதலில் இடம்பெற்றன. ஒன்று லில்லிபுட் (Lilliput), மற்றொன்று யாகூ (yahoo).

நான்கு முறை திரைப்படமாகவும் தொலைக்காட்சி நாடகமாகவும் இந்த நாவல் தயாரிக்கப்பட்டுள்ளது. குள்ள மனிதர்கள் என்றாலே கலிவரின் யாத்திரை என்று கூறுமளவுக்கு இந்த நூல் உலக இலக்கியத்தில் தனி இடம் பிடித்திருக்கிறது.

தோற்றத்தில் குழந்தைகள் கதையைப் போலவே தெரியும் இந்த நாவலின் அடித்தளம்... சமூகம் எப்படித் தனிமனிதனை நடத்துகிறது? அதிகாரம் எவ்வாறு ஒடுக்குகிறது? வேறு வேறு சமூகங்களின் பண்பாட்டு வாழ்க்கை எப்படியிருக்கிறது? எது நாகரீகம்... எது அநாகரீகம்? தனிமனிதன் சமூகத்தோடு எந்த நிலையில் முரண்படுகிறான்... என ஆழமான தேடுதலை முன்வைத்து எழுதப்பட்டுள்ள அருமையான நாவல் இது. ஆகவே புனைவு பிரதேசத்துக்குள் பயணம் செய்ய விரும்புகிறவர்கள், அவசியம் இந்தப் புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

இன்று கலிவரின் பயணம் கதையை வாசிக்கும்போது பல்தேசிய நிறுவனங்களின் செயற்பாடுகள் கண்முன்னே வந்து வந்து போகின்றன. இப்படியான வாசிப்பையும் சாத்தியமாக்குவதே கலிவரின் வெற்றி என்பேன்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குளவி கொட்டிவிட்டால்...


டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்


என்ன மரங்களையும் ஆகாயத்தையும் பார்த்துக் கொண்டு வாறியள். விழுந்தால் போச்சு. சிகிரியா பார்க்க வேண்டும். எவ்வளவு காலமா ஆசைப்பட்டு வந்திட்டு இப்படி ஏமாந்திடாதேங்கோ. மனைவி திட்டாத குறையாகச் சொன்னாள்..

அவள் சொன்னதைக் கேட்டதும் பழைய நினைவுகளில் மிதக்கத் தொடங்கியது அவரது மனசு. அந்தக் காலத்திலை பல்கலைக்கழகத்திலிருந்து சுற்றுலா வந்தபோது நேரம் பிந்திவிட்டது. மாலை 4 மணி. இனி ஏறினால் வர இராப்பட்டுப் போகும் என்று சொல்லி ஏறவிடவில்லை. பின் ஒரு முறை வந்தபோதும் கடும் மழை பிடித்துக்கொண்டது. அன்றும் ஏறமுடியவில்லை. இனியும் விட்டால் வயசு போயிடும் ஏறமுடியாது என்ற ஏக்கத்தில் இப்பொழுது வந்திருக்கிறார்.

இன்று காலை நேரம். நல்ல சுவாத்தியம். வெயிலும் ஏறவில்லை. வாய்ச்சுப் போட்டுது என்று பார்த்தால் காலன் பாசக் கயிற்றை நீட்டுறானே எனக் கதிகலங்கினார்

வேறொன்றும் இல்லை. ஆங்காங்கே ரீங்காரச் சத்தம். குளவி எங்கே சுத்துது் என்று விடுப்புப் பார்த்துக் கொண்டே வந்ததில்தான் ஏச்சு வாங்க நேர்ந்தது.

குளவிகள் சிகிரிய மலையில்தான் கொட்டும் என்றில்லை. வீட்டுக் கூரைகளிலும், மரங்களிலும் கூடு கட்டியிருப்பவை உங்களிலும் கை வைக்கலாம். தேனீக்களும் கொட்டுவது உண்டு. அதைத் தவிர தெள்ளு, நுளம்பு, மூட்டைப்பூச்சி போன்ற பூச்சிக் கடிகளுக்கும் ஒருவர் ஆளாகலாம்.

குளவி, தேனீ போன்றவை தமது கூரினால்/கொடுக்கினால் (Stinger) குத்துகின்றன.

ஆனால் ஏனைய பூச்சிகள் வாயினால் கடிக்கின்றன. நுளம்பும் கொட்டுகிறதாயினும் நாம் கடிப்பதாகவே சொல்லிப் பழகிவிட்டோம்.

### குளவி - தேனீ

குளவி, தேனீ போன்றவை கொட்டியதும் அந்த இடத்தில் வலியும் சிறிய வீக்கமும் தோன்றும். வலி என்பது பொதுவாக எரிவது போன்ற வேதனையாக இருக்கலாம். தோலில் தடித்தது போன்ற வீக்கம் ஏற்படும். அது சற்றுச் செம்மை படர்ந்த நிறத்தில் இருக்கும். வீக்கம் சுமார் 1 செ.மீ. அளவானதாக இருக்கலாம். அதைத் தவிர வேறு எந்தப் பாதிப்பும் பெரும்பாலானோரில் இருக்காது. ஆயினும் சிலரில் அவை ஒவ்வாமை அறிகுறிகளை ஏற்படுத்தும். ஒரு சிலரில் அந்த அறிகுறிகள் தீவிரமாகவும் இருக்கலாம்.

அவை குத்திய கூர் சருமத்தில் இருப்பது தென்பட்டால் அதை விரலாலோ அல்லது இடுங்கிகளாலோ பிடுங்கி எடுக்க முனையாதீர்கள். ஏனெனில் பிடுங்க முனையும் போது அது அமுக்கப்பட்டு அதிலிருந்து மேலும் நஞ்சு சருமத்தில் பாய்ந்துவிடும்.

அப்படியானால் எதுவும் செய்யாது அப்படியே விடுவதா? இல்லை. எதுவும் செய்யாது விட்டாலும் நஞ்சு ஊற வாய்ப்பு உள்ளது. எனவே சுரண்டி எடுப்பதே உசிதமானது. பிளேட், கத்திக் கூர், கிறடிட் காட் போன்ற எது கிடக்கிறதோ அதைப் பயன்படுத்திச் சுரண்டி எடுங்கள். காலம் தாமதம் செய்யாது அகற்ற வேண்டும்.

மிக அரிதாக அவை கொட்டிய இடத்தில் பெரிய வீக்கம் தோன்றலாம். நேரம் செல்லச் செல்ல வீக்கம் அதிகரிக்கக் கூடும். கொட்டுப்பட்ட கை அல்லது கால் முழுவதும் அது பரவுவதுண்டு. இவை தானே மறைந்துவிடும். இருந்த போதும் சிலவேளை அவை கொப்புளங்கள் போலாகி உடைப்பதும் உண்டு. இவ்வாறு ஏற்படுவதற்குக் காரணம் கொட் டிய நஞ்சில் உள்ள பொருள்களுக்கு ஒவ் வாமை ஏற்படுவதாலாகும்.

இத்தகைய வீக்கங்களால் பெரிய ஆபத்து ஏற்படாது. இருந்தபோதும் சுவாசக் குழாயில் வீக்கம் ஏற்படுமாயின் மூச்சுத் திணறல் ஏற்படும். அது ஆபத்தானது உடனடியாக அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும்

### பூச்சிக் கடி

பூச்சிக்கடி என்று சொன்னபோதிலும் பெரும்பாலோனோர் அவை கடிப்பதைக் காண முடிவதில்லை. ஆயினும் திடீரென வலி தோன்றுவதே பூச்சிக் கடியாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும். ஆயினும் அவற்றின் உமிழ்நீரினால் சருமத்தில் சில மாற்றங்கள் தோன்றும்.

முதலில் அரிப்பு எரிவு போன்ற அறிகுறிகள் தோன்றும். அதைத் தொடர்ந்து சருமத்தில் சிறிய தடிப்பு அல்லது வீக்கம் தோன்றும். வீக்கம் தோன்ற சற்று காலதாமதமாகலாம். சிலவேளைகளில் 24மணி நேர தாமத்திலும் வீக்கம் தோன்றலாம். வீக்கத்தைச் சுற்றி சற்று செந்நிறம் பரவுவதுண்டு. இந்த வீக்கம் மறைவதற்குப் பல நாள்கள் எடுக்கக் கூடும்.

பூச்சி கடித்த இடத்தில் வீக்கத்துக்குப் பதிலாக சிறிய நீர்க் கொப்புளங்கள் தோன்றுவதும் உண்டு. இவை மிகுந்த அரிப்பைக் கொடுக்கும். இவை ஓரிரு மணி நேரத்தில் உடைந்துபோக அந்த இடத்தில் சருமம் தடித்து சிறிய வீக்கம் ஏற்படக் கூடும். இவையும் மறையப் பல நாள்கள் எடுக்கலாம். இருந்தபோதும் பூச்சிக்கடிகளால் ஆபத்தான பாதிப்புகள் ஏற்படுவதில்லை

### உடலளாவிய ஒவ்வாமை

குளவி அல்லது தேனீ கொட்டிய நச்சுப் பொருளானது உடலின் நோயெதிர்ப்புத் தொகுதியைத் தூண்டி ஒவ்வாமையை ஏற்படுத்தி, கடுமையான உடலளாவிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம். அதாவது கடித்த இடத்தில் மட்டும் அரிப்பு தடிப்பு என்றில்லாமல் உடலின் ஏனைய இடங்களுக்கும் பரவலாம்.

அது முகத்துக்கும் பரவுவது உண்டு. உதடுகளும் நாக்கும் தடித்து வீங்கலாம். தொண்டை சுவாசக் குழாய்களுக்கும் இது பரவுவதாலேயே மூச்சுத் திணறல் ஏற்படுவதுண்டு.

சிலவேளைகளில் ஆஸ்மா போன்று இழுப்பும் வரக் கூடும்.

ஒவ்வாமை உணவுத் தொகுதியைத் தாக்குமேயானால் வயிற்று வலி ஏற்படும். ஓங்காளம் வாந்தி போன்றவையும் தொடரலாம்.

குருதிக் குழாய்களை ஒவ்வாமை தாக்குமேயாயின் அவை திடீரென விரிவடையும். அதனால் சருமம் செம்மை நிறமாகலாம். இருதயத் துடிப்பு வேகமாகும். இரத்த அழுத்தம் வீழ்ச்சியடையும். இதன் தொடர்ச்சியாகத் தலைச்சுற்று, மயக்கம் போன்றவையும் தொடரலாம்.

அவ்வாறு மயக்கம், மூச்சுத் திணறல் போன்ற கடுமையான அறிகுறிகளுடன் கூடிய உடலளாவிய ஒவ்வாமை ஆபத்தானது. உடனடி மருத்துவ உதவி தேவைப்படும்.

ஒன்றில்லாது பல தேனீக்களோ குளவிகளோ கொட்டினால் விளைவு மோசமாக இருக்கும். இதற்குக் காரணம் அதிகளவு நச்சு உடலில் சேருவதாலேயே ஆகும். ஒவ்வாமை விளைவாக அது இருக்காது.

சிகிரியாவில் பல குளவிகள் ஒரேயடியாகக் கொட்டுவதாலேயே பிரச்சினை பலருக்கு ஏற்படுகிறது. குளவிகள் கொட்டிய களோபரத்தால் எற்படும் பயப்பீதியும் பலரை மருத்துவமனைக்கு விரட்டியிருக்கலாம்.

### சிகிச்சை

தேனீ அல்லது குளவி கொட்டியிருந்தால் அதன் கூரை சுரண்டி எடுப்பது பற்றி ஏற்கனவே கூறியிருந்தேன். பிடுங்கி எடுக்க முனைய வேண்டாம்.

கடித்த இடத்தில் வீங்கியிருந்தால் மருத்துவ ஆலோசனையுடன் ஒவ்வாமைக்கு எதிரான மாத்திரை போட நேரும். மிகக் கடுமையான வீக்கம் எனில் ஸ்டிரொயிட் மாத்திரைகள் தேவைப்படலாம். வீக்கம் அதிகமெனில் ஐஸ் வைப்பது உதவும்.

வலி கடுமையாக இருந்தால் பரசிட்டமோல் மாத்திரை பருகுங்கள்

குரொடமின் அல்லது ஹைறரோகோட்டிசோன் கிறீம் வகைகள் சரும வீக்கம் குறையாவிடில் உதவும். அரிப்பு இருந்தாலும் அதைக் குறைக்க மேலே கூறிய கிறீம் வகைகள் உதவும். கடுமையாக அரித்தாலும் நகங்களால் சொறியவோ கூரான பொருள்களால் பிராண்டவோ வேண்டாம். ஏனெனில் அப்படிச் செய்தால் அந்த இடத்தில் கிருமி தொற்றிச் சீழ் பிடித்துவிடும்.

### தடுப்பது எப்படி?

சிகிரியா போன்ற இடங்களுக்கு மட்டுமின்றி குளவிகள் அதிகம் இருக்கும் காட்டுப் பிரதேசங்கள், மரச் சோலைகள் உள்ள இடங்களுக்கு சுற்றுலாவோ அல்லது வேறு தேவைகளுக்கோ போகும் போது அவதானிக்க வேண்டியவை எவை?

அவை உங்கள் பால் கவரப்படுவதைத் தடுக்க வேண்டும். எவ்வாறு?

கடுமையான வர்ணமுள்ள ஆடைகள் அணிவதைத் தவிருங்கள்.

கடுமையான மணமுள்ள வாசனைத் திரவியங்கள் உபயோகிக்கக் கூடாது.

அதேபோல கடும் மணமுள்ள சம்பூக்கள் போட்டுத் தலை கழுவிய பின்னர் அந்த இடங்களுக்குச் செல்லாதீர்கள்.

அவையுள்ள இடங்களில் வேலை செய்யும் போது உங்கள் உடலை முழுமையாக மூடியிருங்கள். தொப்பி, நீண்ட கைகளைக் கொண்ட மேலுடை, கால்களை மூடுமாறான உடைகள், சப்பாத்து என்பன உகந்தவை.

பழங்களைப் பொறுக்குவது, பழங்களைப் பறிப்பது போன்ற செய்கைகள் அவர்களை உசாராக்கிவிடும்.

திறந்த பாத்திரங்களில் வைத்து பழச் சாறுகளையோ, மணமுள்ள பானங்களையோ அருந்துவதைத் தவிருங்கள். அவற்றால் கவரப்பட்டு பறந்தோடி வரும் அவை உங்களைக் கடிக்கலாம். வாயினுள்ளும் புகுந்து கடித்துவிடக் கூடும். உள்ளி சாப்பிட்டால் அவை அணுகாது என்ற நம்பிக்கைக்கு உத்தரவாதம் கிடையாது.

அதேபோல வாசனையுள்ள உணவுகளை உண்ணும்போதும் அவதானமாக இருக்க வேண்டும். சாப்பிட்ட கைகளில் உணவின் மணம் முழுமையாக நீங்குமாறு நன்றாகக் கழுவுங்கள்.

குளவிக் கூடுகளை நீங்களாக அழிக்க முனையாதீர்கள். அனுபவம் உள்ளவர்களை உதவிக்கு அழையுங்கள்.



## கற்றுக் கொள்ள மறுத்தல்

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கின்றனர். அரசின் நில ஆக்கிரமிப்பு, காணாமல் போகச் செய்தல் போன்ற அக்கிரமங்களுக்கெதிராக இளைஞர்கள் குரல் எழுப்பியதோடு நின்றுவிடாமல், பிரகடனங்களையும் இதன்போது நிறைவேற்றியிருக்கின்றனர். இந்த நிகழ்வில் வடமாகாண முதல்வரும் கலந்து கொண்டு அடக்குமுறைக்கு எதிராக அணி திரளுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

இதே தினத்தில் வேறொரு சம்பவமும் யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்திருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு கட்சி நடவடிக்கைக்காக வந்த லலித் மற்றும் குகன் ஆகியோர் காணாமல் போன வழக்கு அன்றைக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. ஏற்கனவே இந்த வழக்கில் முன்னிலையாகுமாறு தகவல் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, யாழ். இராணுவத்தளபதி ஆகியோருக்கு நீதிமன்றால் அழைப்பாணை அனுப்பட்டிருந்தது. ஆனால் இவர்கள் எவருமே அன்றைக்கு நீதிமன்றில் பிரசன்னமாகியிருக்கவில்லை. இதுவே சாதாரண நபர்களாக இருந்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருக்கும். ஆனால் அமைச்சரும், இராணுவத்தளபதியும் நாட்டின் உயர் மக்கள் என்பதாலோ என்னவோ நீதிமன்றத்துக்கு ஏதோ சாட்டுச் சொல்லி, மன்றில்பிரசன்னமாவதில் இருந்து அன்றைக்குத் தப்பித்துக் கொண்டுள்ளனர். மனித உரிமைகள் தினத்தில் , சட்டத்துக்கு மதிப்பளிக்கும் பண்பில் இருந்தும் அரசு வழுவியிருக்கிறது என்பதையே இந்தச் சம்பவம் உணர்த்துகின்றது.

எனவே இலங்கையின் அடக்குமுறையாளர்கள் இன்னும் வரலாற்றில் இருந்து பாடங்களை கற்றுக்கொள்ளவில்லை போலும். எங்கெல்லாம் அடக்குமுறை வெடிக்கிறதோ அங்கெல்லாம் போராட்டம் வெடிப்பதும் விடுதலை கிடைப்பது தான் உலக நியதி. அந்த நியதி இலங்கையில் சாத்தியமாவதற்கு தாமதமானாலும் என்றோ ஒருநாள் நிதர்சனமாவது மட்டும் உண்மை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாலிபர், வர்த்தகர், நிறைவேற்றதிகாரி, வனிதையர்

# அனைவரின் BUDGET இற்கும் சரிவர பொருந்தும் இடம்...

பர்மிட் உடையோர், தனி இறக்குமதியாளர் மற்றும் பதிவு செய்த அல்லது பதிவு செய்யப்படாத வாகனங்களை கொள்வனவு செய்பவர்களுக்கான லீசிங்

- குறைந்த வட்டி
- குறைந்த தவணைக்கட்டணம்
- குறைந்த ஆவணங்கள்
- குறைந்த காலம்

ரு. 2,131* (மாத்திரம்) பதிவுசெய்யாத ரு. 100,000 த்திற்கு

ரு. 2,179* (மாத்திரம்) பதிவுசெய்த ரு. 100,000 த்திற்கு

www.splendor.lk

ரூபா 2 மில்லியன் பெறுமதியான இலவசமான ஆயுள் காப்புறுதி மற்றும் HNB அஷுவரன்ஸ் இடமிருந்து போட்டி தன்மையான மோட்டார் வாகன காப்புறுதி உட்பட மேலும் பல அனுகூலங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்படும்

HNB லீஸிங்

பலதரப்பட்ட சேவைகளின் ஓர் அங்கம்

இன்றே அழையுங்கள் 011 2 660 330 -1
சவீரு - 071 683 9502 லக்மால் - 077 295 8128
ரொஷான் - 072 425 1020

The Banker Bank of the Year 2013 Sri Lanka

பிச் ரேட்டிங் AA-(lka)
Hatton National Bank PLC - PQ 82

HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

# தற்போது சம்பத் வங்கியிடமிருந்து உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிகூடிய அடகுத்தொகை..!

## கெரட் 24 ற்கு 31,400/-*

## கெரட் 22 ற்கு 28,800/-*

மாதாந்தம் 1%* குறைந்த வட்டி வீதமே அறவிடப்படும்!

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

சம்பத் ரன்சவிய அடகுச் சேவை

நாடு முழுவதிலுமுள்ள சம்பத் வங்கி கிளைகளில் தவணை முறையில் செலுத்தமுடியும்.

சம்பத் வங்கி

எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings AA-(lka) 0112 30 30 50 www.sampath.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# பொறியியற்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# களனி சக்தி வீட்டு மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி

வீட்டு மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கை நெறியினை களனி கேபிள்ஸின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியற்பீடம் தமிழ் மொழியில் நடாத்த திட்டமிட்டுள்ளது. இக்கற்கை நெறியின் பிரதான நோக்கம் வீட்டு மின்னிணைப்பு செயல்முறை தொடர்பான தத்துவ விளக்கங்களை வழங்குவது. எனவே மின்னியல் தொழில்நுட்பத் துறையில் முன்னனுபவம் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இக்கற்கைநெறிக்கு 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

காலம் : ஒரு வருடம் (பகுதிநேரம்: மாதத்தின் முதலாவது சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்)
தெரிவு : நேர்முகப்பரீட்சைமூலம்
இடம் : பொறியியற்பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி

மேற்படி கற்கைநெறியினை பயில்வதற்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 31-12-2014 வரை பீடாதிபதி, பொறியியல் பீடத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும். பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரக் கோவையினை விண்ணப்ப முடிவு திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் அல்லது நேரில் ஒப்படைக்க முடியும் (சுயவிபரக் கோவையில் வீட்டு மின்னிணைப் புதுறையில் தொழில் செய்த சேவைக்காலம், சேவை விபரம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்). அனுப்பவேண்டிய முகவரி:

ஒருங்கிணைப்பாளர்
"வீட்டு மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி"
பொறியியற்பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வீட்டு மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி" எனக்குறிப்பிடுதல் வேண்டும். தெளிவற்ற மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்கு பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்    பதிவாளர்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 டிசெம்பர் 17ஆம் திகதி வெளியிடப்பட்டது.